விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 14 வியாழக்கிழமை (29.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 010

## ஒரு கிலோ கஞ்சாவுடன் இளைஞன் கைது

(கரணவாய்)

நெல்லியடியில் இருந்து மன்னாருக்கு கடத்தப்படவிருந்த ஒரு கிலோக்கிராம் கேரளக் கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.பி.ர.பிரியந்த தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை மாலை கஞ்சா கடத்தப்படுவதாக நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற

24-ம் பக்கம் பார்க்க....

## மாவா பாக்குடன் நபரொருவர் கைது

(மல்லாவி)

வவுனியா -மன்னார் வீதியில் திடீர் வீதிப் பரிசோதனையில் ஈடுபட்ட வவுனியா பொலிஸார் மாவா எனப்படும் போதைப்பாக்குடன் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

24-ம் பக்கம் பார்க்க....

# இல்லையென்றால் எதற்காக நீங்கள்?

## அரசியலமைப்பு வழிகாட்டல் குழுவிலிருந்து சம்பந்தன், சுமந்திரன் விலக வேண்டும் – சுரேஸ்



(யாழ்ப்பாணம்)

சமஷ்டித் தீர்வு இல்லை. வடக்கு கிழக்கு இணைப்பு இல்லை. பௌத்தத்திற்கு முதலிடம் என அரசியல் சாசனத்தில் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள நிலையில் அரசியலமைப்பு வழிகாட்டல் குழுவில் இருந்து இரா.சம்பந்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் உடனடியாக வெளியேற வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

(04-ம் பக்.)

## மக்கள் சேவையை திறம்பட செய்வோம்



(யாழ்ப்பாணம்)

நாட்டில் உள்ள ஏனைய மாகாண சபைகளை விட வடக்கு மாகாண

23-ம் பக்கம் பார்க்க....

## இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் தும்பளை கிழக்கினை சொந்த இடமாகவும் உரும்பிராய் மேற்கினை வசிப்பிடமாகவும் கொண்ட ராஜ்குமார் அஜித்குமார் (வயது-19) என்ற இளைஞரே மரணமானவராவார்.

23-ம் பக்கம் பார்க்க....

## வடக்கு சபையில் நிறைவேற்றப்பட்ட 337 பிரேரணைகளுக்கும் இதுவரை நடந்தது என்ன?

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்ட 337 பிரேரணைகளுக்கும் என்ன நடைபெற்றது என்பது தொடர்பான மீளாய்வு செய்யப்படல் வேண்டும் என வலியுறுத்தியுள்ள வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், பிரேரணைகளை நிறைவேற்றி விட்டு அவற்றை நடைமுறைப்படுத்தாமல் இருப்பது என்பது சபையை அவமதிக்கும் செயலாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதே போன்று ஏனைய சில உறுப்பினர்களும் இது தொடர்பில்

23-ம் பக்கம் பார்க்க....

## உலகின் வீரம் மிகு தலைவர்களில் பிரபாகரனே முதன்மையானவர்!

### இராஜாங்க அமைச்சர் விஜயகலா புகழாரம்



(புரந்தன்)

உலகத்தின் வீரமிகு தலைவர்களில் முதன்மையானவர் பிரபாகரனே என சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரி

23-ம் பக்கம் பார்க்க....



## வடக்குசபை – அதிகாரிகள் இடையே புரிந்துணர்வு இல்லை

### அபிவிருத்தி பாதிப்படைவதாக தவராசா விசனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைக்கும் வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அதிகாரிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு இல்லை. இதனால் தான் பல அபிவிருத்தி திட்டங்கள் காலம் தாழ்த்தப்படுகின்றன என வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா விசனம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் இந்த வருடத்திற்கான இறுதி அமர்வு நேற்றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

23-ம் பக்கம் பார்க்க....

## காலத்தின் தேவையாக "எழுக தமிழ்" எழுச்சி

### வழி அதுவாயின் போராடத் தயார்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களது இனப்பிரச்சினைக்கான தீர்வு நெருங்கி வரும் நிலையில் அரசாங்கத்திற்கு இரண்டு முகங்களைக் காட்டக் கூடாது என்பதற்காகவே வட

23-ம் பக்கம் பார்க்க....

## புதிய அரசியலமைப்பை உருவாக்கிவிட்டு அவசியமானால் பிரிந்து செல்வோம்

### சுதந்திரக்கட்சி அமைச்சர்களுக்கு மனோ பதில்



(கொழும்பு)

நாம் இந்த தேசிய அரசை உருவாக்கியது, தேங்காய் துருவ அல்ல. அரசியலில் விளையாடவும் அல்ல. இந்த நாட்டில் புரையோடி போயுள்ள தேசிய இனப்பிரச்சினையை தீர்க்கவே தேசிய அரசை உருவாக்கினோம் என்பதை டிலான் பெரேரா, எஸ்.பி. திசாநாயக்க போன்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் மனதில் கொள்ள வேண்டும்.

புதிய அரசியலமைப்பை உருவாக்கிவிட்டு, அதன் பிறகு அவசியமானால், நாம் வெவ்வேறு திசைகளில் விலகிச் செல்வோம். முடியுமா

23-ம் பக்கம் பார்க்க....

## தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கையை அடுத்து வட மாகாண தொண்டர் ஆசிரியர்கள் தமது போராட்டத்தினை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளனர்.

நிரந்தர நியமனத்துக்கான உரிய தீர்வை வழங்கக்கோரி வடமாகாணத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் நேற்றைய தினம் வடமாகாண ஆளுநரின் அலுவலகத்தை முற்றுகையிட்டு உணவு தவிர்ப்பு போராட்டத்தினை மேற்கொண்டிருந்தனர்.

ஆளுநர் இது குறித்து உரிய தீர்வை நேரடியாக தம்மிடம் தெரிவிக்கும் வரை தமது போராட்டத்தை கைவிடப்போவதில்லை என தெரிவித்து காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

23-ம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கையில் ஏன் அரிசி தட்டுப்பாடு? ஜனாதிபதியின் சகோதரர் விளக்கம்

(கொழும்பு)

அரசாங்கத்திடமுள்ள நெல், ஒழுங்கற்ற முறையில் சந்தைப்படுததப்படுவதாக பாரிய அரிசி ஆலை உரிமையாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான டட்லி சிறிசேன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திடமுள்ள நெல் அரிசியாலை உரிமையாளர்களிடம் வழங்கப்படவில்லை. மாறாக இடைத்தரகர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

நாட்டிற்குள் அரிசி தட்டுப்பாடு இல் லையெனவும் அவர் கூறியுள்ளார். ஏதாவது, அரிசி தட்டுப்பாடு காணப் படுமாயின் அது நாட்டரிசியாக இருக்கலாம்.

இந்த நாட்டில் ஏழைகளே அதிகம் நாட்டரிசி சாப்பிடுகின்றார்கள். கீரி சம்பா அரிசி சாப்பிடுபவர்கள் பெரும் செல்வந்தர்கள். என்னிடமுள்ள 75 வீதமான அரிசி கீரிசம்பாவாகும். 10 வீதமானவை தான் நாட்டரிசி. இருப்பினும், அதிகமான நாட்டரிசி அரசாங்கத்திடமே இருக்கின்றது. இந்த அரிசியை உரிய முறையில் விநியோகித்து மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணாமல், மக்களின் பிரச்சினையை நாளுக்கு நாள் அரசாங்கம் வளர்த்துக் கொண்டு செல்வதாகவும் அவர் குற்றம்சாட்டினார். (இ-10)

SILVER SHIELD SOCKS

கடந்த 30 வருடங்களாக யாழ்.மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஒரு தயாரிப்பு

SILVER SHIELD SOCKS
காலுறைகள்

☆ தரமானவை, நீடித்த பாவனை ,மலிவு விலை
☆ பாடசாலை மாணவர்களுக்கும் அலுவலக உத்தியோகத்தர்களுக்கும் மாபெரும் விலைக்கழிவு.
☆ மொத்தமாக கொள்வனவு செய்யும் பாடசாலைகளுக்கு மேலும் விசேட கழிவு வழங்கப்படும். விரையுங்கள்.

ஸ்ரீ முருகன்
தொலைத்தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 5392
(இ-7035)

10ஆவது பிறந்ததினமும் பாராட்டி வாழ்த்தும்



வதிரியைச் சேர்ந்த
திரு.திருமதி அனுராகாந்தன்-மனோறஞ்சினி
தம்பதிகளின் மகனும்
யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையின்
மாணவனும் ஆகிய செல்வன் **அ. விஷ்வகாந்தன்**
அவர்கள் 2016ஆம் ஆண்டு நடைபெற்ற
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 190
புள்ளிகளைப் பெற்று வலய மட்டத்தில் முதலாவது
இடத்தையும் மாவட்ட மட்டத்தில் நான்காவது
இடத்தையும் பெற்றுச் சித்தியடைந்தமையைப்
பாராட்டுவதுடன் 29.12.2016 இன்று
தனது 10ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடி
மகிழும் இவர், மேலும் கல்வியில் முன்னேற்றம்
அடைய எல்லாம் வல்ல ஸ்ரீவல்லிபுர ஆழ்வாரை
வேண்டி வாழ்த்துகின்றோம்.

பாக்கிய பவனம்
நெல்லியடி வடக்கு, வதிரி
0776186943

வாழ்த்துவோர்
அ.கணேசலிங்கம் குடும்பத்தினர்
(மாமா)

(C-7045)

## வடக்கு மாகாண சபைக்கான "மாகாண கீதம்" ஒன்றினை உருவாக்குதல்

வடக்கு மாகாணசபைக்கான "மாகாண கீதம்" ஒன்றினை உருவாக்குவதற்கு வடக்கு மாகாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள், கலைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் புலம்பெயர்ந்துவாழும் மக்களிடமும் ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

மாகாணகீதத்திற்கான ஆக்கங்கள் வடக்கு மாகாண மக்களின் வாழ்வியல், மரபுகள், கலைகள், கலாசாரங்கள் மற்றும் பண்பாடுகள் ஆகியவற்றைத் தழுவியதாகவும் பாரம்பரிய இசையினைக் கொண்டதாகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

மாகாணகீதத்தினை எழுத்துருவில் தயாரித்து சமர்ப்பிக்க விரும்புவோர் வன்பிரதி (Hard Copy) மற்றும் மென்பிரதி (Soft Copy) ஆகியவற்றை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிப்போர் கீதத்திற்கான ராகத்தையும் இணைத்தல் வேண்டும்.

ராகத்தை சமர்ப்பிக்க விரும்புவோர் அதனை வன்பிரதி (Hard Copy) மற்றும் இறுவட்டில் (Compact Disc) பதிவுசெய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆக்கங்களை சமர்ப்பிப்பவர்களுடன் தொடர்புகொள்ளக் கூடியவாறு பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்களைக் குறிப்பிடுதல் வேண்டும்.

ஆக்கங்கள் சுயமாகத் தயாரித்ததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் ஏனையவர்களுக்கு சொந்தமானதாகவோ, பத்திரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டதாகவோ இருத்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

ஆக்கங்கள் எதிர்வரும் 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், சபை நடவடிக்கைக்குழு, பேரவைச் செயலகம், வடக்கு மாகாண சபை, ஏ9 வீதி, கைதடி என்ற முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ, councilaffairsnpc@yahoo.com என்ற முகவரிக்கு மின்அஞ்சல் மூலமாகவோ, பேரவைச் செயலகத்தில் நேரடியாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

**சீ.வி.கே.சிவஞானம்**
**அவைத்தலைவர் மற்றும்**
**தலைவர்,**
**சபைநடவடிக்கைக்குழு, வடக்குமாகாணசபை**

(இ-7047)

# ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை; பிள்ளையானுக்கு மறியல் நீடிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் உள்ளிட்ட நால்வரின் விளக்கமறியல் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நேற்று காலை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, டிசம்பர் மாதம் 14ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான சிவநேசத்துரை சந்திரகாந்தன், அந்த கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என்றழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா என்றழைக்கப்படுகின்ற கனகநாயகம் மற்றும் இராணுவ புலனாய்வு உத்தியோகத்தர் எம். கலீல் ஆகியோரே தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 2005ஆம் ஆண்டு மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையில் கலந்துகொண்டிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இந்த கொலை சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான சிவனேசதுரை சந்திரகாந்தன் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான சிவனேசதுரை சந்திரகாந்தன் கடந்த 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## வீதி விபத்தில் இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியால் நடந்து சென்ற இளைஞன் மீது கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் நீர்வேலி சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் நீர்வேலி தெற்கினை சேர்ந்த சிவலிங்கம் கஜேந்திரன் (வயது 25) என்ற இளைஞனே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் பொலிஸில் முறையிட்டதனை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-30)

# பகிஷ்கரிப்பு போராட்டத்திற்கு சந்தை வியாபாரிகள் முஸ்தீபு

(கரணவாய்)

நெல்லியடி மரக்கறி சந்தையின் நில வாடகை எதிர்வரும் ஜனவரியுடன் அதிகரிக்கப்படவுள்ளமையினால் அதனை ஆட்சேபித்து வியாபாரிகள் எதிர்வரும் முதலாம் திகதி பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றினை நடத்த தீர்மானித்துள்ளனர்.

இதுவரைகாலமும் ஒரு வியாபாரிக்குரிய நில வாடகைக்கட்டணமாக 250 ரூபா அறவிடப்பட்டு வந்ததனையும் எதிர்வரும் ஜனவரி 2017ஆம் ஆண்டில் இருந்து அத்தொகை பன்மடங்காக அதிகரிக்கப்படவுள்ளதாகவும் வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதனை ஆட்சேபிக்கும் விதத்தில் எதிர்வரும் 01/01/2017 ஆந் திகதி வியாபாரிகளின் பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றினை நடத்த தீர்மானித்துள்ளனர். (இ-60)

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு
19
-
05
-
1939



இறப்பு
29
-
11
-
2016


கடந்த 29.11.2016 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி
அமரர் **சின்னராசா அழகம்மா** அவர்களின்
வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 29.12.2016 இன்று வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
அத்துடன் அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரடியாக வருகை தந்தவர்களுக்கும், தொலைபேசி வாயிலாகவும் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும் எமது துன்ப வேளையில் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

(7198)

ஐங்கரன் வீதி,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

-குடும்பத்தினர்

# முன்னாள் பிரதமர் ரட்ணசிறிக்கு இறுதி அஞ்சலி




(கொழும்பு) மறைந்த முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவின் உடல். நாடாளுமன்ற உறுப்பினர்கள் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக நேற்று நாடாளுமன்ற கட்டட தொகுதியில் வைக்கப்பட்டிருந்தது.

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் நோக்கில் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த இறுதி அஞ்சலியில் கலந்து கொண்டனர்.

மேலும், எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் சபாநாயகர் கரு ஜயசூரிய ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த மாதம் 30ஆம் திகதி தேசிய துக்க தினமாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இவரின் இறுதிக் கிரியைகள் 31 ஆம் திகதி இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தனது 83 ஆவது வயதில் நேற்று முன்தினம் காலை காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# புத்தாண்டிலாவது அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்யுங்கள்

(கொழும்பு)

**பிறக்கின்ற புத்தாண்டிலாவது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**



பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு மனித முகம் இல்லையெனவும் அதற்கு மிருக முகம் இருப்பதனால் அரசியல் கைதிகள் துன்பங்களை அனுபவித்து வருவதாக அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் செயற்பாட்டாளர் அருட்தந்தை மாரிமுத்து சத்திவேல் தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகளில் காணப்படும் காலதாமதம் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பினால் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாட்டை தாம் செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுமே காரணம் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் செயற்பாட்டாளர் அருட்தந்தை மாரிமுத்து சத்திவேல் தெரிவித்தார். (இ-10)

## பொலிஸ்மா அதிபர் கண்ணீர் மல்க வேண்டுகோள்

இந்நாட்டின் பொது மக்களைப் பாதுகாக்கும் சேவகனாக செயற்படும் பொலிஸுக்கு எதிராக குரோதம் இழைக்காதீர்கள். கோபம் கொள்ளாதீர்கள் என பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர கண்ணீர் மல்க உணர்ச்சிபூர்வமாக வேண்டுகோள் விடுத்தார்.

குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

இந்த நாட்டில் பயங்கரவாதம் இல்லை. பிரிவினைவாதம் இல்லை. மக்கள் நிம்மதியாக வாழ விரும்புகின்றனர். தங்களை நிம்மதியாக வாழ விடுங்கள் என்ற வேண்டுகோளை மக்கள் விடுக்கின்றனர். இவர்கள் தங்களது இந்த வேண்டுகோளை வைத்தியர்களிடமோ, ஆசிரியர்களிடமோ விடுக்கவில்லை. பொலிஸாரிடமே விடுக்கின்றனர்.

பொலிஸாருக்கு எவ்வளவு தான் ஏசினாலும், தனிப்பட்டவர்களை தூசித்தாலும் பொது மக்களின் இந்த வேண்டுகோளை பொலிஸார் நன்றாக விளங்கியே செயற்பட்டு வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## கூச்சலிடுவதும் அபிவிருத்தித் திட்டங்களை இல்லாது செய்வதுமே எதிர்க்கட்சிகளின் பணி

### ஜோன் அமரதுங்க கடும் விசனம்

அபிவிருத்தி பணிகளுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் குரல் எழுப்புவது வழமையெனத் தெரிவித்துள்ள கிறிஸ்தவ விவகார, சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க கூச்சலிடுவதும், அபிவிருத்தித் திட்டங்களை இல்லாது செய்வதுமே அவர்களின் பணி எனவும் குற்றம்சாட்டியுள்ளார்.

காலிமுகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள உலகின் மிகப் பெரிய கிறிஸ்மஸ் மரத்தை நான்காவது நாளாக திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய அவர், அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு எதிராகவும் எதிர்க்கட்சிகள் கூச்சலிடுவதாகவும் எனினும் அரசாங்கத்தின் பயணத்தை தடுத்து நிறுத்த முடியாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

"இந்த நிகழ்வுகள் நிறைவடைந்ததன் பின்னர் இந்த இரும்புகளை பாதுகாப்பாக வைத்திருந்து அடுத்த வருடம் இதனை விடவும் பெரிய நத்தார் மரத்தை நிர்மாணிக்குமாறு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

நாட்டில் அபிவிருத்தி நடவடிக்கைகள் நடைபெறுவதை துறைமுக நகரவேலைத் திட்டங்களை பார்க்கும்போதே அறிந்துகொள்ள முடியும். அதன் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்ததும் இலங்கை தெற்காசியாவின் மிகச்சிறந்த வர்த்தக மையமாக மாறும். அதேபோல் நிதி மூலாதார மையமாகவும் மாறும்.

இலங்கையின் மிகப்பெரிய நட்சத்திர ஹோட்டல்களும் அமைக்கப்படுகின்றன. இதுவே அபிவிருத்தி எனப்படுவது. அதற்கு எதிராக குரல் எழுப்புபவர்கள் இருக்கின்றார்கள். அது வழமையானது. எதிர்க்கட்சிகளின் வேலை கூச்சலிடுவதும், அபிவிருத்தி திட்டங்களைஇல்லாதுசெய்வதுமே.

அம்பாந்தோட்டை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு எதிராகவும் கூச்சலிடுகிறார்கள் எனக்குத் தெரியும். எவ்வளவு கூச்சலிட்டாலும் அரசாங்கத்தை எதுவும் செய்ய முடியாது. ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக ஆளுவோம். இந்த காலப்பகுதிக்குள் வேலைவாய்ப்பற்றவர்களுக்கு அதனை ஏற்படுத்தி, ஆதாயத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுப்போம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## மினி சூறாவளியால் ஆலயம் மட்டும் சேதம் கிராமத்துக்கு ஏற்படவிருந்த ஆபத்தை தடுத்து நிறுத்தினாரா வைரவர்?



நேற்று முன் தினம் இரவு திடீரென வீசிய மினி சூறாவளியால் கொல்லங்கலட்டி சடச்சப்பை ஞானவைரவர் ஆலயம் சேதமடைந்தது.

ஆலயத்தின் ஓடுகள் காற்றினால் தூக்கி வீசப்பட்ட அதே வேளை ஆலய வளாகத்திலுள்ள வேப்ப மரத்தின் கிளைகள் முறிந்து விழுந்துள்ளன.

ஆலயத்திற்கும் ஆலய வளாகத்திலும் சேதங்கள் ஏற்பட்டாலும் அப்பகுதியிலுள்ள வீடுகளுக்கோ வாழைத் தோட்டங்களுக்கோ எவ்வித சேதங்களும் ஏற்படவில்லை.

ஊருக்கு ஏற்படவிருந்த சேதத்தை வைரவர் தன் மீது ஏற்படுத்திக் கொண்டார்.

இது வைரவரின் மகிமையை எடுத்துக் காட்டுகிறது எனவும் அப்பகுதி மக்கள் பக்திப் பரவசத்துடன் கூறினர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் குறித்த ஆலயத்தில் நள்ளிரவு வேளை நடந்த திருட்டு முறியடிக்கப்பட்டது. அதனையும் வைரவரே தடுத்து நிறுத்தினார் என அப் பகுதி மக்கள் கூறினர்.

இப்போது மினிசூறாவளியால் தமது கிராமத்துக்கு ஏற்பட இருந்த பாதிப்பையும் வைரவர் தடுத்து நிறுத்தி விட்டார் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (இ-3)

## பாணின் விலை உயர்த்தப்படாது

(கொழும்பு)

பாணின் விலை உயர்த்தப்படாது என திறைசேரி அறிவித்துள்ளது.

பாண் மற்றும் பணிஸ் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளின் விலைகள் உயர்த்தப்படவுள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என திறைசேரியின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சீனி மற்றும் பாம் எண்ணெய் ஆகியனவற்றின் இறக்குமதி வரி உயர்த்தப்பட்டுள்ளதாகவும் இந்த வரி உயர்விற்கு சமாந்தரமாக வெதுப்பக உற்பத்திகளை அதிகரிக்க நேரிடும் எனவும் வெதுப்பக உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

எனினும், உள்நாட்டில் சில்லறை விலைகள் உயர்த்தப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ள திறைசேரியின் அதிகாரி உலக சந்தையில் சீனியின் விலை குறைவடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். அத்துடன் பாண் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளின் விலைகளை உயர்த்த இடமளிக்கப்படாது எனவும் அவர் தெரிவித்தார். (இ-10)

# வலுவான நிலையில் பாகிஸ்தான் அவுஸ்திரேலியாவும் சிறந்த ஆரம்பம்



மெல்போர்ன் ரெஸ்டில் பாகிஸ்தான் வீரர் அசார் அலி இரட்டை சதம் அடித்து அசத்தினார். பின்னர் களமிறங்கிய வோனர் 144 ஓட்டங்கள் குவித்து பதிலடி கொடுத்தார்.

அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2-வது டெஸ்ட் மெல்போர்ன் நகரில் கடந்த 26-ந்திகதி தொடங்கியது. நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. முதல் இரண்டு நாட்களில் பெரும்பாலான நேரம் மழையினால் பாதிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் 2-வது நாள் ஆட்ட முடிவில் பாகிஸ்தான் 6 இலக்குகள் இழப்பிற்கு 310 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அசார் அலி 139 ஓட்டங்களுடனும், மொகமது அமிர் 28 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 3-வது நாள் ஆட்டம் தொடங்கியது. இருவரும் தொடர்ந்து ஆட்டத்தை தொடங்கினார்கள். அமிர் மேலும் ஒரு ஓட்டம் எடுத்து 29 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தார். அடுத்து சோகைல் கான் அசார் அலியுடன் ஜோடி சேர்ந்தார்.

இந்த ஜோடி 9-வது இலக்குக்கு 118 ஓட்டங்கள் குவித்தது. சோகைல் கான் 65 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந்தார். அசார் அலி சிறப்பாக விளையாடி இரட்டை சதம் அடித்தார். கடைசியாக வந்த வஹாப் ரியாஸ் 1 ஓட்டங்களில் ஆட்டமிழக்க பாகிஸ்தான் முதல் இன்னிங்சில் 443 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடை நிறுத்திக்கொண்டது.

அசார் அலி 205 ஓட்டங்கள் சேர்த்து கடைசி வரை ஆட்டம் இழக்காமல் இருந்தார். அவுஸ்திரேலியா அணியில் பேர்டு மற்றும் ஹசில்வுட் ஆகியோர் அதிகபட்சமாக தலா மூன்று இலக்குகளை வீழ்த்தினார்கள்:


பின்னர் அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சை தொடங்கியது. ரென்ஷா மற்றும் வோனர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ரென்ஷா 10 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். ஆனால், வோனர் அதிரடியாக விளையாடி ஓட்டங்கள் குவித்தார். 113 பந்தில் 13 பவுண்டரியுடன் சதம் அடித்த அவர் 143 பந்தில் 17 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 144 ஓட்டங்கள் குவித்தார்.

இவரது அதிரடியால் அவுஸ்திரேலியா அணி முதல் இன்னிங்சில் 3-வது நாள் ஆட்ட முடிவில் 2 இலக்குகள் இழப்பிற்கு 278 ஓட்டங்கள் குவித்துள்ளது. கவாஜா 95 ஓட்டங்களுடனும், கப்டன் ஸ்மித் 10 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.



தற்போது வரை அவுஸ்திரேலியா 165 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளது. கைவசம் 8 இலக்குகள் உள்ளதால் இன்று அதிரடியாக விளையாடி 250 ஓட்டங்கள் முன்னிலை பெற்றால் மெல்போர்ன் ரெஸ்டில் முடிவு கிடைக்க வாய்ப்புள்ளது. (க)

# நான்காயிரம் ஓட்டங்களைக் கடந்து நியூசிலாந்தின் வில்லியம்சன் சாதனை



பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் டாம் லாதமின் சதத்தின் உதவியுடன் நியூசிலாந்து அணி 77 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து அணியின் தலைவர் 26 வயதான கனே வில்லியம்சன் இந்த ஆட்டத்தில் 31 ஓட்டங்களில் (36 பந்து, 5 பவுண்டரி), வேகப்பந்து வீச்சாளர் தஸ்கின் அகமதுவின் பந்து வீச்சில் விக்கெட் கீப்பர் முஷ்பிகுர் ரஹிமிடம் பிடிகொடுத்தார்.

முன்னதாக வில்லியம்சன் பவுணடரி அடித்து 23 ஓட்டங்களை தொட்ட போது, சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் 4 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார்.


இதுவரை 102 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்றுள்ள வில்லியம்சன் அதில் 96 இன்னிங்சில் களம் இறங்கி 4,011 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இதன் மூலம் 4 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை அதிவேகமாக எட்டிய நியூசிலாந்து வீரர் என்ற சாதனையை படைத்தார். இதற்கு முன்பு மார்ட்டின் குப்தில் 112 இன்னிங்சில் இந்த இலக்கை தொட்டதே நியூசிலாந்து வீரரின் சாதனையாக இருந்தது.

ஒட்டுமொத்த அளவில் அதிவேகமாக 4 ஆயிரம் ஓட்டங்களை தாண்டியவர்களின் வரிசையில் மேற்கிந்தியத்தீவின் கார்டன் கிரீனிட்ஜுடன் வில்லியம்சன் 4-ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டார்.

இந்த சாதனை பட்டியலில் முதல் மூன்று இடங்களில் தென்னாபிரிக்காவின் அம்லா (81 இன்னிங்ஸ்), மேற்கிந்தியத் தீவின் விவியன் ரிச்சர்ட்ஸ் (88), இந்தியாவின் விராட் ஹோலி (93) ஆகியோர் உள்ளனர்.

# தென்னாபிரிக்கா ஆதிக்கம்



இலங்கைக்கு எதிரான முதல் ரெஸ்டின் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்கா வலுவான நிலையில் உள்ளது.

இலங்கை மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையேயான முதல் ரெஸ்ட் போட்டி போர்ட் எலிசபெத்தில் நடைபெற்று வருகிறது.

இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி 7 விக்கெட் இழப்பிற்கு 181 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அதைத் தொடர்ந்து மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று துவங்கியது.

ஆரம்பத்திலே தென்னாபிரிக்க வீரர்கள் தங்களுடைய வேகத்தை கூட்ட ஆரம்பித்தனர். அதன் படி சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த இலங்கை அணி வீரரான தனஞ்சய டி சில்வா 43 ஓட்டங்கள் குவித்த போது பிலாண்டர் வேகத்தில் வீழ்ந்தார்.

அதைத் தொடர்ந்து வந்த மற்ற வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இதனால் இலங்கை அணி 205 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்துள் ளது.

இலங்கை அணி தரப்பில் அதிகபட்சமாக தனஞ்சய டி சில்வா 43 ஓட்டங்களும், ஏஞ்சலா மேத்யூஸ் 39 ஓட்டங்களும் குவித்தனர்.

தென்னாபிரிக்கா அணி தரப்பில் வேகப்பந்து வீச்சாளர் பிலாண்டர் 5 விக்கெட்டுகளும், அபாட் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தி அசத்தினர்.

பின்னர் தனது இரண்டாவது இனிங்சை தொடங்கிய தென்னாபிரிக்கா நேற்றைய நாள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 351 ஓட்டங்கள் பெற்றுள்ளது. துடுப்பாட்டத்தில் குக் 117 ஓட்டங்கள் குவித்தார். போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)



## இல்லையென்றால்...

அரசியல் சாசனத்தில் தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் மறுதலிக்கப்பட்ட விடயம் தொடர்பில் நேற்றைய தினம் யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலார் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சுரேஸ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தெரிவிக்கையில்,

21 பேர் கொண்ட அரசியல் அமைப்பு வழிகாட்டல் குழுவில் இரா. சம்பந்தனும், எம்.ஏ.சுமந்திரனும் கூட்டமைப்பினைச் சேர்ந்தவர்களாக அங்கம் வகிக்கின்றனர். இந்த நிலையில் இவர்கள் இருவரும் சமஷ்டி அமைப்பு முறை வேண்டுமென்றோ, அல்லது வடகிழக்கு இணைக்கப்பட வேண்டுமென்றோ எந்தவித கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை.

பௌத்த மதத்திற்குதான் முதலிடம் என்பதனையும் எதிர்க்கவில்லை என அமைச்சர் மகிந்த அமரவீர தெளிவாக தெரிவித்துள்ளார்.

அத்தோடு தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக முன்வைத்த கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்ள மாட்டோமென சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி, ஜே.வி.பி போன்ற கட்சிகள் எதிர்ப்பு தெரிவிப்பதுடன், ஒற்றை ஆட்சியில் அரசியல் தீர்வுக்கு தயாராக இருப்பதாக சொல்கின்றார்கள்.

இந்த சூழ்நிலையில் வழிகாட்டல் குழுவில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளான எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவருமான இரா.சம்பந்தனும், சுமந்திரனும் இந்த வழிகாட்டல் குழுவில் இருந்தால், வழிகாட்டல் குழுவில் ஏன் இதுகுறித்து பேசவில்லை?

இருவரும் சட்டம் தெரிந்தவர்கள், ஆங்கிலம் பேசக்கூடியவர்கள் மற்றவர்களுக்கு எதுவும் தெரியாது என சொல்லக்கூடியவர்கள். இப்படித்திறமையானவர்களாக இருக்கும் இவர்கள் வழிகாட்டல் குழுவில் எந்த விடயங்களையும் ஏன் கேட்கவில்லை? முன்வைக்கவில்லை?

முன்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஒரு கோரிக்கையினை முன்வைத்திருந்தது.

இலங்கை அரசுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமென்றும், அந்த பேச்சுவார்த்தையில் பேசப்படும் விடயங்கள் அரசியல் சாசனத்தில் கொண்டு வரப்பட வேண்டுமென்றும் சொல்லப்பட்டது.

எனினும் அரசாங்கத்துடன் அரசியல் தீர்வு குறித்து பேச்சுவார்த்தை நடைபெற்றதாக எந்த வித தகவலும் கிடைக்கவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, ஏமாற்ற கொழும்பு முயன்றால் அரசை முடக்கும் போராட்டம். இப்படி என்றால் இதுவரையில் அரசாங்கம் ஏமாற்றவில்லை என தெரிவிக்கின்றார். சுமந்திரன் வடகிழக்கு இணைக்கப்படமாட்டாது என தெரிவிக்கின்றார். அப்படியாயின் சமஸ்டி இல்லை, வடகிழக்கு இணைக்கப்படமாட்டாது என கூறுவது அனைத்தும் பொய்யானதா? இதுவரையில் நீங்கள் ஏமாற்றப்படவில்லையா? எதுவும் புரியவில்லை ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் இரா. சம்பந்தனுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

அந்த கடிதம் கிடைக்கவில்லை எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் சந்திக்க வேண்டுமாயின் ஏற்புடைய ஒரு நாளில் சந்திக்கலாம் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பதில் கூறியுள்ளார்.

உண்மையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் என்ன விடயங்களைச் சொல்ல வருகின்றார் என்றே புரியவில்லை.

ஆளும் கட்சியில் உள்ள பெரும்பான்மையான அமைச்சர்கள் ஒற்றையாட்சியினை மாற்ற முடியாது.

வடகிழக்கு இணைப்பினை ஏற்றுக்கொள்ள முடியாது என தெளிவாக அறிவித்துள்ளதன் பின்னர் வழிகாட்டல் குழுவில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பாக இருவர் இருக்க வேண்டியதன் தேவை என்ன உள்ளது. ஆகவே,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடனடியாக வழிகாட்டல் குழுவில் இருந்து வெளியேறி அரசாங்கத்துடன் திடமான பேச்சுவார்த்தை நடத்தி நம்பகமான உறுதிமொழிகளைப் பெறவேண்டும். அதன்பின்னர் மீண்டும் வழிகாட்டல் குழுவில் இணைவது பற்றி யோசிக்கலாம் என சுரேஸ் பிரேமச சந்திரன் தனது உரையில் குறிப்பிட்டார். (செ-9)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## விவசாயபீடம்,
## அறிவியல்நகர், கிளிநொச்சி
## விரிவுரைகள் ஆரம்பம்

விவசாய பீடத்திற்கு 2015/2016 கல்வியாண்டிற்கு தெரிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்களுக்கான அறிமுக வழிகாட்டல் நிகழ்வு எதிர்வரும் 05.01.2017 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அறிவியல்நகர், கிளிநொச்சி விவசாய பீடத்தில் ஆரம்பமாகின்றது. அனைத்து புதுமுக மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விடுதி வசதி தேவைப்படும் மாணவர்களுக்கான விடுதிகள் 04.01.2017 மாலை (பி.ப. 3.00) வழங்கப்படும்.

பதிவாளர்
27.12.2016

(சி-7040)

# வடமராட்சியில்...

மிகவும் தெளிவான விளக்கத்துடன் இலகுவான முறையில் அனைவரும் சிறந்த பெறுபேறுகளைப் பெறக்கூடிய வகையில்...

## A/L-கணக்கீடு
## (Special class)

ஆசிரியர்

**B.Krishnajothy**

(B.com(Hons),Dip.in. Edu,M.Ed, MA.in.pub.Adm.merit)

**மேலும் சில புதிய பிரிவுகள் ஆரம்பம்-01.1.2017**

- ★ நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த A/L-2019 Batch இற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
- ★ A/L-2018 Batchஇற்கான மேலும் ஓர் பிரிவு ஆரம்பம்
- ★ A/L-2017 Batchஇற்கான விசேட பயிற்சிகளுடன் கூடிய (part I, part II இற்கான மிகவும் எதிர்பார்ப்புடன் கூடிய புதிய வகையான கணக்குப் பயிற்சிகள்) தனிப் பிரிவு ஆரம்பம்
- ★ நேர அட்டவணை மற்றும் அனுமதிகளை அலுவலகத்தில் உடன் பெறவும்.

**ஒவ்வொரு வருடமும் கணக்கீட்டுப் பாடத்திலும் சாதனையாளர்களை உருவாக்கி வருகின்ற தனித்துவமான நிறுவனம்.**

**OXFORD ENGLISH ACADEMY**
**P.k.Lane point pedro.**

(சி-70417)

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# TEMPORARY LECTURER IN LAW

University of Jaffna will entertain applications upto 09.01.2017 from suitably qualified persons for the post of **Temporary Lecturer in Law.**

Minimum Requirements/ Qualifications:

1. A Degree with specialization in the relevant subject with First or second Class (Upper Division) Honours;
   OR
2. A Degree with specialization in the relevant subject with second class (Lower Division) Honours;
   OR
3. (a) A Degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours, and
   (b) a recognized postgraduate degree in the relevant subject.

Salary Scale: Rs. 35,556/= p.m.(fixed)

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form at People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of the University of Jaffna. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self- addressed stamped envelope 23x10 c.m.in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- drawn in favour of the Bursar, University of Jaffna.

Applications for the above posts should be sent to the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the head of the respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for interview.

**Registrar**
**University of Jaffna,**
**Jaffna.**
28.12.2016

(சி-7039)

# இராசி பலன்

29.12.2016
(மார்கழி 14, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு
அமாவாசை பிற்பகல் 1.13 மணிவரை
மூலம் பின்னிரவு 12.21 மணிவரை
சுபநேரம் 7.58-9.28 மணிவரை
இராகுகாலம் 1.58-3.28 மணிவரை

வள்ளுவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது செவ் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரோகிணி, மிருகசீரிடம் | | . |
| சுக் | | | ராகு |
| சூரி சந் | சனி புத | | குரு |

**மீனம்** தொழில் ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மேடம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள்.

**இடபம்** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**கும்பம்** பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** மறைமுக எதிர்ப்புகள் மாறும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், உடல்நலனில் உற்சாகம் பெருகும், கௌரவமான நாள்.

**மகரம்** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எடுத்த காரியத்தை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம்.

**சிம்மம்** உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வியாபார விருத்தியுண்டு, சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகலாம்.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம், இரவு-பகல் பாராது பாடுபடுவீர்கள்.

**விருச்சிகம்** வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், தனவரவு திருப்திகரமாக அமையும்.

**துலாம்** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி** பக்குவமாகப் பேசி பாராட்டுப் பெறுவீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், பெற்றோர் பாசம் கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

# தென்னைப் பயிர்ச்செய்கை தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும்

## பிராந்திய முகாமையாளர் வைகுந்தன் தெரிவிப்பு



தென்னை பயிர்ச் செய்கை தொடர்பில் மக்கள் மத்தியில் அதிகூடியளவு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும் என தென்னை அபிவிருத்தி சபையின் பிராந்திய முகாமையாளர் ரி.வைகுந்தன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண தென்னை அபிவிருத்திசபையின் மானியக் கொடுப்பனவு வழங்கல் நிகழ்வு நேற்று முன்தினம் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

வடமாகாணத்தில் தென்னைப் பயிர்ச்செய்கையை வளப்படுத்தும் நோக்குடன் தென்னை அபிவிருத்தி சபையால் பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்னைப் பயிருக்கு ஆரோக்கியமான வளமான சூழலை அமைத்துக்கொடுப்போமேயானால் நிறைவான பயனை பெற்றுக்கொள்ளலாம்.

எமது மாகாணம் உலர் வலய பிரதேசம். இந்த வருடம் மழைவீழ்ச்சி குறைவாகவுள்ளது. அதன் காரணமாக அடுத்த வருடம் வறட்சி எதிர் பார்க்க முடியும் என ஆய்வின் மூலம் தெரிவிக்கப்படுகிறது. எனவே அந்த வரட்சியின் காரணமாக தென்னை மரங்களுக்கு அதிகமாக பாதிப்பு ஏற்படுத்த சந்தர்ப்பம் உண்டு.

எனவே மண்நீர் பாதுகாப்பு மற்றும் உரப்பாதுகாப்பு போன்ற வேலைத்திட்டத்தை சிறந்த முறையில் மேற்கொள்வதன் மூலம் வரவிருக்கும் வரட்சியை எதிர்கொள்ள இலகுவாக இருக்கும்.

வடமாகாணத்தில் தென்னம் பயிர்செய்கையை ஊக்குவிப்பதற்கு அரசு அதிகளவு வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வருகிறது. ஆனால் நாம் எந்த மாற்றத்தையும் அபிவிருத்தியையும் செய்யவில்லை. தென்னம் பயிர்ச்செய்கை வேலைத்திட்டம் தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வு இல்லை. சரியான முறையில் தென்னம் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதும் இல்லை. நாம் சொல்வதையும் செய்வதில்லை. முறைப்படி பயிர்ச்செய்கையை மேற்கொண்டால் உற்பத்தி பெருக்கம் அதிகளவில் காணமுடியும்.

எனவே பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டு தகவல்கள் மக்கள் மத்தியில் போய் சேரவேண்டும். யாழ். மாவட்டத்தில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. தென்னம் கன்று எமது வாழ்வாதாரத்தில் ஒன்றித்துள்ளது. எனவே ஒவ்வொரு வீட்டிலும் தென்னம் கன்று வளர்ப்பதை பழக்க மாக கொண்டு வந்துள்ளனர்.

தென்னம் பயிர்ச்செய்கை தொடர்பான வேலைத்திட்டங்களை அனைத்து மக்களும் முறையான விதத்தில் செய்தால் மாத்திரம் தான் அதை சிறப்பாக செய்ய முடியும். வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

வடமாகாணம் இரண்டாவது தென்னை முக்கோண வலயமாக மாற்றப்பட்டுள்ளது. அதற்கு அதிகளவான தென்னை மரங்கள் நாட்டப்படவேண்டும்.

2020ஆம் ஆண்டு தென்னை அதிகளவில் வளர்க்க வேணடும் என்பது எமது இலக்கு. வடமாகாணத்தில் 44 ஆயிரத்து 191 ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது.

50 ஆயிரத்து 160 ஏக்கர் நிலம் மேலதிகமாக உள்ளது. அவற்றை அடையாளப் படுத்த தென்னை ஆராய்ச்சி நிலையம் தயாராக உள்ளது. அவற்றில் தென்னம் கன்று கள் நாட்டப்பட வேண்டிய தேவையுள்ளது.

கடந்த 5 வருடங்களில் யாழில் ஒரு மில்லியன் தென்னம் கன்றுகள் வழங்கியுள்ளோம். கடந்த வருடம் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் கன்றுகள் வழங்கியுள்ளோம்.

குடும்ப வருமானத்தை உயர்த்துவதுடன் நாட்டின் வருமானத்தில் பங்கு கொள்ள வேண்டும். கடந்த வருடம் வடமாகாணத்தில் இருந்து தென்னம் உற்பத்தியின் ஊடாக கணிசமான பங்களிப்பு வழங்கியுள்ளோம். அடுத்து வரும் காலத்தில் கூடுதலான பங்களிப்பு செயய வேண்டும்.

கடந்த கால போரால பல சவால்களுக்கு முகம கொடுத்துள்ளோம். வாழ்வாதாரம் அழிந்துள்ளது. எனவே மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது அவசியம். அந்த வகையில் நாம் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொளள வுள்ளோம்.

தென்னையில் செவ்வண்டு, கருவண்டு தாக்கம் பாரிய அளவில் உள்ளது. எனவே அவற்றுக்கு குழுக்கள் அமைத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு மேற் கொள்ளவுள்ளோம் உற்பத்தியை மட்டும் கருத்தில் கொள்ளாது கண்காட்சிகள், சந்தைப்படுத்தல், களப்பயிற்சி, போன்றவற்றை மேற்கொள்ள வுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் சாதனைகள் தொடரவேண்டும்- டக்ளஸ்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 2014 - 2016 கல்வியாண்டுக்கான தேசிய டிப்ளோமா பரீட்சையில் நூறு சதவீத சித்தியைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்திருக்கும் நிலையில், அதன் இத்தகைய சாதனைகள் தொடர வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட 2014 - 2016 கல்வியாண்டுக்கான டிப்ளோமா பரீட்சையில் ஆரம்பக் கல்வியில் 90 ஆசிரிய மாணவர்களும், விசேட கல்வியில் 14 பேரும், தமிழ் மொழி மூல விஞ்ஞானத்தில் 31 பேரும், தமிழ் மொழி மூல கணிதத்தில் 13 பேரும், ஆங்கில மொழி மூல விஞ்ஞானத்தில் 11 பேரும், ஆங்கில மொழி மூல கணிதத்தில் 7 பேரும், ஆங்கிலத் துறையில் 20 பேரும் என மேற்படி பரீட்சையில் தோற்றிய அனைத்து பரீட்சார்த்திகளும் சித்தி பெற்றுள்ளமையானது உண்மையிலேயே ஒரு வரலாற்று சாதனையாகும். இந்த சாதனையை நிகழ்த்தியுள்ள கல்லூரியின் பீடாதிபதி, உப பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் அனைவருமே பாராட்டத்தக்கவர்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோன்று, இன்று எட்டப்பட்டுள்ள இந்த சாதனையை தொடர்ந்து நிலை நாட்ட இவர்கள் முன்வந்து, எமது சமூகத்திற்கு இன்றைய நிலையில் பெரும் குறைபாடாக இருக்கின்ற சில முக்கிய பாடங்களுக்கான ஆசிரியப் பெருந்தகைகளை உருவாக்குவதற்கு வழிவகுக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)



க.பொ.த(உயர்தரம்) 2019 தொழில்நுட்பப் பிரிவு மாணவர்களுக்கான ஆரம்ப விழா உயர் கலைக் கல்லூரி கல்வி நிறுவனத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலாநிதி சிவமதி சிவச்சந்திரன் கலந்து கொண்டார். மேலும் யாழ். பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த விரிவுரையாளர்கள், பாடசாலை தொழில்நுட்ப பாட ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அன்னையின் அறக்கொடை விழா

அன்னைசிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 92 ஆவது பிறந்த நாள் அறக்கொடை விழா எதிர் வரும் ஜனவரி மாதம் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.



ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் ரி.ஜெயசிங்கம் புஸ்பலதா தம்பதியர், சிறப்பு விருந்தினராக இலங்கை சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் சட்டத்தரணி வி.ரி.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அன்னையின் பிறந்தநாள் அறக்கொடை வழங்கும் நிகழ்வில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பெண்கள் வைத்திய பிரிவு சார்பில் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை சார்பில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி யோகேஸ்வரன் திவாகரன் ஆகியோரும் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

மேலும் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் க.பொ.த.சாதாரண தரத் தில் 2017 இல் கல்வி கற்கும் திறமையின் உச்சம் தேவைப் படுபவர்களில் முதன்மையானவரையும் கருத்திற் கொண்டு நூறு மாணவர்களுக்கு கல்வி நிதியம் வழங்கல் இடம்பெறும்.

பாடசாலைகள் சார்பில் இதனை தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் கிருஷ்ணகுமார் பெற்றுக் கொள்வார். மேலும் இந் நிகழ்வில் 2017 ஆம் ஆண்டிற்கான சிவத்தமிழ் விருது வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

இதில் வைத்திய நிபுணர் சேனாதிராஜா ஆனந்தராஜா, நாதஸ்வரவித்துவான் எம்.பி.பாலகிருஷ்ணன், பொன்னாலை பண்டிதர் தி.பொன்னம்பலவாணர், முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ், இளைப்பாறிய ஆசிரியை பண்டிதை திருமதி மகாதேவி பத்மநாதன் போன்ற சான்றோர்கள் விருது பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)







# கௌரவிப்பு நிகழ்வு

புங்குடுதீவு முன்பள்ளி ஒருங்கிணைந்து புங்குடுதீவு உலக மையத்தினரின் ஏற்பாட்டில் ச.சஷ்விதன், சி.விஷ்வா ஆகியோரின் நிதிப் பங்களிப்போடு தரம் ஒன்றிற்குச் செல்லும் மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மாணவர்கள் கௌரவிக்கப்பட்டு அழைத்து வருவதையும் அவர்களின் கலைநிகழ்வுகளை படங்களில் காணலாம்.

## நல்ல காலநிலை நிலவ விசேட வழிபாடுகள்

நாட்டின் சகல பிரதேசங்களிலும் அதிக வரட்சியான காலநிலை நிலவுவதுடன் சகல பெரு நீர்ப்பாசனங்கள் உள்ளிட்ட சகல நீர்த் தேக்கங்களிலும் நீரின் அளவு குறைந்து வருகின்றது.

இந் நிலைமையானது நாட்டின் பொருளாதாரத்திலும் மக்களின் அன்றாட நடவடிக்கைகளிலும் கடும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

எனவே இந் நிலைமையினை தவிர்த்து 2017 ஆம் ஆண்டு புதிய ஆண்டின் ஆரம்பத்தில் நாட்டினுள் நல்ல காலநிலையை ஏற்படுத்தும் முகமாக நல்லூர் பிரதேச செயலகத்தின் வளாகத்தினுள் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் நாளை 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படவுள்ளது என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)


**வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532**



**வேலைக்கு ஆட்கள் தேவை**

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இயங்கும் உணவகத்திற்கு ரீமேக்கர், சப்ளையர்கள் தேவை. சம்பள விபரம் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில் வரவும் (சி-7037)

தொடர்பு:-077 621 4224



**Photography Classes for Beginners**
in Jaffna - Tamil Medium
Learn the Basic Techniques to Take Good Photographs

- Camera History
- Different Between Film Camera and Digital Camera
- Digital Camera Operation
- Camera Handling
- How to Select a Digital Camera and Lenses
- Settings of Aperture/ Shutter Speed/ ISO
- Auto Mode/Aperture Priority Mode/ Shutter Priority Mode/ Manual Mode
- Composition
- Ten Techniques to Take Better Photographs
- Lenses
- Outdoor Practical Session..etc

Investment Rs. 10,000/-

Sundays
9.00 am - 11.00 am
Commencement
08th January
Duration
1.5 months



Individual Classes Available on Request

METROPOLITAN INSTITUTE OF BUSINESS MANAGEMENT
Venue : Jaffna College Undergraduate Department, 464, Hospital Road, Jaffna.
Hotline: +94 77 661 5152 | E: info@mibm.lk
www.mibm.lk
MIBM



**மானிப்பாய் பரீஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)**

## பணிநிலை வெற்றிடம்

**களஞ்சிய முகாமையாளர் (கிளை முகாமையாளர்)**

மேற்படி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. சம்பள அளவுத்திட்டம் - (கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 13/ 2015 சுற்று நிருபத்திற்கமைய 208/14 ஆவது சம்பளக்குறியீடு)
   13875 - 115 X 10 - 125 X 10 - 16275
   இதரபடிகள், விசேட படிகளும் வழங்கப்படும்.
2. வயது 18 தொடக்கம் 45 வரை. ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)
3. பிணை :- தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தினால் கோரப்படும் ஆதனப்பிணை, ரொக்கப்பிணை என்பவற்றை செலுத்தத்தயாராக இருத்தல் வேண்டும்.

தகைமைகள் :-

அ) கூட்டுறவுப்பணியாளரின் 15 வது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறைப் பதவி ஒன்றில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 16 வது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறைப் பதவி ஒன்றில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) பத்திரம் / க.பொ.த. (சாதாரண தரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம் / வர்த்தக கணிதம் அல்லது எண் கணிதம் / சிங்களம் / தமிழ் உட்பட 06 பாடங்களில் சித்தியும்,

**களஞ்சிய முகாமையாளர் (கிளை முகாமையாளர்)**

மேற்படி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. சம்பள அளவுத்திட்டம் - (கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 13/ 2015 சுற்றுநிருபத்திற்கமைய 208/16 ஆவது சம்பளக்குறியீடு)
   13160 - 105 X 10 - 115 x 10 - 15360
   இதரபடிகள், விசேட படிகளும் வழங்கப்படும்.
2. வயது 18 தொடக்கம் 45 வரை. ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)
3. பிணை :- தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தினால் கோரப்படும் ஆதனப்பிணை, ரொக்கப்பிணை என்பவற்றை செலுத்தத்தயாராக இருத்தல் வேண்டும்.

தகைமைகள் :-

அ) கூட்டுறவுப்பணியாளரின் 17 வது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறைப் பதவி ஒன்றில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் .

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரண தரம்) பத்திரம் / க.பொ.த. (சாதாரண தரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண் கணிதம் / வர்த்தக கணிதம் அல்லது எண் கணிதம் / சிங்களம் / தமிழ் உட்பட 06 பாடங்களில் சித்தியும்,

**எரிபொருள் நிரப்புநர்**

மேற்படி பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1. சம்பள அளவுத்திட்டம் – (கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 13/ 2015 சுற்றுநிருபத்திற்கமைய 313/ 16 ஆவது சம்பளக்குறியீடு)
   { 13160 - 105 x 10 - 115 x 10 - 15360
   இதரபடிகள், விசேடபடிகளும் வழங்கப்படும். }
2. வயது 18 தொடக்கம் 45 வரை .(சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது)
3. பிணை :- தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தினால் கோரப்படும் ரொக்கப்பிணை செலுத்தத்தயாராக இருத்தல் வேண்டும்.

தகைமைகள் :-

அ)கூட்டுறவுப்பணியாளரின் 17 வது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறைப் பதவி ஒன்றில் 01 வருடத்திற்குக் குறையாத அனுபவம் .

அல்லது

ஆ) 8 ம் வகுப்பு கல்விச் சான்றிதழ்.

விண்ணப்ப முடிவுத் திகதி :- 2017.01.12

விண்ணப்பிக்கும் முறை :- மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்களினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10.00 செலுத்திப் பெற்று பூரணப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் குறிப்பீட்டு இலக்கம் என்பனவற்றை குறிப்பிட்டு "தலைவர், மானிப்பாய் பரீஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பொன்னாலை வீதி, மானிப்பாய்" என்னும் முகவரிக்கு 2017.01.12 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரி சங்கப்பணியாளர் எனின் குறித்த சங்கத்தினூடாகவே விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
மானிப்பாய் பரீஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

(சி-7038)



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா:68 செவ் 8 இல்<br>உயரம்: 169cm<br>தகைமை/தொழில்:பட்டதாரி/அரச தொழில்<br>தொ.இ: B/6688 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 36 செவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/3305 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 173cm<br>தகைமை/தொழில்: Diploma லண்டன் PR<br>தொ.இ: B/6689 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 32 செவ் 8 இல்<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்<br>தொ.இ: G/3314 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி.பா: 7<br>உயரம்: 183cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி பொறியியலாளர் ஜேர்மனிதுடிபுரிமை<br>தொ.இ: B/6690 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 15 செவ் இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: கால்நடை வைத்தியர்<br>தொ.இ: G/3324 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 58செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில் :B.Sc/பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/6691 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 25 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3334 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை

# ராணுவத்தின் அம்புலன்ஸ் மோதி வயோதிபர் ஸ்தலத்தில் பலி!

## வற்றாப்பளையில் சம்பவம்





(முல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்குட்பட்ட முள்ளியவளை பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள வற்றாப்பளை பகுதியில் இராணுவத்தினர் பயணித்த நோயாளர் காவு வண்டியொன்று துவிச்சக்கரவண்டியில் பயணித்தவர் மீது மோதிய விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.இச் சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் வற்றாப்பளை முள்ளியவளை பிரதான வீதியிலுள்ள மு/வற்றாப்பளை மகாவித்தியாலயத்திலிருந்து 150 மீற்றர் தூர இடைவெளியில் சம்பவித்துள்ளது.இச் சம்பவத்தில் வற்றாப்பளையைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான சூரிப்பிள்ளை கந்தப்பிள்ளை (வயது-75) என்ற வயோதிபரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு வற்றாப்பளைப் பகுதியில் இருந்து முள்ளியவளை நோக்கி துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த வயோதிபர் மீது பின்னால் பயணித்த கோப்பாபிலவு இராணுவ முகாமின் இராணுவ நோயாளர் காவுவண்டி மோதிய விபத்து சம்பவத்திலேயே வயோதிபர் உயிரிழந்ததாக சம்பவத்தை நேரில் கண்ட உறவினர்கள், பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.இதேவேளை குறித்த வாகனத்தை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சம்பவ இடத்திற்கு வருகைதந்து பார்வையிடுவதற்கு முன்னர் அப்பறப்படுத்த வேண்டாம் என பொதுமக்கள், உறவினர்கள் கேட்டுக்கொண்ட போதும் அதனைக் கவனத்தில் கொள்ளாது வாகனத்தை முள்ளியவளை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

ஆயினும் தகவல் அறிந்து உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் மக்களுடன் கலந்துரையாடி விபத்து தொடர்பில் நீதியான விசாரணைகள் இடம்பெறும் என வழங்கிய வாக்குறுதியை அடுத்து குழப்ப நிலை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது.

அத்துடன் கண்கண்ட சாட்சிகள் இருப்பின் அவர்களை முள்ளியவளை பொலிஸ் நிலையம் வருமாறும் கேட்டுக் கொண்டனர். வாகன சாரதி முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.இதன் பின்னர் முள்ளியவளை பொலிஸார் சடலத்தை அங்கிருந்து மீட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (2-15-310)

# கிளிநொச்சி சந்தையில் தீயினால் எரிந்த கடை வியாபாரிகளுக்கு நட்டஈடு நேற்று வழங்கல்

## மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சர் வழங்கி வைத்தார்



(பரந்தன்)

கிளிநொச்சி சந்தையில் தீயினால் எரிந்த 122 கடை வியாபாரிகளுக்கு 71 மில்லியன் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் மாதம் தீயினால் எரிந்து அழிந்து போன கிளிநொச்சி பொதுச் சந்தை வியாபாரிகளுக்கு நேற்று நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, சிறைசாலைகள் மறுசீரமைப்பு, இந்து சமய விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் இதனை வழங்கி வைத்துள்ளர். 122 சந்தை வியாபாரிகளுக்கு 71 மில்லியன் ரூபாய்கள் நட்டஈடாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு விஜயம் செய்த அவர், அங்கு மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வின் போதே தீயினால் எரிந்த சந்தை வியாபாரிகளுக்கு நட்டஈட்டை வழங்கி வைத்துள்ளார்.

அந்த வகையில் 44 பான்சி கடைகளுக்கும், 53 புடைவை கடைகளுக்கும், 22 பழக் கடைகளுக்கும்,2 தையல் கடைகளுக்கும், ஒரு தேநீர் கடைக்கும் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளது. இதில் 15 இலட்சம் ரூபா வீதம் நட்டஈடு 19 வியாபாரிகளுக்கும், பத்து இலட்சம் ரூபா வீதம் 13 பேருக்கும், ஐந்து இலட்சம் ரூபா வீதம் நட்ட ஈடு 40 வியாபாரிகளுக்கும், வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு ஏனைய வியாபாரிகளுக்கு மூன்று இலட்சம், இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம், ஒரு இலட்சம் என வழங்கி வைககப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் அமைச்சருடன் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், கரைச்சி பிரதேச செயலாளர் கோ. நாகேஸ்வரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பிரபாகரன், கரைச்சி பிரதேச செயலாளர் க.கம்சநாதன், வியாபாரிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.(2-312-15)

# என்ன முட்டுக்கட்டை ஏற்பட்டாலும் பொருத்து வீடு நடைமுறைப்படுத்தப்படும்

## மீள்குடியேற்றம், புனர்வாழ்வு அமைச்சர் உறுதிமொழி



(பரந்தன்)

என்ன முட்டுக்கட்டை வந்தாலும் பொருத்து வீடு நடைமுறைப்படுத்தப்படும் என மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, சிறைசாலைகள் மறுசீரமைப்பு, இந்து சமய விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த செம்டெம்பர் மாதம் கிளிநொச்சி பொதுச் சந்தையில் தீயினால் எரிந்த கடை வியாபாரிகளுக்கு நட்டஈடு வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு நட்டஈட்டினை வழங்கி விட்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் குறிப்பிடும் போது,

வீட்டுத்திட்டத்தில் இப்பொழுது பல பிரச்சினைகள் இருக்கிறன.மண் இல்லை. வேலைகளைச் செய்வதற்கான மேசன் மார்கள் இல்லை. இவ்வாறு பல பிரச்சினைகள் இருக்கின்றன. இதனால் நான் பிரதமருடன் பேசி முன் அமைக்கப்பட்ட ஒரு தொகை வீடுகளை நிர்மாணிப்பதற்காக முன் வந்திருக்கின்றேன் அந்த வீட்டுத்திட்டத்தின் மூலம் ஒரு வீட்டை நான் சுன்னாகத்திலே கட்டி இருக்கின்றேன். இந்த வீட்டை எத்தனையோ பேர் சென்று பார்வையிட்டு இருக்கின்றனர் ஆனாலும் இவற்றுக்கு எதிர்பபை காண்பதற்கு பலர் இருக்கின்றனர். அதனைப் பற்றி இச்சந்தர்ப்பத்தில் பேச விரும்பவில்லை. எனினும் இத்திட்டம் முற்றுமுழுதாக மக்கள் நலம் சார்ந்ததே. ஆகவே இத்திட்டம் விரைவில் அமுல்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து நிகழ் வின் முடிவில் பொருத்து வீட்டுத்திட்டத்திற்கு விண்ணப்பிக்காத மக்களுக்கு மாற்றுத் திட்டம் ஏதும் இருக்கிறதா? என ஊடகவியலாளர்களினால் தொடுக்கப்பட்ட கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்காமல் சென் றமை குறிப்பிடத்தக்கது. (2-312)




# காணாமல் போனோர் சான்றிதழ் பெறுவது தொடர்பில் பிர.செயலாளர்கள், கிராம அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட விசேட கருத்தமர்வு

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல்போனோர் தொடர்பில் சான்றிதழை பெற விரும்புபவர்களுக்கான ஏற்பாடுகள் தொடர்பில் பிரதேச செயலாளர்கள்,கிராம சேவகர்கள் ஆகியோருக்கு வடக்கு மாகாண பதிவாளர் நாயகம் பிரபாகரன் மற்றும் முல்லைத்தீவு மேலதிக அரச அதிபர்கள் ஆகியோர் தலைமையில் ஓர் விசேட கருத்தமர்வு இடம்பெற்றது.

இக் கருத்தமர்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை கரைதுறைப்பற்று பிரதேச செயலக ஒன்று கூடல் மண்டபத்தில இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட 136 பிரிவு கிராம சேவகர்கள் மற்றும் 6 பிரதேச செயலாளர் ஆகியோருக்கு இது தொடர்பான செயலமர்வு நடைபெற்றுள்ளது.

இந்த அமர்வின் போது பதிவாளர் நாயகம் கருத்துரைக்கையில் ,

2016 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க ஏற்பாட்டின் பிரகாரம் நாட்டில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது காணாமல் போனவர்கள் தமது சட்டபூர்வ பணிகளுக்காக குறித்த நபர் காணாமல் போயுள்ளார் என்ற எழுத்து பூர்வமான அங்கீகாரம் பெறற ஆவணம் ஒன்றை அவரது உரித்துடையோர் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு பெற்றுக் கொள்ளும் ஆவணங்களின் மூலம உரித்துடையவர் தனக்கு சட்டரீதியாகத் தடையாக உள்ள பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும்.

அதுவும்காணாமல்போனவரின் உறுத்தாளரின் சுயவிருப்பின் பெயரிலேயே பெறலாம். இவ்வாறு பெற்றுக் கொள்ளும் ஆவணம் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும் ஆவணமாகும்.

இது வழங்கப்பட்ட திகதியில் இருந்து இரண்டு ஆண்டுகளின் பிற்பாடு குறித்த ஆவணம் செல்லுபடியற்றதாகும்.

எனவே மாவட்டத்தில் பணிபுரியும் கிராம அலுவலர்கள் இதனை கிராமத்தில் வாழும் மக்களுக்குத் தெரியபடுத்தி இவ் ஆவணத்தை பெற விரும்புபவர்களை அதற்கான ஏற்பாட்டின் பிரகாரம் செயற்படுத்துமாறு தெரிவித்தார். (2-15)

# ஆட்டோ- பிக்கப் வாகனங்கள் நேருக்குநேர் மோதுண்டு விபத்து

## இருவர் படுகாயம்

(மல்லாவி)

ஏ-9 வீதிமாங்குளம்பொலிஸ் நிலையப்பிரிவிலுள்ள மாங்குளம் -முல்லைத்தீவு வீதியிலுள்ள பிள்ளையார் ஆலையத்திற்கு அருகில், முச்சக்கர வண்டியும், பிக்கப் வாகனமும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளானதில் முச்சக்கர வண்டியில்பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வன்னியில் இடம்பெற்று முடிந்த இறுதிக்கட்டப் போரின் போது தனது இரண்டு கால்களையும் இழந்த மாற்றுத் திறனாளி ஒருவர் பாண்டியன் குளத்தில் இருந்து முல்லைத்தீவு நோக்கி செலுத்திய முச்சகர வண்டி யும் ஒட்டுசுட்டான் பகுதியிலிருந்து மாங்குளம் பயணித்த பிக்கப் வாகனமும் நேருக்குநேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்து படுகாயமடைந்த நிலையில் கோவிலகுடியிருப்பு முல்லைத்தீவைச் சேர்ந்த மாற்றுத் திறனாளியான சிங்கராஜா- அன்ரனியூட் (வயது-46) மற்றும் வட்டுவாகல் முல்லைத்தீவைச் சேர்ந்த குடுபஸ்த்தரான சிங்காரம் - சூசைமுத்து (வயது-37)ஆகியோரே வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்திற்குச் சென்ற மாங்குளம் பொலிஸார் பிக்கப் வாகன சாரதியை கைது செய்துள்ளனர்.

அத்துடன் விபத்துக்குள்ளான வாகனங்களை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

# மரக்குற்றிகள், பலகைகள், தீராந்திகளின் பகிரங்க ஏலவிற்பனை கால அட்டவணை

## அரசாங்க மரக்கூட்டுத்தாபன யாழ். பிராந்திய முகாமையாளர் அறிவிப்பு



அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்குகின்ற யாழ்ப்பாணம், கிளிநொச்சி, நல்லூர், ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் உள்ள மரக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களில் தேக்கு, பாலை, வேம்பு, முதிரை ஆகியவற்றின் மரக்குற்றிகள், பலகைகள், தீராந்திகள் என்பன பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யும் கால அட்டவணையை அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ். சிறிஸ்காந்தராசா அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 2017/01/04, ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி விற்பனை நிலையத்திலும்,

எதிர்வரும், 2017/01/09ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஒட்டுசுட்டான் விற்பனை நிலையத்திலும்,

எதிர்வரும், 2017/01/18ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் விற்பனை நிலையத்திலும்,

எதிர்வரும், 2017/01/25, ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நல்லூர் விற்பனை நிலையத்திலும் ஏல விற்பனை நடைபெறவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விபரம் தேவைப்படுவோர் மரக்கூட்டுத் தாபனத்தின் விற்பனை நிலையங்களின் ஒட்டுசுட்டான்- 021-206 1789, கிளிநொச்சி -021-228 5409, யாழ்ப்பாணம் - 021- 222 2349, நல்லூர் - 021-2216610 ஆகிய இடங்களின் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# நீண்டநாள் வரட்சிக்கு பின்னர் கிளிநொச்சி, முல்லையில் மழை

## வாடிய பயிர்கள் துளிர்விடும் நிலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டத்தில் நீண்ட வரட்சிக்குப்பின்னர் தற்போது மழை பெய்து வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக்குளம் உள்ளடங்கலாக சுமார் 59 ஆயிரம் ஏக்கர் பயிர்ச் செய்கை நிலங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பெருமளவான நிலங்களிலும் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அண்மைய நாட்களாக நிலவிய கடும் வரட்சி காரணமாக பெருமளவான பயிர்ச்செய்கை நிலங்கள் கைவிடப்பட்ட நிலையில் கடந்த 27ஆம் திகதி முதல் இடையிடையே மழை பெய்துள்ளது.

இதனால் வாடிய நிலையில் காணப்பட்ட பயிர்கள் துளிர்விட்ட நிலையிலும் காணப்படுகின்றது.

இம்மழை தொடருமாகில் விவசாய நிலங்களை ஓரளவு பாதுகாக்க முடியுமென விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (2-15)




# குளங்களின் வான்பகுதிகள் 5மில். ரூ. செலவில் புனரமைப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசனத்திணைக்களத்தின் கீழ் உள்ள கனகாம்பிகைக்குளம், அக்கராயன் குளம் ஆகிய குளங்களின் வான் பகுதிகள் மாகாண குறித்தொதுக்கப்பட்ட ஐந்து மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள அக்கராயன்குளம், கனகாம்பிகைக்குளம் ஆகியவற்றின் வான் பகுதிகள் சேதமடைந்து காணப்பட்ட நிலையில் அவற்றின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2016 ஆம் ஆண்டின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் கனகாம்பிகைக்குளத்தின் வான்பகுதி 2.5 மில்லியன் ரூபா செலவிலும் அக்கராயன்குளத்தின் வான்பகுதி 2.5 மில்லியன் ரூபா செலவிலும் புனரமைக்கப்பட்டுள்ளன.

இதனைவிட குடமுருட்டிக்குளத்தின் அணைக்கட்டு மூன்று மில்லியன் ரூபாவிலும் கரியாலை நாகபடுவான் குளத்தின் அணைக்கட்டு மூன்று மில்லியன் ரூபாவிலும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் புனரமைக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (2-15)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் கனடா கிளையினரால் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள செஞ்சோலை சிறுவர் இல்ல சிறார்களுக்கு பாடசாலை அப்பியாச கொப்பிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. இதில் இறுதி யுத்தத்தில் தாய் தந்தையை இழந்த மற்றும் தந்தையை இழந்த அல்லது தாயை இழந்த 40 ஆண்களும் 150 பெண்களுமாக மொத்தம் 190 சிறார்கள் பராமரிக்கப்பட்டு வருகின்ற செஞ்சோலை சிறுவர் இல்ல நிர்வாகத்தினால் கற்றல் உபகரணங்களை வழங்கி வைக்குமாறு விடுத்த வேண்டுகோளுக்கமைவாக வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் இப் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. (படம்:-மல்லாவி செய்தியாளர்)

# பொன்னநகர் மத்தி 72 வீட்டுத்திட்ட மக்கள் அடிப்படை வசதியின்றி அவதி

(மல்லாவி)

கிளிநொச்சி பொன்னநகர் மத்தி 72 வீட்டுத் திட்டத்தில் உள்ள மக்கள் தமக்கான குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பொன்னகர் மத்தி கிராமத்தில் உள்ள குடும்பங்கள் குடிநீர் வசதியின்மை போக்குவரத்தின்மை உள்ளிட்ட பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைத்துக் கொடுக்கப்பட்ட 72 மாதிரி வீட்டுத்திட்டத்தில் உள்ள குடும்பங்கள் தங்களுக்கு அமைத்துத் தரப்பட்ட வீடுகள் சேதமடைந்து காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளதுடன் இதுவரை தங்களுக்கான காணி உரிமங்கள் வழங்கப்படவில்லை என்றும் இதில் உள்ள அநேகமான குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களாகவே உள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஆனால் சமுர்த்தி போன்ற உதவிக் கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படாத நிலையில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இப்பகுதியில் 20 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் புதிதாக திருமணம் செய்யும் தாய் தந்தையருடன் குறித்த 72 வீட்டுத் திட்டத்தில் வசித்து வருவதாகவும் அவர்களுக்கான காணிகளைப் பெற்றுத் தருமாறும் இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-15)



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலைக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ. குணசீலன் கடந்த 26 ஆம் திகதி திங்கட்கிழமை ஒரு தொகுதி அலுமாரிகளை வழங்கி வைத்தார்.

பாடசாலை அதிபரிடம் மாகாண சபை உறுப்பினர் குறித்த அலுமாரிகளை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம். (படம்:-பொ. சோபிகா)

# இயலாமை நபர்களை அடையாளப்படுத்துவதற்கு மருத்துவச் சான்றிதழ் வழங்கும் திட்டம்

## 400பேர் பங்கேற்று பயனடைவு

(வவுனியா)

இயலாமையுடன் கூடிய நபர்களை அடையாளப்படுத்துவதற்கான வடக்குமாகாண சபையின் மருத்துவ சான்றிதழ் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் வவுனியா மாவட்ட வலுவிழந்தோருக்கான புனர்வாழ்வு நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கையில் சுமார் 400 பேர் நன்மையடைந்துள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் சமூகசேவைகள் திணைக்களம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சுடன் இணைந்து இந்தத் திட்டம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.




வவுனியா பிரதேச செயலகம் மற்றும் வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகம் ஆகிய இரண்டு பிரிவுகளிலும் ஏழு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டதாக வவுனியா மாவட்ட வலுவிழந்தோருக்கான நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் இரண்டு மருத்துவ முகாம்களும், வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் ஐந்து மருத்துவ முகாம்களும் வவுனியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தைச் சேர்ந்த டாக்டர் லவன் மற்றும் டாக்டர் மதிதரன் ஆகியோரும் வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த டாக்டர் செந்தூர்பதிராஜா ஆகியோர் தமது மருத்துவ தாதிகள் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய அணியினருடன் இணைந்து இந்த மருத்துவ முகாம்களில் பங்கேற்றிருந்தனர்.

இந்த மருத்துவ முகாம்களை செயற்படுத்துவதற்கு ஐ.டபிள்யூ.பி.ஆர் என்ற யுத்தம் மற்றும் சமாதானத்திற்கான அறிக்கையிடல் நிறுவனம் நலிவுற்றோரின் சட்டரீதியான அடையாளப்படுத்தல் உரிமைத் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (2-4)

# கலைத் தரிசனம்



## இசைவாணர் கண்ணன் அவர்களுடனான நேர்காணல்

*மாவீரர் நாளன்று மாவீரர் துயிலும் இல்லத்தில் ஒலிக்கும் "தாயகக்கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே" என்ற பாடலிற்கு இசையமைத்து அந்தப் பாடலினைக் கேட்பவர் நெஞ்சுருகி கண்ணீர் சிந்தும் வண்ணம் அற்புதமான இசையை அமைத்தவர் இசைவாணர் கண்ணன். உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் கவி வரிகளில் 1987 இல் உருவான "தீலிபன் அழைத்தது சாவையா? இந்த பிஞ்சு வயதினிலே" என்ற பாடலே இவர் இசையமைத்த புரட்சிப் பாடல்களில் முதலாவது பாடலாகும். ஆயிரத்திற்கு மேற்பட்ட புரட்சிப் பாடல்களுக்கும் ஐந்நூறுக்கு மேற்பட்டப் பக்திப் பாடல்களுக்கும் 90 இற்கு மேற்பட்ட நாடகங்களுக்கும் மூன்று முழு நீளத் திரைப் படத்திற்கும் இசையமைத்தவர் 1993.04.26 ஆம் திகதி யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணையில் பிறந்த இவர் 2005 இல் கலாபூஷண விருதையும் தலைவர் வே.பிரபாகரன் அவர்களினால் ஐந்து தடவைகள் பரிசுகளைப் பெற்றதோடு அவரினால் "இசைவாணர்" என்ற பட்டத்தையும் பெற்றார். 1960 இல் யாழ்ப்பாணத்தில் கண்ணன் இசைக்குழுவினை ஆரம்பித்து யாழ்.மண்ணில் முதல் முதலில் ஆரம்பிக்கப்பட்ட இசைக்குழு இதுவெனப் புகழ்பெற்றார். 1983 வரை வெற்றிநடை போட்டு பல இரசிகர்களின் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்தது கண்ணன் இசைக்குழு. முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணர் என்ற இயற்பெயர் கொண்ட இவர் தந்தையாரான முத்துக்குமாரு அவர்களிடம் பதினொரு வயதிலேயே முறைப்படி இசையைப் பயின்று இன்று புகழ்பூத்த- நாடறிந்த மேலைத்தேய, கீழைத்தேய இசையினை மீட்டும் விற்பன்ன ராகத் திகழ்கின்றார். எந்தப் பாடலுக்கும் மெட்டுக் கட்டி இசையைத் தொட்டுக் குழைத்து தருபவர். அவர் வலம்புரிக்கு அளித்த செவ்வினை இங்கே தருகின்றோம்.*



இளையராஜாவிடம் பாராட்டு பெறும் போது...

**★ நீங்கள் இசைத்துறைக்குள் எவ்வாறு கால்பதித்தீர்கள்?**

எனக்குச் சிறுவயதிலேயே இயல்பாக இசையில் ஆர்வம் ஏற்பட்டது. என்னுடைய தந்தையார் இசைத்துறையிலும் நாடகத்துறையிலும் மிகவும் ஈடுபாடுடையவர். எனது வீட்டிலேயே எனது தந்தையாரிடம் கற்றேன். எனது தந்தையாரிடம் இசைஞானமும் இசையைக் கற்பிக்கும் முறைமையும் அவர் கூடவே இருந்தது. எனது வீட்டிலேயே தந்தையாரின் இசைக்கருவிகள் இருந்தன. அதனால் எந்நேரத்திலும் இசைக் கருவிகளை எடுத்து வாசித்துப் பார்ப்பேன். ஆர்மோனியம், வயலின், கீபோட், பியானோ, எக்கோடியன், தபேலா, மிருதங்கம் போன்றவற்றை வாசித்துப் பழகினேன். இவ்வாறு சிறுவயதிலேயே தந்தையாரிடம் பழகி அப்படி இசைத்துறைக்குள் கால் பதித்தேன்.

**★ நீங்கள் இதுவரைக்கும் எத்தனை புரட்சிப் பாடல்களுக்கு இசையமைத்துள்ளீர்கள்? அதில் முதலாவது பாடல் எது?**

நான் ஆயிரத்திற்கு மேற்பட்ட புரட்சிப் பாடல்களுக்கு இசையமைத்துள்ளேன். நான் முதலாவது இசையமைத்த புரட்சிப் பாடல் "திலீபன் அழைத்தது சாவையா இந்தப் பிஞ்சு வயதினிலே" என்ற பாடல்தான் இப்பாடலை உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் 1987 இல் எழுதினார்.

**★ நீங்கள் இசையமைத்த பாடல்களில் "தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தப்பேழைகளே" என்ற பாடல் மிகவும் அற்புதமான பாடல். அந்தப் பாடலுக்கான இசை அனுபவத்தைக் கூறுங்கள்?**

இந்தப்பாடலினைகவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் எழுதினார். இப்பாடலினை வர்ணராமேஸ், மணிமொழி ஆகியோர் இணைந்து பாடினார்கள்.

இப்பாடலினை யாழ்ப்பாணத்தில் தான் ஒலிப்பதிவு செய்திருந்தோம். இந்தப்பாடலிற்கான மெட்டை அமைத்து நான் பாடிய போது கலையகத்தில் இருந்த மூன்று பேர்கள் உடனேயே அழுதுவிட்டார்கள். ஒலிப்பதிவுக்குப் பின்னர் இப்பாடலினைக் கேட்ட துறைசார்ந்தவர்கள், மாவீரர் நாளன்று துயிலும் இல்லத்தில் மட்டும் ஒலிபரப்பினால் மிகவும் நன்றாக இருக்கும் எனத் தீர்மானித்து மாவீரர் நாளன்று துயிலும் இல்லத்தில் மட்டும் அப் பாடலினை ஒலிக்க வைத்தனர். இப்பாடலுக்கான இசை அனுபவம் திருப்தி என்றே கூறுகின்றேன்.

**★ தாங்கள் இசையமைத்த நாடகங்கள் பற்றி...?**

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகங்களுக்குக்கும் அவைக் காற்றுகைக் கழகப் பாலேந்திராவின் நாடகங்கள், அ.தாசீசியஸின் நாடகங்கள், பேராசிரியர் சி.மௌனகுருவின் நாடகங்கள், சிதம்பரநாதனின் நாடகங்கள் என 90 இற்கு மேற்பட்ட நாடகங்களுக்கு இசையமைத்துள்ளேன். இவற்றுடன் 1985 ஆம் ஆண்டு குழந்தை ம.சண்முகலிங்கத்தினால் தயாரித்த "மண் சுமந்த மேனியர்" என்ற நாடகம் 65 அரங்க அளிக்கைகளைச் செய்திருந்தது. இந்த 65 அரங்க அளிக்கைகளிலும் மண்சுமந்த மேனியருக்கான நாடகத்திற்கு இசையை வழங்கியிருந்தேன்.

**★ தாங்கள் இசையமைத்த முழுநீளத் திரைப்படங்கள் பற்றி?**

தெய்வம் தந்த வீடு, கோமாளிகள், ஏமாளிகள் ஆகிய மூன்று முழுநீளத் திரைப்படங்களுக்கு இசையமைத்துள்ளேன். ஏமாளிகள் திரைப் படத்திற்கான இசையமைப்பைக் கொழும்பில் செய்து கொண்டிருந்த போது இசைஞானி இளையராஜா வருகை தந்து அப்படத்திற்கான இசையமைப்பைப் பார்வையிட்டுச் சென்றார்.

**★ இன்றைய மாணவர்களின் இசை ஆர்வம் எப்படியிருக்கிறது?**

இன்றைய சூழலில் மாணவர்களுக்கு இசையைப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் வந்துவிட்டது. இவர்களிடத்தில் சீக்கிரத்தில் இசையைப் பழகி முடித்து விடலாம் என்ற அவசரம் இருக்கிறது. ஆனால் அவர்கள் கஷ்டப்படவிரும்பவில்லை. அவர்கள் கஷ்டப்பட வேண்டும். அப்படியென்றால்தான் வெற்றி கிட்டும். இசையைப் படிக்க வேண்டும். எப்படித் தமது பாடசாலைக் கல்வியை ஆர்வத்தோடு படிக்கிறார்களோ அதே மாதிரி இசையைப் படிக்க வேண்டும். வைத்தியராவதற்கு, பொறியியலாளராவதற்கு, சட்டத்தரணியாவதற்கு, முகாமையாளராவதற்கு படிக்கிறபோது எப்படியான ஆர்வத்தை காட்டிப் படிக்கின்றார்களோ அதே ஆர்வத்தை இசையிலும் காட்டிப் படிக்க வேண்டும். அப்படி படித்தால் பெரிய இசைஞர்களை உருவாக்கலாம். வெறுமனே ஓரிரு பாடல்களுக்கு வாசித்தால் மட்டும் போதாது. அவர்கள் தொடர் இசைப் பயிற்சியினால் பல பாடல்களுக்கும் இசைக்கப் பழக வேண்டும். மாணவர்கள் பொறுமையாக இருந்து இசையைப் பயில வேண்டும். அப்படிப் பொறுமையைக் கடைப்பிடித்தால் அவர்கள் நிச்சயம் வெற்றியடைவார்கள்.

**★ யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்ற முதல் இசைக்குழுவாக தங்களின் கண்ணன் இசைக்குழு இருந்தது. தங்களின் இசைக்குழு பற்றி?**

யாழ்ப்பாணத்தில் இசைக்குழுக்கள்ஏதும்இல்லாத காலம். இதனை உணர்ந்து 1960 ஆம் ஆண்டு "கண்ணன் இசைக்குழுவை" ஆரம்பித்தேன். இந்த இசைக்குழு பல்வேறு இடங்களிலும் இசை அரங்கேற்றங்களைச் செய்து பல இரசிகர்களைச் சம்பாதித்தது. மக்களும் பெரிதும் எமது இசைக் குழு வினை விரும்பினர். தகுந்த பாடகர் கள், தகுந்த அறிவிப்பாளர்கள், தகுந்த இசைஞர்கள் என யாவரும் தகுதிபட விளங்கினர். 1983ஆம் ஆண்டு வரை அதாவது 23 வருடங்கள் இவ் இசைக்குழு வெற்றி நடைபோட்டது. பின்னர் 1983 இனக் கலவரம் தொடங்கிய பிற்பாடு இடம் பெயர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதனால் கலைஞர்கள் யாவரும் சிதறிப் போய்விட்டார்கள். இசை அரங்கேற்றத்தைச் செய்வதற்குரிய சூழலும் இருக்கவில்லை. அப்படியே போரும் பல நெருக்கடிகளை உருவாக்கித் தந்தது. இந்நிலையில் முற்றுமுழுதாக இசைக் குழுவைக் கைவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பின்னர் றேடியோ சிலோன் நிகழ்ச்சிகளுக்குரிய இசை அரங்கேற்றங்களைச் செய்து கொண்டிருந்தேன். அப்படி முழுநீளத் திரைப் படத்திற்கான இசையமைப்பினைச் செய்து கொண்டிருந்தேன். தற்பொழுது பக்திப்பாடல்களுக்கான இறுவெட்டுக்களைச் செய்து கொண்டிருக்கின்றேன். தொடர்ந்தும் இதர இசைப்பணிகளை முன்னெடுத்துக் கொண்டிருப்பதனால் மீண்டும் கண்ணன் இசைக்குழுவை ஆரம்பித்து நடத்துவதில் சிரமமாகவுள்ளது. தற்பொழுது யாழ்ப்பாணத்தில் பல இசைக்குழுக்கள் இருக்கின்றன. அதனால் புதிதாக மீண்டும எமது இசைக்குழுவின் தேவை தேவைப்படும் என்று நான் நினைக்கவில்லை.

**★ சிறந்த இசையமைப்பாளருக்கு இருக்கவேண்டிய பண்புகள் பற்றி...?**

முதலில் அவருக்குப் பொறுமை இருக்க வேண்டும். கோபப்படக் கூடாது. இதர கலைஞர்களோடு பண்பாக நடந்து கொள்ள வேண்டும். எல்லோரிடமும் அன்பாகப் பழகவேண்டும். மற்றக்கலைஞர்களை மதிக்கத் தெரிய வேண்டும் நான்பெரிது, அவன் சிறிது என்றில்லாமல் சின்னக்கலைஞனாக இருந்தாலும் மதிப்புக் கொடுக்கப்பழக வேண்டும். விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனது இசையைச் சரியாக வழங்க வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும். இசையமைப்பு சார்ந்த இலக்கணங்கள், இலக்கியங்களைத் தெரிந்திருக்க வேண்டும். பிறநாட்டு இசையைப் பற்றிய அறிவிருக்க வேண்டும். அதிலுள்ள இசை நுணுக்கங்களைப்பார்க்கவேண்டும். அந்த இசை சிறந்தது. இந்த இசை சிறந்தது என்றோ அது பெரிது இது பெரிது என்றோ பார்க்கின்ற தன்மை இருக்கக்கூடாது.

சிறியதிலிருந்து எவற்றைக் கற்றுக்கொள்ளலாம். பெரியவற்றிலிருந்து எவற்றைக் கற்றுக் கொள்ளலாம் என்று பார்க்க வேண்டும் எங்களிடம் இல்லாத திறமை மற்றவரிடம் இருக்கும். அந்தத்திறன் வெளிப்பாட்டைக் கவனிக்க வேண்டும். பாட்டிற்குத் தகுந்த இசையை வழங்க வேண்டும். ஒவ்வொரு பாட்டிற்கும் எப்படிப் புதிய புதிய இசையமைப்பை மேற்கொள்ளலாம் எனச் சிந்திக்க வேண்டும். தான் செய்த இசையை ஒப்பு நோக்குகின்ற பண்பினைக் கொண்டிருக்க வேண்டும். அடிப்படையில் இசைஞானம் இருக்க வேண்டும்.

**★ இறுதியாக நீங்கள் இசையுலகிற்கு மனந்திறந்து கூறுவது?**

இசை எங்களுடைய நாட்டின் சொத்து. இசைத்துறையை வளர்க்க ஊக்கம் கொடுக்க வேண்டும். இசைக் கலைஞர்களை உருவாக்குவது எமது பாரிய பொறுப்பாகும். நல்ல தகுதியான முறையில் ஆக்கபூர்வமான இசைக் கலைஞர்களை உருவாக்க வேண்டும். நேர்மையாக இசையைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

மனச்சாட்சியாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். கேளிக்கைக்காக, வயிற்றுப் பிழைப்பிற்காக இசையைப் பயன்படுத்துவதை விடுத்து இசையை வளர்க்க வேண்டும் என்ற நோக்கில் கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஏற்கனவே நாங்கள் இசைத்துறையில் பின்தங்கித்தான் இருக்கின்றோம்.

ஆதலால் இசை வகுப்புக்களை விரிவுபடுத்தி இசையின் மேன்மையை உணரவைக்க வேண்டும்.



கண்ணன் இசைக்குழுவுடன்...

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

# வடமராட்சி பகுதியில் பிறப்பு வீதம் குறைவு

## சுகாதார வைத்திய அதிகாரி கவலை

(கரணவாய்)

வடமராட்சியில் தற்போது பிறப்பு வீதம் குறைவடைவடைந்துவருகின்றது என பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி ஜி.செந்தூரன் கவலை வெளியிட்டுள்ளார்.

பருத்தித்துறை பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத, உள்ளூராட்சி மாத பரிசளிப்பு விழாவும் சென்னி சஞ்சிகை வெளியீட்டு விழாவும் நேற்று முன்தினம் பருத்தித் துறை பிரதேசசபை மண்ட பத்தில் செயலாளர் சி.சிறிபாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மருதங்கேணிப் பகுதியில் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் புதிய சுகாதார வைத்திய அதிகாரி மணிமனையின் கீழ் இயங்கவுள்ளது.

அதேபோல் பருத்தித்துறைப் பிரதேச சபையின் கீழ் உள்ள அப்பகுதியும் மருதங்கேணி பிரதேச சபையாக பிரிக்கப்படும் இடத்து பெருமளவான அபிவிருத்திகளைமேற்கொள்ள முடியும்.

முன்பள்ளிப் பருவத்திலேயே சிறார்களின் வளர்ச்சி தூண்டப்படுகிறது. அதற்கு சிறார்களின் ஆரோக்கியம் பேணுவதில் முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும் வடமராட்சிப் பகுதியில் அண்மைய காலங்களாக பிறப்பு வீதம் குறைவடைந்து வருகின்றது என்ற கவலையையும் அவர் வெளியிட்டார். (இ-60)

# ராம மோகன ராவ் வீட்டில் நடந்த சோதனையில் விதிமீறல் இல்லை

## வருமான வரித்துறை விளக்கம்



ராம மோகன ராவ் வீட்டில் நடந்த சோதனையில் விதிமீறல்கள் எதுவும் இல்லை என்று வருமான வரித்துறை விளக்கம் அளித்துள்ளது.

முன்னாள் தமிழக தலைமைச் செயலாளர் ராம மோகன ராவ் வீட்டில் நடத்தப்பட்ட சோதனை குறித்து வருமான வரித்துறை சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது,

சேகர் ரெட்டிக்கும், ராம மோகன ராவின் மகன் விவேக்குக்கும் தொழில் ரீதியாக தொடர்பு உள்ளது. அதற்கான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளன. சேகர் ரெட்டி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவருடன் தொடர்புடைய நபர்கள் வீட்டிலும் சோதனை நடத்தினோம். எனவே, விவேக் வீட்டில் சோதனை நடத்த 'வாரன்ட்' பெறப்பட்டது. அந்த வாரன்டை வைத்துத்தான் மற்ற இடங்களிலும் சோதனை நடத்தினோம்.

சோதனைக்கு உட்படுத்தப்படும் நபரின் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளிலும் சோதனை நடத்துவது வழக்கம். அந்த வகையில் விவேக்கின் தந்தை என்ற அடிப்படையில் ராம மோகன ராவ் வீட்டிலும் சோதனை நடத்தப்பட்டது. அதற்கான அதிகாரம் வருமான வரித்துறைக்கு உள்ளது.

சோதனையின்போது பாதுகாப்புக்காக மட்டுமே துணை இராணுவத்தை பயன்படுத்தினோம். யாரையும் மிரட்டுவதற்காக அல்ல. பிற மாநிலங்களில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்திய போது பலமுறை துணை இராணுவத்தினரை பயன்படுத்தி உள்ளனர். துணை இராணுவத்'தை பயன் படுத்தக் கூடாது என்று எந்த விதியும் இல்லை.

ராம மோகன ராவ் வீட்டிலும் தலைமைச் செயலகத்தில் உள்ள அவரது அறையிலும் சோதனை நடத்துவதற்கு யார் அனுமதி கொடுத்தார்கள் என்று கேட்கின்றனர். அந்த அனுமதி டில்லியில் இருந்து கொடுக்கப்பட்டது. அந்த அனுமதியின் பேரில்தான் தலைமைச் செயலகத்தில் சோதனை நடத்தப்பட்டது.

வருமான வரித்துறை சோதனை நடத்துவதற்கு யாரிடமும் தகவல் தெரிவிக்கவோ, அனுமதி பெற வேண்டிய அவசியமோ இல்லை. சட்டத்துக்கு உட்பட்டுத்தான் தலைமைச் செயலகத்திலும் சோதனை நடத்தப்பட்டுள்ளது. ஆதாரங்கள் இருக்கும் பட்சத்தில் எந்த இடத்திலும் சோதனை நடத்த வருமான வரித்துறைக்கு முழு சுதந்திரம் உண்டு.

சோதனைக்கு முன்பு யாருக்கும் தகவல் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை. சட்ட விதி முறைகளை பின்பற்றிதான் அனைத்து இடங்களிலும் சோதனை நடத்தப்பட்டது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (இ-7)

# ஆழிப்பேரலை காவு கொண்ட மக்களுக்கு ஜேர்மனியில் அஞ்சலி

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் காவுகொள்ளப்பட்ட மக்களுக்கான 12 ஆம் ஆண்டு அஞ்சலி வணக்க நிகழ்வு ஜேர்மனியில் அனுட்டிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியின் பல்வேறு இடங்களிலும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

ஆலன் நகரில் உள்ள தேவாலயத்தில் இடம்பெற்ற அஞ்சலியில், நகர மதகுருவுடன் இணைந்து புலம்பெயர் தாயக மக்கள் பங்கேற்றிருந்ததுடன் இதன்போது ஆழிப் பேரலையால் காவு கொள்ளப்பட்ட மக்களையும், ஜேர்மன் தலைநகர் பேர்லினில் படுகொலை செய்யப்பட்ட மக்களையும் நினைவுகூர்ந்து சுடரேற்றினர். (இ-10)


# அந்தியேட்டி அழைப்பிதழும் நன்றி கூறலும்

அமரர் முருகேசு அருளம்பலம்

(இளைப்பாறிய CTB சாலைப் பரிசோதகர்)



02.12.2016 அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தந்தையார் அமரர் முருகேசு அருளம்பலம் அவர்களின் ஈமைக்கிரியையில் கலந்து கொண்டு எமது துயரத்தில் பங்குகொண்டவர்கட்கு நன்றியைத் தெரிவிப்பதோடு 31.12.2016 சனிக்கிழமை கரவெட்டி தேவா மணிமண்டபத்தில் (சாமியன் அரசடி) நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நெடுங்கேணி
கரவெட்டி கிழக்கு
கரவெட்டி.

(7192)

குடும்பத்தினர்


# இரண்டாவது ஆண்டு பூர்த்தி விழாவுக்கு ஆந்திர முதல்வருக்கு மைத்திரி அழைப்பு



ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடுவிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார் என இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கை தேசிய அரசாங்கத்தின் இரண்டாம் வருட பூர்த்தி நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவே ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

மேலும், 2017ஆம்ஆண்டு முதல் இலங்கையின் வளர்ச்சி, அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் கன்று பிடிப்பு ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் வறுமை ஒழிப்புத் திட்டம் ஒன்று தொடங்கப்பட உள்ளதாகவும் குறித்த அழைப்பு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வறுமையை ஒழிப்பது தொடர்பிலும் குறித்த சந்திப்பின் போது கலந்துரையாடல்கள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேசிய அரசாங்கத்தின் முதலாவது ஆண்டு பூர்த்தியின் போது முன்னாள் மேற்கு வங்காள ஆளுநர் கோபால கிருஸ்ண காந்தி கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)


# கண்ணீர் அஞ்சலி

அமரர் திருமதி சரோஜினிதேவி அருணகிரிநாதன்



எமது கல்லூரி ஆசிரியர் அ.சிவரூபன் அவர்களின் அன்புத் தாயார் அமரர் திருமதி சரோஜினிதேவி அருணகிரிநாதன் அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

(சி-7042)



# கண்ணீர் அஞ்சலி

அமரர் கந்தர்-குலத்திங்கம்



எமது கல்லூரி ஆசிரியர் கு.தயாபரன் அவர்களின் அன்புத் தந்தை அமரர் கந்தர்-குலத்திங்கம் அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.


# திருவாசக முற்றோதல்

நெல்லியடி தடாங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்வு எதிர்வரும் 01.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (இ)


யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ...
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்
'மதசார்பற்றது' 'ரகசியமானது' * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவுனியா (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

## நேரில் ஆஜராகாமல் பத்திரிகையாளர்களிடம் விளக்கம்

# ராம மோகனராவ் மீது நடவடிக்கை? வருமான வரித்துறையினர் ஆலோசனை



சம்மன் அனுப்பிய நிலையில் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்காமல் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்ததால் ராம மோகனராவ் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து வருமான வரித்துறை அதிகாரிகள் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

தமிழக தலைமைச் செயலாளராக இருந்த ராம மோகனராவ், அவரது மகன் விவேக், நண்பர் அமலநாதன் உள்ளிட்டோரின் வீடு, அலுவலகம் என ஒரே நேரத்தில் 14 இடங்களில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர். அப்போது கோடிக்கணக்கான மதிப்புள்ள பணம், நகை, சொத்து ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக கூறப்பட்டது.

இதைத் தொடர்ந்து நேரில ஆஜராகும்படி ராம மோகனராவ், விவேக், அமலநாதனுக்கு வருமான வரித்துறையினர் சம்மன் அனுப்பினர். அமலநாதன் நேரில் ஆஜராகி விளக்கம் அளித்தார். ராம மோகனராவ், திடீர் நெஞ்சுவலி ஏற்பட்டதாக கூறி கடந்த 24ஆம் திகதி நள்ளிரவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். விவேக்கும் ஆஜராகவில்லை. இதைத் தொடர்ந்து 2 பேரும் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்ற தகவல் வெளியானது.

இந்நிலையில், தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த ராம மோகனராவ் கடந்த திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் வீடு திரும்பினார். வீட்டில் நேற்றுமுன்தினம் காலை பத்திரிகையாளர்களை சந்தித்து பேட்டி அளித்தார். அப்போது, "வருமான வரித்துறை அதிகாரிகள் சட்ட விரோதமாக தனது வீட்டில் சோதனை நடத்தினர்" என குற்றம்சாட்டினார்.

நேரில் வந்து விளக்கம் அளிப்பார் என காத்திருந்த வருமான வரித்துறை அதிகாரிகளுக்கு ராம மோகனராவின் பேட்டி அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதைத் தொடர்ந்து அவரது பேட்டி குறித்த வீடியோ பதிவை டில்லியில் உள்ள தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து ராம மோகனராவ் மீது எடுக்க வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து வருமான வரித்துறை அலுவலகத்தில் அதிகாரிகள் நேற்று முன்தினம் மீண்டும் ஆலோசனை நடத்தினர். (இ-7)

# அதிகார எல்லையைத் தாண்டி ராம மோகனராவ் பேசுகிறார்

## வைகோ குற்றச்சாட்டு



(சென்னை)

ராம மோகனராவ் நேற்று முன்தினம் வெடித்துச் சிதறுவது போல் கருத்துகள் கூறியிருப்பது அவருடைய அதிகார எல்லையையும் தாண்டிப் பேசுவதாக எனக்கு தோன்றுகிறது என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ குற்றம் சாட்டியுள்ளார்.

ராம மோகனராவ் பேட்டி குறித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவிக்கையில்,

இந்தியாவில் இதுவரை எந்த மாநிலத்திலும் ஏற்படாத விசித்திரமான, வித்தியாசமான, அபூர்வமான நிலைமை தமிழகத்தில் ஏற்பட்டு இருக்கிறது. தலைமைச் செயலாளர் இல்லமும் அலுவலகமும் வருமான வரித்துறையினரால் சோதனையிடப்பட்டு உள்ளது. சி.பி.ஐ. விசாரணைக்கு மாநில அரசின் அனுமதி தேவை. வருமான வரித்துறை சோதனைக்கு மாநில அரசின் அனுமதி தேவையில்லை.

மாநில பொலிஸ்துறையை பயன்படுத்தாமல், மத்திய அரசு பொலிஸதுறையை பயன்படுத்துவதற்கு வருமான வரித்துறைக்கு அதிகாரம் இருக்கிறது. ஆயினும் மாநில அரசுக்கும் மாநில பொலிஸ துறைக்கும் தெரிவித்துவிட்டு இப்படிப்பட்ட சோதனையில் ஈடுபடுவது தான் கூட்டாட்சி தத்துவத்திற்கு கேடு செய்யாமல் இருக்கும். ராம மோகனராவ் நேற்று முன்தினம் வெடித்து சிதறுவதுபோல் கருத்துகள் கூறியிருப்பது அவருடைய அதிகார எல்லையையும் தாண்டிப் பேசுவதாக எனக்கு தோன்றுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# ராம மோகனராவ் பேட்டியின் பின்னணியில் இருப்பது யார்?

## பொன்.ராதாகிருஷ்ணன் கேள்வி

ராம மோகனராவ் பேட்டியின் பின்னணியில் இருப்பவர்கள் யார் யார்? என்று கண்டுபிடிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது முழுக்க முழுக்க திட்டமிடப்பட்டு தயாரிக்கப்பட்ட பேட்டி. இதன் பின்னணியில் யார்?, யார்? இருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அரசியல் அமைப்பு சட்டத்தின்படி தன் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்று சொல்லி அரசியல் அமைப்பு சட்டத்தையே கேள்விக் குறியாக்கி இருக்கிறார். அரசு செயலாளர்களுக்கும் ஆட்சியர்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்கிறார். குற்றம் செய்த ஒருவர் தனக்கு நிகராக மற்ற அதிகாரிகளை யும் ஒப்பிட்டுப் பேசுவது அரசு நிர்வாகத்தையே அவமானப்படுத்துவதாகும்.

நான்தான் இன்று தலைமைச் செயலாளர் என்று சொல்லும் ராம மோகனராவுக்கு தமிழக அரசு தான் பதில் சொல்ல வேண்டும். ஆனால், தலைமைச் செயலாளர் பதவி வகித்தவர் ஒரு அரசியல்வாதி போல் பேசி அ.தி.மு.க., பா.ஜ.க. என்று கட்சிகளை இழுக்கலாமா?. மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவை அவமானப்படுத்தி இருக்கிறார். அவர் உயிரோடு இருந்திருந்தால் இதைவிட கடுமையாக தண்டித்து இருப்பார். ஆனால், இந்த சோதனையை அவர் அனுமதித்து இருக்கமாட்டார் என்று அவரை களங்கப்படுத்துவதோடு தூண்டிவிடும் விடயங்களில் ஈடுபட்டுள்ளார்.

இதுபோன்ற தவறுகள் நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் அ.தி.மு.க. உதயமானது. தவறு செய்பவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்தவர் தான் ஜெயலலிதா. மறைந்த பிறகு அவரை அவமானப்படுத்துவது கடும் கண்டனத்துக்குரியது. இந்த நடவடிக்கையை பார்த்து அ.தி.மு.கவில.ரே சந்தோசப்பட்டு இருப்பார்கள். குழப்பத்தை ஏற்படுத்த தூண்டிவிடும் செயலில் ஈடுபட்டுள்ள ராம மோகனராவ் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

தனக்கு பரிகாரம் வேண்டும் என்றால் நீதிமன்றத்தில் முறையிட்டு இருக்கலாம். ஆனால், தவறு செய்த தனக்கு துணையாக மற்றவர்களும் வர வேண்டும் என்று தூண்டி விடுகிறார். மத்திய ரிசர்வ் பொலிஸார் எப்படி வரலாம் என்கிறார்?. அதை கேட்க இவர் யார்?. மத்திய ரிசர்வ் பொலிஸார் வரவேண்டிய கட்டாயத்தை உருவாக்கியது யார்?. தவறான மனிதன் தனது தவறை மறைக்க தலைமை செயலகத்தையும் பயன்படுத்த முடியும் என்பது தெரியும்போது இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகிறது.

இதனால் அரசுக்கும் நிர்வாகத்துக்கும் அவமானம் கிடையாது. இது தனிப்பட்ட முறையில் அவருக்கு ஏற்பட்ட அவமானம். இதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் தான் அரசுக்கு அவமானம்.

வருமான வரித்துறையில் சோதனைக்கும் அரசியல் கட்சிகளுக்கும் என்ன தொடர்பு? அது தனித்து இயங்கும் துறை. அவர்களுக்கு கிடைக்கும் தகவல்படி சோதனை நடத்துகிறார்கள். நடவடிக்கை எடுக்கிறார்கள். சோதனை நடக்கும்போது வீட்டுச் சிறை மாதிரி தான் வைத்திருப்பார்கள். சும்மா சுதந்திரமாகவா அலைய விடுவார்கள்?. யார் வீட்டில் சோதனை நடந்தாலும் இப்படித்தான் நடக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## எங்கள் கட்சியின் வங்கிக்கணக்கில் மட்டும் சோதனை

பகுஜன் சமாஜ் கட்சியின் வங்கிக்கணக்குகளில் மட்டும் ஏன் சோதனை நடைபெற்றது, மற்ற கட்சிகளில் ஏன் நடத்தப்படவில்லை என்று மாயாவதி சரமாரி கேள்வி எழுப்பியுள்ளார். ரூபாய் நோட்டு இரத்து நடவடிக்கைக்கு பிறகு மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சியின் வங்கி கணக்கில் 104 கோடி ரூபாய் பணம் வைப்பு செய்யப்பட்டுள்ளதாக மத்திய அமுலாக்கப் பிரிவு கடந்த திங்களன்று கண்டு பிடித்தது.

யுனைடெட் பாங்க் ஆப் இந்தியாவின் டில்லி கிளையில் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் மாயாவதியின் சகோதரர் ஆனந்த் பெயரிலான கணக்கிலும் சந்தேகத்துக்கு இடமான வகையில் ரூ.1.43 கோடி செலுத்தப்பட்டதும் சர்ச்சையைக் கிளப்பியது. உத்தரப்பிரதேசத்தில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் மாயாவதிகட்சிக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. இந்நிலையில் பகுஜன் சமாஜ் கட்சியின் வங்கிக்கணக்குகளில் மட்டும் ஏன் சோதனை நடைபெற்றது. மற்றகட்சிகளில் ஏன் நடத்தப்படவில்லை என்று மாயாவதி சரமாரி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து மாயாவதி செய்தியாளர்களிடம் கூறுகையில், "அந்த பணம் கட்சியுடையது. கட்சியின் நடவடிக்கைக்காக வங்கியில் விதிமுறைப்படி செலுத்தப்பட்டுள்ளது. பா.ஜ.க. அரசு பகுஜன் சமாஜ் கட்சியின் பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் அமுலாக்கத் துறையை தவறாக பயன்படுத்துகிறது" என்று குற்றம் சாட்டினார். (இ-7)

## வருமான வரித்துறை மீது புகார் சொல்ல ராம மோகனராவுக்கு எந்த தகுதியுமில்லை

"தனது வீடு சோதனையிடப்பட்டதில் வருமான வரித்துறை சித்து மீறியதாகச் சொல்ல ராம மோகனராவுக்கு தகுதியில்லை" என்று சிரேஷ்ட சட்டத்தரணி கே.எம்.விஜயன் கருத்து தெரிவித்துள்ளார்.

முன்னாள் தலைமைச் செயலாளர் ராம மோகனராவ் வீட்டிலும் தலைமைச் செயலகத்தில் உள்ள அவரது அலுவலகத்திலும் அவரின் உறவினர் வீடுகளிலும் அண்மையில் வருமான வரித்துறையினர் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது ரொக்கம், தங்கம், வெள்ளி மற்றும் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. இதையடுத்து திடீரென ஏற்பட்ட உடல்நலக்குறைவு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ராம மோகனராவ், சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய பிறகு நேற்று முன்தினம் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறும்போது, "புரட்சித் தலைவி அம்மா என்னை நியமித்தார்" என்று தெரிவித்தார். தனது வீடு சோதனையிடப்பட்டதில் அத்துமீறி செயற்பட்டதாக வருமான வரித்துறை மீதும் குற்றம் சாட்டினார். அவரது பேட்டி ஐ.ஏ.எஸ். அதிகாரிகள், சட்ட நிபுணர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதுகுறித்து சிரேஷ்ட சட்டத்தரணி கே.எம்.விஜயன் கூறியதாவது.

ஒவ்வொரு பதவிக்கும் நேர்மை, பாரபட்சமின்மை உள்ளது. இவற்றைப் பின்பற்றுவதாக இருந்தால், ராம மோகனராவ் பேட்டி அளித்திருக்கக்கூடாது. அவர் வீட்டில், அலுவலகத்தில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தியபோது எதுவும் கிடைக்கவில்லை என்றால் தன்னை துன்புறுத்தியதாகவோ, அத்துமீறியதாகவோ பேசலாம். ஆனால் இந்த சோதனையில் அதிகளவு பணம் எடுத்த பிறகு பேசுவதற்கு அவருக்குத் தகுதியில்லை.

சோதனை நடத்திய பிறகு வருவாய்க்கு அதிகமாக சொத்து குவித்ததாக அவரைக் கைது செய்திருக்க வேண்டும். இலஞ்ச ஒழிப்பு சட்டத்தின் கீழ் இதுவரை ஏன் கைது செய்யவில்லை? அவர் மீது இத்தகைய நடவடிக்கை எடுக்க சட்டப்பூர்வமாக எந்தத் தடையும் இல்லை என்றார். முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி தேவசகாயம் கூறியதாவது.

ராம மோகனராவ் தலைமைச் செயலாளராக இருந்தபோது தலைமைச் செயலகத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தி ஊழலுக்கான ஆவணத்தை தேடியபோது தமிழகத்துக்கே தலைகுனிவை ஏற்படுத்தினார். இப்போது "புரட்சித் தலைவி அம்மாவால் நியமிக்கப்பட்டவன்" என்று சொல்லி ஐ.ஏ.எஸ். அதிகாரிகளுக்கும் அகில இந்திய ஆட்சிப் பணிக்கும் தீராத அவமானத்தை ஏற்படுத்திவிட்டார் என்றார். (இ-7)

# இனி போர் தொடுக்க மாட்டோம்

## பியர்ல் ஹார்பர் நினைவிடத்தில் ஜப்பான் பிரதமர் உறுதிமொழி



ஹவாய் தீவில் உள்ள பியர்ல் ஹார்பர் பகுதியில் அமெரிக்க கடற்படை தளத்தின் மீது ஜப்பான் தாக்குதல் நடத்திய நினைவுநாள் நிகழ்ச்சியில் பங்கேற்ற ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே, நாங்கள் இனி போர் தொடுக்க மாட்டோம் என உறுதிமொழி வழங்கினார்.

1939 முதல் 1945 வரை நடந்த இரண்டாம் உலகப் போரில் பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ் ஆகியவை நேச நாடுகள் என்றும் எதிர் அணியில் அச்சு நாடுகள் என்று அழைக்கப்பட்ட ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஒன்று சேர்ந்து போரிட்டன.

சுமார் ஆறாண்டுகள் நீடித்த இந்த இரண்டாம் உலகப்போரின் போது, ஹவாய் தீவுகளில் உள்ள அமெரிக்காவின் பியர்ல் ஹார்பர் கடற்படைத் தளத்தைத் தாக்க தனது படைகளுக்கு உத்தரவிட்டார் ஜப்பான் இராணுவ தளபதி ஜெனரல் டோஜோ.

யுத்த விதிகளின்படி முறையான முன்கூட்டியே அறிவிப்புச் செய்யாமல் எந்த நாடும் இன்னொரு நாட்டைத் தாக்கக் கூடாது. ஆனால் எச்சரிக்கை செய்தால் அமெரிக்கா உஷார் ஆகிவிடும் என்பதால் எதிர்பாராத திடீர் தாக்குதலை ஜப்பான் விமானப்படைகள் நடத்தின.

7-12-1941 அன்று 350 இற்கும் அதிகமான ஜப்பான் போர் விமானங்கள் பயங்கரமான குண்டுகளை வீசி நடத்திய இந்த அதிரடி தாக்குதலில் 20இற்கும் மேற்பட்ட அமெரிக்கப் போர்க்கப்பல்கள் மற்றும் 300இற்கும் மேற்பட்ட போர்விமானங்கள் சேதமடைந்தன.

அமெரிக்காவை சேர்ந்த சுமார் 2400 வீரர்கள் கொல்லப்பட்டனர். தனது கடற்படைதளத்தைத் தாக்கியதால் கோபம் கொண்ட அமெரிக்கா, ஜப்பானுக்கு எதிரான உச்சக்கட்டப் போருக்கு தயாரானது. ஜப்பானை அடித்து ஒடுக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா தீவிரமாக செயற்பட்டது.

இதன் எதிரொலியாக ஜப்பானின் நாகசாகி, ஹிரோஷிமா நகரில் அமெரிக்கா அணுகுண்டுகளை வீசி நடத்திய தாக்குதல், மனிதர்களால் உண்டாக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய பேரழிவாக கருதப்படுகிறது. இந்த சம்பவத்துக்கு பின்னர் அமெரிக்காவிடம் ஜப்பான் சரணடைந்தது. இரண்டாம் உலகப் போரும் முடிவுக்கு வந்தது.

இது ஒருபுறமிருக்க, ஹவாய தீவில் உள்ள பியர்ல் ஹார்பர் பகுதியை ஜப்பான் தாக்கிய நினைவுநாளின்போது அங்கு பலியான 2 ஆயிரத்துக்கும் அதிகமான அமெரிக்க வீரர்களுக்கு ஆண்டுதோறும் அமெரிக்க அரசின் சார்பில் அஞ்சலி செலுத்தப்படுகிறது.

அவ்வகையில், இந்த ஆண்டு அஞ்சலி நிகழ்ச்சியில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே ஆகியோர் நேற்று முன்தினம் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

பலியான வீரர்களுக்காக எழுப்பப்பட்டுள்ள நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செய்த ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே, 'இதே இடத்தில் 75 ஆண்டுகளுக்கு முன்னர் போரினால் பறிக்கப்பட்ட வீரர் - வீராங்கனைகளின் ஆன்மாக்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்து கொள்கிறேன்' என்று தெரிவித்தார்.

'இனி இதைப்போன்ற போரின் பயங்கரங்களை தொடரக்கூடாது என்பதை ஜப்பான் நாட்டு மக்களான நாங்கள் உறுதிமொழியாக ஏற்கிறோம்' என்றும் அவர் தெரிவித்தார்.

பின்னர் பேசிய அமெரிகக ஜனாதிபதி பராக் ஒபாமா, 'இந்த வரலாற்று சிறப்புமிக்க அறிவிப்பு, சமரசத்தின் சக்தியை வெளிப்படுத்துகிறது' என்று தெரிவித்தார்.

'போரினால் ஏற்பட்ட ஆழமான காயங்கள்கூட, நட்புறவுக்கும் அமைதிக்கும் வழி வகுக்கும் என்பது இதன் மூலம் விளங்குகிறது' என்றும் ஒபாமா தெரிவித்தார்.

முன்னதாக, பியர்ல் ஹார்பர் தாக்குதல் சம்பவத்துக்கு ஜப்பான் நாட்டு மக்களின் சாரபில் பிரதமர் ஷின்சோ அபே பகிரங்கமாக மன்னிப்பு கேட்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதற்கு மாறாக, நடந்த சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்ததுடன், இனி ஒருபோதும் போரில் ஈடுபட மாட்டோம் என்னும் பொருள் பட ஷின்சோ அபே பேசியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சசிகலாவை வீட்டைவிட்டு வெளியேற்றிய ஜெயலலிதா

### துக்ளக் ஆசிரியர் தலையங்கம் நினைவுபடுத்தல்

சசிகலா நடராஜன் குடும்பத்தினர் தனக்கெதிராக சதி செய்தது அம்பலமானதால் ஜெயலலிதா அவர்களுக்கு எதிராக அதிரடி முடிவெடுத்தது குறித்து துக்ளக் இதழ் தலையங்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

சசிகலா நடராஜன் குடும்பத்தின் சதி பற்றி மறைந்த துக்ளக் ஆசிரியர் சோ ராமசாமியிடம் ஜெயலலிதா கூறியதாகவும் அவர் தனது நண்பர்களிடம் இது குறித்து கூறியதாகவும் துக்ளக் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

அதில் சசிகலா நடராஜன் குடும்பத்தினர் தனக்கெதிராக சதி செய்தது அம்பலமானதால் ஜெயலலிதா அவர்களை வீட்டை விட்டு வெளியேற்றினார்.

மேலும் தான் அரசியலுக்கு வரமாட்டேன் பதவி ஆசையே இல்லை, அக்காவுககு சேவை செய்வதே நோக்கம் என கூறிவிட்டு மீண்டும் போயஸ் கார்டன் வந்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜெயலலிதா மறைவை அடுத்து சசிகலா தற்போது அதிமுக பொதுச் செயலாளராக முயற்சி செய்வதை அந்த தலையங்கம் விமர்சித்துள்ளது. (இ-7)

## நிதியை முறையாக செலவிட்டால் வரிசெலுத்த தயங்க மாட்டார்கள்

### பிரதமர் மோடி கருத்து



நிதி ஆயோக் உறுப்பினர்கள் மற்றும் பொருளாதார அறிஞர்களுடன் பிரதமர் மோடி நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினார்.

இக்கூட்டத்தில் பிரதமர் பேசும்போது, "இந்த ஆண்டுக்கான பொது பட்ஜெட் முன்னதாகவே தாக்கல் செய்யப் படவுள்ளது. இதனால் நிதியாண்டு தொடங்கும்போது, செலவுக்கான நிதி கிடைக்கப் பெறும். முந்தைய ஆண்டுகளில் பருவ மழைக் காலத்தின் தொடக்கத்தில் தான் செலவுக்கான நிதி கிடைக்கப்பெறும். இதனால் பருவ காலத்தின் தொடக்க மாதங்களில் அரசுத் திட்டங்கள் செயற்படுத்த முடியாத நிலை ஏற்படும். தற்போது இந்தக் குறைபாடு நீக்கும். நேரடி வரிகளுக்கான மத்திய வாரியமும் உற்பத்தி மற்றும் கலால வரிக்கான மத்திய வாரியமும் தங்கள் புள்ளிவிபரங்களை பகிர்ந்துகொள்ள வேணடும். வரி வருவாயை அரசு முறையாக பயன்படுத்தினால் மக்கள் வரி செலுத்த தயங்க மாட்டார்கள்" என்றார்.

இந்தக் கூட்டம் தொடர்பாக நிதி ஆயோக் துணைத் தலைவர் பனகாரியா கூறும்போது, "பட்ஜெட் தயாரிப்பு பணிக்காக, வேலைவாய்ப்பு உருவாக்குதல், வேளாண்மை, திறன் மேம்பாடு, கல்வி, வரிவிதிப்பு, டிஜிற்றல் தொழிலநுட்பம் உள்ளிட்ட துறைகள் குறித்து பொருளாதார நிபுணர்களின் கருத்துகளை பிரதமரும் நிதி அமைச்சரும் கேட்டறிந்தனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## பாராளுமன்ற தேர்தலில் பெனாசீர் மகன் போட்டி



பாகிஸ்தான் பாராளுமன்ற தேர்தலில் பெனாசீர் மகன் போட்டியிட போவதாக அவரது தந்தை ஆசிப் அலி சர்தாரி அறிவித்துள்ளார். பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி.

இவர் கொலை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோவின் கணவர் ஆவார். பாகிஸ்தான் மக்கள் கட்சியைச் சேர்ந்த அவர் கடந்த 18 மாதங்களாக லண்டனில் தங்கியிருந்தார்.

நேற்று முன்தினம் பாகிஸ்தான் திரும்பிய அவர் நேற்று முன்தினம் நடந்த பெனாசீர் பூட்டோவின் 9 ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்ச்சியில் பங்கேற்றார். அதையொட்டி இஸ்லாமாபாத்தில் மிகப்பெரிய பேரணி நடைபெற்றது. பின்னர் பெனாசீர் பூட்டோ அவரது தந்தை சுல்பிகர் அலிபூட்டோ ஆகியோரின் கல்லறைகளில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதைத்தொடர்ந்து நடந்த பொதுக்கூட்டத்தில் ஆசிப் அலி சர்தாரி பேசினார். அப்போது "எனது மகனும், பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவருமான பிலாவல் பூட்டோ பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவார். வெற்றி பெற்று பாராளுமன்றத்தில் அமர்ந்து பணியாற்றுவார்" என அறிவித்தார்.

வெளிநாட்டில் இருந்து திரும்பும் சர்தாரி பல முக்கிய அறிவிப்புகளை வெளியிடுவார். ஆளும் கட்சிக்கு எதிராக பெரிய கூட்டணியை அமைத்து நவாஸ் செரீப் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்துவார் என சிலர் எதிர்பார்த்தனர்.

தனது மகன் பிலாவல் பூட்டோ மகனின் திருமணத்தை அறிவிப்பார் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது. இன்னும் சிலரோ கட்சியில் புதுமுகங்களை அறிமுகம் செய்து வைப்பார் என்றும் கூறினர். ஆனால், அவர் தனது மகன் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதாக மட்டுமே அறிவித்தார். (இ-10)

## விவேக் மீதான பிடி இறுகுகிறது



தமிழக முன்னாள் தலைமைச் செயலாளர் ராம மோகனராவ் நேரில் ஆராகி விளக்கம் அளிப்பார், இல்லையென்றால் கைது செய்யப்படுவார் என்றிருந்த நிலையில் திடீரென நேற்று முன்தினம் பேட்டி அளித்தார்.

இது வருமானவரித் துறை அதிகாரிகளுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. இன்று வருகிறோம்... நாளை வருகிறோம்... என்று தூது அனுப்பி வநதவர்கள் திடீரென எதிராக செயற்பட்டதை வருமான வரித்துறை அதிகாரிகள் எதிர்பார்க்கவில்லை.

இதைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து நேற்று முன்தினம் இரவு வருமான வரித்துறை அதிகாரிகள் ஆலோசித்துள்ளனர். அப்போது, ராம மோகனராவின் மகன் விவேக் மற்றும் அவரது கூட்டாளிகள் மீதான விசாரணையை தீவிரப்படுத்த முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

# விசேட கல்வியின் அண்மைக்கால போக்குகள்



சி. குகன்.
(ஆசிரியர்)
யா/திருக்குடும்ப கன்னியர் மடம் (தே.ப)
(விசேட கல்வி அலகு)

பல்வேறு வகைப்பட்ட விசேட தேவை கொண்ட மாணவர்களின் அவர்களின் விசேட தனித் தன்மைகளை இனங்கண்டு அவர்களின் இயலுமை, இயலாமை என்பவற்றை அவர்களுக்கென விசேடமாக பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் வழங்கப்படும் உதவிச் சேவைகளுடனான கல்வி, விசேட கல்வி என்றழைக்கப்படுகின்றது.

வரலாற்றுக்காலங்களில் விசேட தேவையுடைய பிள்ளைகளின் பிறப்பை தெய்வக் குற்றமாகவும் சாத்தானின் வருகை என்றும் மக்கள் மூடக்கொள்கைகளால் அவர்களை கருணைக் கொலை கூட செய்தனர். ஆனால் பிற்காலத்தில் விஞ்ஞான தொழில்நுட்பம், கல்வியறிவு, மருத்துவம் போன்ற துறைகளின் வளர்ச்சியால் இவ் வெண்ணக்கரு தகர்க்கப்பட்டு ஐ.நா.சபையால் கூட அங்கீகரிக்கப்பட்டு உலகத்திற்கே விழிப்புணர்வை தரும் துறையாக இது வியாபித்துள்ளது.

இவ்வாறு இவ் விசேட தேவையுடைய பிள்ளை என்றால் யார்? என்ற வகைப்பாட்டினை நோக்கின் "உடல், உள, சமூக, மனவெழுச்சி பண்புகளால் பாதிப்படைந்து சாதாரண பிள்ளைகள் போல் இன்றி தமது அடிப்படைத் தேவைகளைக் கூட மேற்கொள்வதில் இடர்படும் பிள்ளைகள் விசேட தேவையுடைய பிள்ளைகள் எனலாம். எனவே இவ்விசேட தேவையுடைய பிள்ளைகள் தொடர்பாகவும் அவர்களின் வகைப்பாடுகள் தொடர்பாகவும் பல்வேறு அமைப்பினர் பல கருத்துக்கள், வகையீடுகள், வரைவிலக்கணங்கள் கூறியுள்ளனர். இருப்பினும் இலங்கையில் பின்வரும் வகையிலேயே விசேட தேவையுடைய பிள்ளைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

1. கேட்டல் குறைபாடு (Hearing Impairment)
2. பார்வைக் குறைபாடு (Visual Impairment)
3. தற்சிந்தனை (Autism)
4. மெதுவான உளவளர்ச்சி (Mental Retardation)
5. உடலியல் குறைபாடு (Orthopedic Impairment)
6. மூளையில் ஏற்பட்ட பாதிப்பு (Brain Injury)
7. மொழிதலும் மொழிக் குறைபாடும் (Speech and Language Impairment)
8. கற்றல் இயலாமை (Learning disabilities)
9. மீத்திறன் (Gifted)
10. உக்கிர மனவெழுச்சி (Emotional Disturbance)
11. பல்வித இயலாமை (Multiple Disabilities)
12. சுகாதாரக் குறைபாடுகள் (Health Impairment)

இவ்வாறு வகையீட்டில் உள்ள மாணவர்களை இணைத்து இலங்கையில் பின்வரும் 5 படிமுறை ரீதியான வளர்ச்சி போக்கினை இத்துறை கொண்டுள்ளது.

I. நிறுவன மயப்படுத்தல்
II. விசேட பாடசாலைகளின் தோற்றம
III. பாடசாலையுடன் ஒன்றிணைத்தல்
IV. விசேட கல்வி அலகுகள்
V. உட்படுத்தல் கல்வி

இவ்வகைப்பாட்டில் இறுதியாக உள்ள உட்படுத்தல் கல்வி நடைமுறைகளே இன்று மிகச் சிறப்பான முறையில் வளர்ச்சிப் போக்கினை கொண்டுள்ளது. உட்படுத்தற் கல்வி முறையானது பிள்ளை மையக் கற்பித்தலைத் தூண்டி நிற்கிறது. "விசேட தேவையுடைய பிள்ளைகளை சாதாரண வகுப்பறை யில் சாதாரண மாணவர்களுடன் இணைந்த அவர்களுக்கான கற்றல் இணை பாடவிதான செயற்பாடு களுக்குரிய சந்தர்ப்பம் வழங்குதல்" உட்படுத்தல் கல்வி முறை எனப்படு கின்றது. இவ்வுட்படுத்தல் கல்வி முறையினூடாக சகபாடிக்கற்றல், மதிப்பீட்டு முறைசார் கல்வி முறைகள், உரிமைகள், இணைப்பாடவிதான சந்தர்ப்பங்கள் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது.

உட்படுத்தல் கல்வியை வலுப்படுத்தும் பிரகடனங்கள், உரிமைகள், சட்டங்கள் பின்வருமாறு அமைகின்றன. இதனூடாக விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு தேசிய ரீதியாகவும் சர்வதேச ரதியாகவும் சமவாய்ப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. மனித உரிமை பிரகடனம் (1948)
2. சிறுவர் உரிமை பிரகடனம் (1989)



3. சிறுவர் உரிமைகள் சமவாயம் (1990)
4. ஐ.நா.சபையின் சகலருக்கும் கல்வி பிரகடனம் (1990)
5. ஐ.நா.இயலாமையுடைய பிள்ளைகளுக்கான சமவாய்ப்பு பிரகடனம் (1993)
6. சலமன்கா பிரகடனம் (1997)
7. கட்டாய கல்வி பிரகடனம் (1997)
8. ஊனமுற்ற நபர்கள் தொடர்பான உரிமைக்கான ஐ.நா.சமவாயம் (2006)

எனவே இவ்வாறான தேசிய, சர்வதேச பிரகடனங்கள் ஊடாக விசேட தேவையுடைய மாணவர்கள நலன்கள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் கட்டியெழுப் பப்படுகின்றது. இலங்கையை பொறுத்த வரையில் பின்வரும் அமைப்புக்கள், நிறுவனங்கள், திணைக்களம் ஊடாக தேசிய விசேட கல்விக் கொள்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தேசிய கல்விக் கொள்கைகளில் விசேட கல்வித்துறையை முன்னெடுப்பதில் தேசிய கல்வி நிறுவகத்தின் (N.I.E) பங்களிப்பு இன்றியமையாதது. 1985 இல் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 25 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் தேசிய கல்வி நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டது. அதில் 1988ஆம் ஆண்டு விசேட கல்வி அலகு ஒரு பிரிவாக உள்வாங்கப்பட்டது. பின் 1991 இல் விசேட கல்வித்துறையாக மாற்றம் பெற்றது. 2004ஆம் ஆண்டிலிருந்து உட்படுத்தல் கல்வித்துறை என்ற பெயருடன் இன்றுவரை சிறப்பாக தனது செயற்பாடுகளை தேசிய ரீதியில் முன்னெடுத்து வருகின்றது.

போன்ற செயற்பாடுகளை சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகின்றன. இவ்வாறு தேசிய ரீதியாக முன்னெடுக்கப்படும் செயல் முறை ரீதியான விடயங்களின் இறுதி நிலையாக இன்று ஒவ்வொரு பாடசாலைகளிலும் காணப்படுகின்ற விசேட கல்வி அலகுகளின் செயற்பாடுகளை தீர்மானிக்கின்றன. அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்களின் உதவியுடன் விசேடகல்வி அலகுகள் வளநிலையங்கள் இன்று நாடளாவிய ரீதியில் செயற்பட்டு வருகின்றன.


**உட்படுத்தல் கல்வியில் / விசேட கல்வி அலகில் மாணவர்களை இணைத்தலில் உள்ள நடைமுறைகள்**

- ஐந்து வயதினை பூர்த்தி செய்த இயலாமையுடைய பிள்ளைகள் பாடசாலை அனுமதிக்காக விண்ணப்பிக்கலாம்.
- தரம் 1 இல் இனங்காணல் செயன்முறைக்கு உட்படுத்தப்படும்.
- விசேட தேவையுடைய பிள்ளை என்று இனங்காணப்பட்டால் (வைத்தியரால்) பாடசாலைகளில் / அலகுகளில்/ வளநிலையங்களில் அவர்கள் இணைக்கப்படுவர்.
- இவ்வாறு ஒரு மாணவரை இணைப்பதற்கு பின்வரும் அம்சங்கள் கட்டாயமானது
  - i. மருத்துவச் சான்றுகள்
  - ii. நோய் நிர்ணய அட்டை
  - iii. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
- விசேட கல்வி அலகுகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் அம் மாணவர்களுக்குரிய சகல செயற்பாடுகளும் திசைமுகப்படுத்தலுடன் மேற்கொள்ளப்படும்.
- விசேட கல்வி அலகுகளில் வைத்து தொடர்ச்சியான பயிற்சி வழிகாட்டல்களுக்கு உள்வாங்கப்பட்டு குறித்த தேர்ச்சிகளை அடைந்த மாணவர்கள் விசேட கல்வி ஆசிரியரின் மேற்பார்வையின் கீழ் சாதாரண வகுப்புகளில் இணைக்கப்படுவர்.
- சில மாணவர்கள் பகுதி அளவில் விசேட கல்வி அலகிலும் வகுப்பறையிலும் இணைந்து பயிற்சிகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களும் உண்டு.
- அதீத இயலாமையுடைய மாணவர்கள் விசேட கல்வி அலகிலேயே முழு நேரமாகவும் இணைத்துக் கொள்ளப்படுவர்.
- விசேட கல்வி அலகில் இணைக்கப்பட்ட மாணவர்கள் குறிப்பாக 16 வயதின் பின்னர் தொழிற்பயிற்சிகளுக்காக தயார்ப்படுத்தலுடன் வழிகாட்டப்படுவர்.

**உட்படுத்தல் / விசேட கல்வி அலகுகளை செயற்படுத்துவதில் உள்ள பின்னடைவுகள்**

i. பெற்றோரின் அக்கறையின்மை
ii. இடப்பற்றாக்குறை
iii. முறையான விசேட கல்வி அலகுகள் இல்லை
iv. வளப்பற்றாக்குறை
v. பரீட்சை பெறுபேறு சித்தி வீதத்தை நோக்கமாக கொள்ளல். இதனால் விசேட தேவையுடைய மாணவர்கள் புறக்கணிக்கப்படல்.
vi. விசேட கல்வி அலகுகளை ஸ்தாபிப்பதில் பாடசாலைகள் நாட்டமின்மை
vii. விசேட கல்வி பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் வேறு துறைகளில் ஈடுபடல்

விசேட கல்வித்துறையான தேசிய ரீதியிலும் மாகாண ரீதியாகவும் வலய ரீதியாகவும் கோட்ட ரீதியாகவும் பாடசாலை ரீதியாகவும ஒவ்வொருவரும் தனித்து உணர்வுபூர்வமான பங்களிப்புடன் மேற்கூறிய நபர்கள் ஊடாக செயற்படுமாயின் நிச்சயம் அதன் பெறுபேறுகள் சர்வதேச மட்டத்தை அடையும் என்பது பிரக்ஞைபூர்வமான உண்மை. இவ்வாறு விசேட கல்வி திறன்சார் விடயங்களை செயற்படுத்த பின்வரும் அம்சங்களை




நடைமுறைப்படுத்தல் சிறப்பானது.

- சிறுவர் முகாம்களை ஒழுங்கமைத்தல்.
- சித்திர ஆக்கத்திறன் அழகியல் போட்டிகள், அதனூடானான கண்காட்சிகளை ஒழுங்கமைத்தல் விழிப்புணர்வு ஆக்கங்களை மேற்கொள்ளல்
- பாடசாலைகள் முதல் கல்விசார், கல்விசாரா நிறுவனங்களினூடாக விழிப்புணர்வு தினங்களை கொண்டாடுதல் (வெள்ளைப் பிரம்பு தினம், ஓட்டிச தினம், டவுண் சிம்றோம் தினம்)
- விசேட தேவையுடைய மாணவர்களையும் ஆசிரியர்களையும் பெற்றோர்களையும் இணைத்து கல்வி சுற்றுலாக்கள் மேற்கொள்ளுதல்
- மருத்துவ முகாம்களை மேற்கொள்ளல்.
- பொதுப்பரீட்சைகளுக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தி சலுகைகள், உரிமைகளை பெற்றுக் கொடுத்தல்
- இணைபாடவிதானங்களில் பாடசாலைகளில் ஈடுபடுத்தல்.
- அரச, அரசசார்பற்ற நிறுவனங்களினூடாக வளங்களை பெறுக்கொடுத்தல் போன்ற செயன்முறை ஒழுங்குகளை மேற்கொள்வதால் விசேட கல்வி செயன்முறைகளை வெற்றி கொள்ள முடியும்.

எவ்வாறு இருப்பினும் நாணயத்திற்கு இரண்டு முகங்கள் இருப்பது போல விசேட கல்வி கல்வி நடைமுறைகளை வெற்றிகொள்வதில் சாதகமான நன்மைகள் இருப்பது போல் சவால்களும் காணப்படுகின்றன. குறிப்பாக பொதுக்கல்வி முறைசார் நடைமுறைகள் பொறுப்பதிகாரிகளின் நெகிழ்ச்சியின்மை, ஆசிரியர்கள் ஆர்வமின்மை, உபகரண பற்றாக் குறை சர்வதேச சந்தர்ப்பங்கள் மெத்தனப் போக்கு, இக்கல்வித் துறைசார் ஆசிரியர்களையும் மாணவர்களையும் சமூகம் நோக்கும் விதம் எதிர்மறைத் தன்மையாகவும் காணப்படல் போன்ற சிறிய சிறிய தடங்கல்கள் இத் துறைசார் வளர்ச்சிக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளன.

முன்பு கல்வித்துறைக்கே கலங்கரை விளக்கமாக திகழ்ந்த வடபகுதி இன்று யுத்த நிலைமைகளால் அதிகளவு விசேட தேவையுடைய பிள்ளைகளை உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பாதிப்படைந்த நிலையில் கொண்டுள்ளது. எனவே எமது எதிர்கால இளம் சமூகத்தினை அவர்களுக்கான சகல உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுக் கொடுப்பதுடன் அவர்களின் மேம்பாட்டிற்காகவும் ஒவ்வொரு துறை சார்ந்தவர்களும் ஒன்றாக இணைந்து தத்தம் கடமைகளை ஒன்றிணைந்த முழு மனதுடன் செயற்பட்டால் எவரெட்ஸ் சிகரம் என்ன? அதனையும் தாண்டி எமது பிள்ளைகளைக் கொண்டு செல்லலாம் என்பது வெளிப்படை உண்மையாகும்.

# 24 மணித்தியாலங்களுக்குள் விபத்துக்களால் 11 பேர் பலி!

(கொழும்பு)

**கடந்த 24 மணித்தியால காலப் பகுதியில் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 11 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

வவுனியா, மஹரகம, குருநாகல், தம்புள்ளை வீதியிலுள்ள பக்னிகொல்ல ஆகிய பிரதேசங்களிலும் ஏனைய பகுதிகளிலும் இடம்பெற்ற விபத்துக்களிலேயே இவர்கள் உயிரிழந்துள்ளனர். தூக்கம், வேகத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமை போன்றன இந்த விபத்துக்களுக்கான காரணங்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு இறந்தவர்களுள் இரு வைத்தியர்களும் உள்ளடங்குகின்றனர்.

இவர்களுள் ஒருவர் விசேட வைத்திய அதிகாரி என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ஐ.தே.கவுக்கு வாக்களித்தவர்களே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் - மகிந்த

"போக்குவரத்துச் சட்ட விதிகளை மீறும் வாகன சாரதிகளுக்கு அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தண்டப் பணத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்களில் அநேகர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தவர்களாவர். ஆர்ப்பாட்டம் செய்யக் கூடிய உரிமை வழங்கப்பட வேண்டும். அதற்கான உரிமை அவர்களுக்கு உள்ளது. இல்லாவிட்டால் இதைவிடவும் பிரச்சினை ஏற்படும்" என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.



நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு நேற்று முன்தினம் பிற்பகல் சென்ற அவர், கைதுசெய்யப்பட்டு அடைத்து வைக்கப்பட்டுள்ள மேல்மாகாண சபை உறுப்பினர்களான ஆனந்த ஹரிச்சந்திர, லலந்த குணசேகரவைப் பார்த்து, நலன் விசாரித்ததன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த போக்குவரத்து தண்டப் பணத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, நீர்கொழும்பில் ஆட்டோச் சாரதிகள் மற்றும் பேருந்துச் சாரதிகள் நடத்திய ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு வழங்கியமை உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பேரில் இவ்விருவரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

"அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆயினும், பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலான கத்தோலிக்கர்கள் சிறைச்சாலையில் உள்ளனர்.

இதனால், நத்தார் உற்சவத்தைக் கொண்டாட முடியாத நிலைமை அவர்களின் குடும்பத்தினருக்கு ஏற்பட்டிருந்தது.

ஜனவரி இரண்டாம் திகதி பாடசாலை ஆரம்பமாகவுள்ளது.

ஆயினும், தமது பிள்ளைகளுக்கு 'பாடசாலை கற்றல் உபகரணங்களை வாங்கிக் கொடுக்க முடியாமல், நத்தார் பெருநாளை குடும்பத்துடன் கொண்டாட முடியாமல் அவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

அதிகரிக்கப்பட்டுள்ள தண்டப் பணத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவர்களில் அநேகர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தவர்களாவர். ஆர்ப்பாட்டம்செய்வதற்கான உரிமை அவர்களுக்கு உள்ளது. இல்லாவிட்டால் இதைவிட பிரச்சினை ஏற்படும்.

நாங்கள் நாட்டைக் கட்டியெழுப்பியுள்ளோம். இதனை யாரும் மறுக்க முடியாது. வெறுமையாக இருந்த காணியில் துறைமுகம் அமைத்தோம். துறைமுகத்தை நகரமாக்கினோம். தற்போது எல்லாவற்றையும் விற்பனை செய்ய ஏலம் விட்டிருக்கிறார்கள்.

நாங்கள் காணிகளின் பெறுமதியை இதன் மூலம் அதிகரித்திருக்கிறோம். அடுத்த வருடம் பிரச்சினைக்குரிய வருடமாக அமையும் என நினைக்கிறேன்.

ஏனென்றால், தற்போது அரசியலமைப்பு, தனியார்மயப்படுத்தல் என கூறுகிறார்கள். அவ்வாறு கூறுகின்றவர்களோ, நாட்டை விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ளார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# மின்தடைக்கு முகம் கொடுக்கப் போகும் இலங்கை

நாட்டில் தொடர்ச்சியாக வரட்சியான காலநிலை நிலவுவதன் காரணமாக எதிர்காலத்தில் மின் விநியோகத் தடைகள் ஏற்படும் என இலங்கை பொதுப் பயன்பாட்டுகள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தமித குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கு முகம்கொடுக்கும் வகையிலான பரிந்துரைகளை இலங்கை மின்சார சபைக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

நாட்டில் தொடர்ந்தும் நீடித்துள்ள வரட்சியின் காரணமாக பிரதான நீர் தேக்கங்களில் நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், இதன் காரணமாக சுமார் 500 மெகா வோட்ஸ் மின் உற்பத்தி தடைப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இந்நிலை தொடர்ந்தும் நீடிக்குமாக இருந்தால் மின் விநியோகத்தில் பிரச்சினை ஏற்பட கூடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள திருத்தப்பணிகள் காரணமாக சுமார் 270 மெகா வோட் மின் உற்பத்தி தடைப்பட்டுள்ளதாக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தற்போது நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் 39 வீத மின் உற்பத்தி குறைவடைந்துள்ளதாகவும், விரைவில் திருத்தப்பணிகளை செய்து முடிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# ரட்ணசிறியின் இறுதிக் கிரியைகள் அரச மரியாதையுடன் 31ஆம் திகதி



(கொழும்பு)

காலஞ்சென்ற முன்னாள் பிரதமரும் மூத்த அரசியல்வாதியுமான ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக அவரது குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.

அவரது இல்லம் அமைந்துள்ள ஹொரணவில் இதனை நடத்தத் தீர்மானித்துள்ளதாக அவரது மகனும் கூட்டு எதிர்க்கட்சி சார்பு பாராளுமன்ற உறுப்பினருமான விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

இவரின் இறுதிக் கிரியைகள் அரச மரியாதையுடன் இடம்பெறுவதற்கான சகல ஏற்பாடுகளையும்மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவு பிறப்பித்துள்ளார். (இ-10)

# இன்று ஒரு தகவல்

## காரியம் பெரிதா? வீரியம் பெரிதா?

ஒருவர் தன்னிடம் வேலை பார்ப்பவரிடம் தனக்கு ஓரளவு தெரிந்த ஒரு பத்திரிகை நிறுவனத்திற்குப் போய் ஒரு பழைய திகதியை உடைய நாளிதழ் ஒன்றை வாங்கிவரச் சொல்லி அனுப்பினார்.

ஒரு கடிதம் கொடுத்து அனுப்பியிருக்கலாம். வேலை எளிதாக முடிந்திருக்கும்.

வேலையாள் போனார். ஒரு தெரிந்த பெயரைச் சொன்னதற்காகவேனும் அந்த நாளிதழை எடுத்துக் கொடுத்திருக்கலாம். அவருக்கு அந்த நேரம் என்ன மனநிலையோ தெரியவில்லை. நான்கு கேள்விகளை அந்த வேலையாளை நம்பாதவர் போல் கேட்டார். குறிப்பாக அவர்தான் உன்னை அனுப்பினார் என்பது என்ன நிச்சயம்? என்று கேட்டார்.

வேலையாளுக்குப் பொறுமை பறந்துவிட்டது. சார்! இஷ்டமிருந்தாக் குடுங்க! நம்பாட்டிப்போங்க. நீங்க சொன்னதைப் போய் அப்படியே சொல்லிடறேன் என்று நறுக்குத் தெரித்தாற் போல் பேசிவிட்டுக் கிளம்பிவிட்டார்.

நடந்ததைச் சொன்னதும் வேலையாளை அனுப்பியவர், வேலையாளை விடுவிடு என்று விட்டார்.

நான் லெட்டர் குடுத்து அனுப்பாதது தப்புதான். நீ கொஞ்சம் பொறுமையாய் பதில் சொல்லியிருக்கணும். அதை நீ செய்யவே இல்லை. அங்கேயிருந்து அவரைப் போன் பண்ணிக் கேளுங்க சார் என்று தயவாகக் கேட்டிருக்கலாம். வீணாக இதை நீ உனக்கு ஏற்பட்ட கௌரவப் பிரச்சினையாக ஆக்கிட்டே என்று வேலையாளை மடக்கினார்.

இப்படித்தான் பலரும் தங்களுடைய வீறாப்பு, கௌரவப் பிரச்சினை, கோபம் ஆகியவை காரணமாக வீரியத்தைப் பெரிதாக எண்ணிக் காரியத்தைக் கோட்டை விட்டுவிடுகிறார்கள்.

நான் உதவி கேட்டுப் போனேன். அவன் சரியாப் பேசலை. பழசையெல்லாம் மறந்திட்டியா? என நாலு வார்த்தை நாக்கைப் பிடுங்கிக்கிற மாதிரி நல்லாக் கேட்டுப்புட்டு வந்துட்டேன் ஆமா! என்று தான் செய்த மடத்தனத்தை ஊரறியச் சொல்லிக் கொண்டிருப்பார்கள் சிலர்.

கடன் வசூல் செய்யப் போனவர் பொறுமையிழந்து எனக்கு வேண்டாம் உன் பிச்சைக் காசு! என்று பேசி ஒரே நிமிடத்தில் பெரிய தொகையை இழந்து விடுவார்கள்.

பஸ்ஸில் சில்லறை எடுத்துப்போகாமல் பெரிய நோட்டை நீட்ட கண்டக்டர் சத்தமிட ஒரு கண்டக்டர் நியாயப்படி சில்லறை வச்சுக்கணுமா வேணாமா? என நியாயம் (?!) பேசி பஸ்ஸை விட்டே சிலர் வனாந்தரத்தில் இறக்கி விடப்படுவதும் உண்டு. மறதி! கோவிச்சுக்காதீங்க! என்று பேசிப் பயணத்தை தொடர்வது அல்லவா புத்திசாலித்தனம்.

பல திருமணப் பேச்சுக்கள் இதே வீரியத்தினால் தள்ளிப் போவதும் தடைப்படுவதும் நடக்கின்றன. காரியம் ஆக வேண்டியவர்கள் அதை எப்படியேனும் முடித்துக்கொள்ள வேண்டும். அங்கே வீணே மூக்கை நுழைத்துக் கெடுத்துக்கொண்டு விடக்கூடாது.

கௌரவம் பெரிதல்ல என்று வாதிடவில்லை. வீணாக உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தோல்வியாளர்கள் பட்டியலில் சேர்ந்துவிடக்கூடாது என்கிறேன்.

நிச்சயமாக வீரியம் பெரிதல்ல; காரியமே பெரிது!

**லேனா தமிழ்வாணன்**

# நாணயத்தாள் அச்சிடும் தொழிலாளர்கள் கூடுதல் நேரம் வேலை செய்ய எதிர்ப்பு

(சல்போனி)

புதிய நாணயத்தாள்கள் அச்சடிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், கூடுதல் நேரம் வேலை செய்ய தொழிலாளர்கள் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

இந்தியா முழுவதும் 500 மற்றும் 1000 ரூபாய் நாணயத்தாள்கள் செல்லாது என்ற அறிவிப்புக்கு பிறகு கடும் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஒருமாதத்திற்கு ஆகியும் வங்கிகளுக்கு போதிய அளவுக்கு புதிய 500 ரூபாய் மற்றும் அதற்கு குறைவான ரூபாய் நாணயத்தாள்கள் வந்து சேரவில்லை.

நாடு முழுவதும் வங்கிகளுக்கு புதிய 500 ரூபாய் நாணயத்தாள்கள் அனுப்பப்பட்டு விட்டதாக ரிசர்வ் வங்கி தெரிவித்த போதும், தமிழகம் உள்ளிட்ட பல வேறு மாநிலங்களில் உள்ள வங்கிகளுக்கு நேற்று முன்தினம் வரை புதிய 500 ரூபாய் நாணயத்தாள்கள் போதிய அளவில் வந்து சேரவில்லை.

பெரும்பாலான வங்கிகளில் ரூ.2000 ஒரே நாணயத்தாளாக கொடுக்கப்பட்டது. பொதுமக்கள் அவற்றை மாற்ற முடியாமல் திணறி வருகின்றனர். மேலும், வங்கிக்கணக்கில் பணம் எடுக்க கட்டுப்பாட்டை ரிசர்வ் வங்கி தளர்த்திய பிறகும் வங்கிகளில் பணத்தட்டுப்பாடு காரணமாக குறைந்த அளவே பணம் கொடுக்கின்றனர். இதனால் வங்கி கிளைகளின் முன்பு கூட்டம் குறையவில்லை.

இதனையடுத்து, பணத்தட்டுப்பாட்டை நீக்க விரைவாக 500 ரூபாய் நாணயத்தாள்களை அச்சடிக்க வேண்டுமென கருதி, அச்சடிப்பு பணியை இருமடங்காக அதிகரித்துள்ளதாக ரிசர்வ் வங்கி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நாசிக் மற்றும் தேவாஸ் அச்சகங்களில் 500 ரூபாய் அச்சடிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கு வங்கத்தில் உள்ள சல்போனி மற்றும் மைசூரில் ரூ.2000 மற்றும் ரூ.100 நாணயத்தாள்கள் அச்சடிக்கப்படுகிறது.


இந்நிலையில், சல்போனி அச்சகத்தில் பணி புரியும் தொழிலாளர்களின் ஒரு பிரிவினர் கூடுதல் நேரம் (ஓவர் டைம்) பணிபுரிய முடியாது என்று தங்களது மேல் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர். வேலைக்கு உரிய ஒன்பது மணி நேரம் மட்டுமே பணி புரிய முடியும் என்று அவர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பாரதிய ரிசர்வ் வங்கி நோட்டு அச்சிடும் நிறுவன தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில் அதிகாரிகளுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. தொடர் பணிச்சுமையால் கடந்த டிசெம்பர் 14ஆம் திகதி முதல் தொழிலாளர்கள் தொடர்ந்து விடுமுறை எடுத்து வருவதாக நோட்டீசில் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த டிசெம்பர் 14ஆம் திகதி முதல் அச்சடிக்கும் பணியில் உள்ள தொழிலாளர்கள் கூடுதலாக 3 மணி நேரம், அதாவது 12 மணி நேரம் வேலை செய்ய கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ளது. (இ-10)

# எந்தவொரு நாட்டையும் குறிவைத்து ஏவுகணை சோதனை நடத்தவில்லை

## இந்தியா விளக்கம்



எந்தவொரு குறிப்பிட்ட நாட்டையும் குறிவைத்து அக்னி-5 ஏவுகணை சோதனை நடத்தப்படவில்லை என்று இந்தியா விளக்கம் அளித்துள்ளது.

5 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் வரை சென்று இலக்கை துல்லியமாக தாக்கி அழிக்கும் அக்னி-5 ஏவுகணை சோதனை நேற்று முன்தினம் ஒடிசாவின் அப்துல் கலாம் தீவில் வெற்றிகரமாக நடந்தது.

இந்த சோதனை சீனாவை குறி வைத்தே நடத்தப்பட்டது என்று பல்வேறு ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

இதுகுறித்து சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜஹுவா சுன்யிங் கூறியதாவது,

ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்களில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு அக்னி-5 ஏவுகணை சோதனை நடத்தப்பட்டிருக்கும் என்று சீனா நம்புகிறது.

தெற்காசிய பிராந்தியத்தில உள்ள நாடுகளில் அமைதி, அபிவிருத்தி ஏற்பட்டு ஸ்திரத்தன்மை நிலவ வேண்டும் என்பதை சீனா எப்போதும் விரும்புகிறது. அக்னி-5 ஏவுகணையை இந்தியா சோதித்ததும் சில ஊடகங்கள் சீனாவை குறிவைத்தே இந்த சோதனை நடத்தப்பட்டிருப்பதாக தெரிவித்தன.

சீனாவும் இந்தியாவும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளாகவும் வேகமாக வளரும் பொருளாதார சக்திகளாகவும் உள்ளன. சீனாவும் இந்தியாவும் எதிரி நாடுகள் அல்ல, கூட்டாளி நாடுகள்.

அதேபோல் ஏவுகணை சோதனை தொடர்பான விவகாரத்தில் தன்னிச்சையாக வதந்திகளை பரப்புவதையும் தனது கருத்துகளை திணிப்பதிலும் ஊடகங்கள் ஈடுபடக்கூடாது. இந்தியா-சீனா இடையே புரிந்துணர்வு அதிகரிப்பதற்கும் இந்த பிராந்தியத்தில் அமைதி, ஸ்திரத்தன்மை நிலவவும் ஊடகங்கள் அதிகளவு பங்களிப்புகளை அளிக்க வேண்டும். இவ்வாறு சுன்யிங் கூறினார்.

சீனாவின் நிலைப்பாட்டைத் தொடர்ந்து இந்தியாவும் தனது விளக்கத்தை அளித்துள்ளது.

இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப் கூறுகையில், "எந்த ஒரு குறிப்பிட்ட நாட்டையும் குறிவைத்து அக்னி-5 ஏவுகணைசோதனை நடத்தப்படவில்லை. சர்வதேச விதிகளின் படியே இந்த சோதனை நடத்தப்பட்டது" என்றார். (இ-7)

# சசிகலாவை ஏன் சந்தித்தார் ஓ.பி.எஸ்? ஏழு நாட்கள் மௌனத்தின் பின்னணி



(சென்னை)

பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துவிட்டு வந்த பிறகு, போயஸ் கார்டன் பக்கமே தலைகாட்டாத முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் நேற்று முன்தினம் சசிகலாவை சந்தித்துப் பேசினார்.

பொதுக்குழுவில் ஏதேனும் எதிர்ப்புகள் கிளம்புமா என்பது குறித்துத்தான் இங்கு தீவிர ஆலோசனைகள் நடந்தன.

டில்லியில் கடந்த 20ஆம் திகதி, பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார் தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம். காவிரி மேலாண்மை வாரியம், முல்லைப் பெரியாறு, அத்திக்கடவு-அவிநாசி திட்டம், கச்சதீவு விவகாரம் உட்பட 23 முக்கிய கோரிக்கைகள் குறித்து பிரதமரிடம் மனு அளித்தார். விரைவில் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் உறுதியளித்தார். ஆனால், பிரதமருடனான சந்திப்பை வேறுவிதமாக கவனித்தது போயஸ் கார்டன் வட்டாரம்.

தம்பிதுரையைப் புறக்கணித்தது பிரதமருடன் தனிப்பட்ட முறையில் விவாதித்தது என ஓ.பி.எஸ்ஸின் நடவடிக்கைகளை மன்னார்குடி உறவுகள் அவ்வளவு எளிதாகக் கடந்து செல்லவில்லை. அதற்கேற்ப அடுத்தடுத்து, நடந்த வருமான வரிச் சோதனைகள், கார்டன் சந்தேகத்தை உறுதிப்படுத்தியது.

சேகர் ரெட்டி மீது கை வைத்தபோது, "ஓ.பி.எஸ். வசமாக சிக்குவார்" என்றுதான் மன்னார்குடி தரப்பில் நினைத்தார்கள். ஆனால், ராம மோகனராவை வளைத்த பிறகு, ஆட்டத்தின் சீரியஸை உணர்ந்து கொண்டார்கள்.

தலைமைச் செயலகத்துக்குள் வருமான வரித்துறை சோதனை நடத்தப்பட்டது குறித்து, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி உடனடியாக அறிக்கை வெளியிட்டார்.

ஆனால் தற்போது வரையில் ஓ.பி.எஸ்ஸிடம் இருந்து எந்த அறிக்கையும் வெளிவரவில்லை. "எதிர்ப்பைப் பதிவு செய்யுங்கள்" எனத் தெரிவித்தவர்களுக்கும் முதல்வர் எந்த சிக்னலையும் காட்டவில்லை.

அப்படியானால், ஓ.பி.எஸ். சொல்லித்தான் மத்திய அரசு ஆதிக்கம் செலுத்துகிறதா" என மன்னார்குடி உறவுகள் கொந்தளித்தார்கள். இனியும் ஓ.பி.எஸ் பதவியில் நீடித்தால், நம்மை முழுவதுமாக துடைத்து விடுவார்கள்" என அதிர்ந்தனர். முதல்வர் பதவிக்கு சசிகலாவைக் கொண்டு வரும் முயற்சிகள் தொடங்கியுள்ளன.

பொதுக்குழுவில் ஒருமனதாகத் தேர்வு செய்யப்படும் வரையில் சசிகலா மனதுக்குள் சிறு கலக்கம் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

பிரதமரை சந்தித்து விட்டு வந்த பின்னர், மரியாதை நிமித்தமாகக்கூட சசிகலாவை சந்திக்க ஓ.பி.எஸ் செல்லவில்லை. "இப்படியே நீங்கள் தனித்திருந்தால், தொண்டர்கள் மத்தியில் வேறு மாதிரியான தோற்றம் தென்படும்.

பொதுக்குழு பற்றி விவாதிக்க வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையிலாவது வாருங்கள்" என தலைமைச் செயலகத்தில் இருந்து ஓ.பி.எஸ்ஸுக்குத் தெரிவிக்கப்பட, கார்டன் விரைந்தார். என விபரித்த அ.தி.மு.க தலைமைக்கழக நிர்வாகி ஒருவர், மன்னார்குடி உறவுகளிடம் சரண்டர் ஆகும் முடிவில் பன்னீர்செல்வம் இல்லை.

பிரச்சினை இல்லாமல் பொதுச் செயலாளரை தேர்வு செய்வது குறித்துத்தான் ஓ.பி.எஸ்ஸிடம் விவாதித்திருக்கிறார்கள். அவர்களிடம் பேசிய வர், "தேனி மாவட்டத்து நிர்வாகிகளிடம் இதுபற்றிச் சொல்லிவிட்டேன். நல்லபடியாகவே பொதுக்குழு நடக்கும்" எனத் தெரிவித்தார்.

முதலமைச்சர் பதவி பற்றியோ, வருமான வரித்துறை சோதனை பற்றியோ விவாதம் நடக்கவில்லை. பொதுக்குழுவில் எதிர்ப்பு கிளம்புமா என முதலமைச்சர் என்ற முறையில் அவரிடம் பேசியிருக்கிறார்கள்.

கட்சியைப் பொறுத்தவரையில், சசிகலா முன்னிறுத்தப்படுவதில், அவருக்கு எந்தவித தயக்கமும் இல்லை. ஆனால், முதலமைச்சர் பதவிக்கு முன்னிறுத்தப்படுவதை, அவருடைய ஆதரவாளர்கள் ஏற்கவில்லை.

பெரும்பான்மை எம்.எல்.ஏக்களின் ஆதரவு ஓ.பி.எஸ்ஸுக்கு உள்ளது என்பதை ஆளுநர் உறுதி செய்ய வேண்டும்" என ஸ்டாலின் கருத்து தெரிவித்ததில், சசிகலாவுக்கு உடன்பாடில்லை.

அப்படி ஒருவேளை நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்தாலும், ஓ.பி.எஸ்ஸுக்கு ஆதரவாகத்தான் எம்.எல்.ஏக்கள் வாக்களிப்பார்கள்.

வாக்கெடுப்பில் தோற்றுவிட்டால், ஆட்சி கலையும் என்பதையும் அமைச்சர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள். எனவே, "முதலமைச்சர் பதவியில் இருந்து ஓ.பி.எஸ் தானாக விலகி, சசிகலாவுக்கு இடம் கொடுக்க வேண்டும்" என்று, அமைச்சர்கள் வலியுறுத்தி வந்தார்கள்.

வருமான வரித்துறை சோதனை தொடங்கியதும், சசிகலாவை முன்னிறுத்திய அமைச்சர்களும் அடங்கிப் போனார்கள். கட்சியின் செய்தித் தொடர்பாளர்கள்தான் இது குறித்துப் பேசி வருகின்றனர்.

டில்லி சென்று பிரதமரை சந்திப்பதற்கு முதல்நாள் ஆளுநர் வித்யாசாகர் ராவை சந்தித்தார் ஓ.பி.எஸ். அவரிடம் பேசிய ஆளுநர், " உங்களைத் தவிர, முதலமைச்சர் பதவிக்கு வேறு யார் முன்னிறுத்தப்பட்டாலும் அதை ஏற்க மாட்டேன்.

நம்பிக்கை வாக்கெடுப்பிலும் நீங்கள்தான் வெற்றி பெறுவீர்கள். உங்களுக்கு எதிரான சூழல் வந்தாலும், அ.தி.மு.கவுக்கு அடுத்து பெரும்பான்மையாக இருக்கும் தி.மு.கவுக்கு வாய்ப்பை வழங்குவோம்" என உறுதியாகத் தெரிவித்தார்.

இதைக் கேட்டு உற்சாகத்தோடு டில்லி கிளம்பினார். முதல்வர் மனதைக் கரைய வைக்கும் வகையில் அ.தி.மு.க. சிரேஷ்ட உறுப்பினர்களாய் சிலர் கோட்டையில் வேயே அவரை சந்தித்துப் பேசியுள்ளனர்.

அவர்களிடம் பேசிய ஓ.பி.எஸ், "நான் இப்போது அமர்ந்திருக்கும் பதவி என்பது அவர்கள் கொடுத்த வாய்ப்புதான். அவர்களுக்கு எதிராக ஒருநாளும் செயற்பட மாட்டேன்" எனத் தெரிவித்தார் என மேலும் தெரிய வருகிறது. (இ-7)

# அ.தி.மு.க. இனி எம்.ஜி.ஆர். வழியா, 'ஜெ' வழியா?

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு முதல்வர் பொறுப்புக்கு ஓ.பன்னீர்செல்வம் வந்துவிட்டதால், கட்சியின் பொதுச்செயலாளராக சசிகலா வருவார் என்பதுதான் ஆரம்ப நாட்களில் நிலவிய சூழல். அதை உறுதிசெய்யும் வகையில் கட்சியின் முன்னணித் தலைவர்கள், முக்கிய நிர்வாகிகள் பலரும் நேரில் சென்று சசிகலாவுக்கு ஆதரவளித்தனர். ஆனால், கடந்த ஒருவார காலமாக அவர்களுடைய குரலில் ஒரு பெருமாற்றம் தெரிகிறது. பொதுச்செயலாளராக மட்டுமல்ல, நாட்டின் முதல்வராகவும் சசிகலா வர வேண்டும் என்ற குரல் கேட்கத் தொடங்கியிருக்கிறது.

சட்டபூர்வமாக ஒரு. முதலமைச்சர் தேர்ந்தெடுக்கப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், வேறொரு முதலமைச்சர் வேண்டும் என்ற குரல் கட்சியின் முக்கிய தலைவர்கள், மூத்த நிர்வாகிகள் மத்தியிலிருந்து எழுந்தால், அதனை ஒரு கட்சிக்காரனின் கருத்து, தொண்டனின் உணர்வு என்று இயல்பாக எடுத்துக்கொள்ளலாம். ஆனால, முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கும் அமைச்சர்களே அந்தக் கருத்தைப் பகிரங்கமாகவும் ஊடகங்களிலும் சொல்லும்போது, அது கூடுதல் கவனத்துடன் அணுக வேண்டிய ஒன்றாகப் பரிணாமம் பெறுகிறது.

## சசிகலாவா? பன்னீர்செல்வமா?


இன்று முதலமைச்சராகியிருப்பவர், அந்தக் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த ஜெயலலிதாவால் இரண்டு முறை முதல்வராக அடையாளம் காட்டப்பட்டவர். ஜெயலலிதா உடல்நிலை பாதிக்கப்பட்ட சூழலில், அவரது விருப்பத்தின் பேரிலேயே முதல்வருக்கான பொறுப்புகள் ஓ.பன்னீரசெல்வத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக ஆளுநர் மாளிகை அறிவித்தது. அத்தகைய ஒருவருக்குப் பதிலாக இன்னொருவர் வர வேண்டும் என்று அமைச்சர்களே சொல்வதை வெறுமனே உட்கட்சி ஜனநாயகம் என்று சுருக்கிப் பார்த்துவிட முடியாது. அதில் உள்ளார்ந்த அரசியல் இருப்பதாகவே பொருள் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆக, கட்சிக்கும் ஆட்சிக்கும் ஒற்றைத் தலைமை வேண்டுமா, அல்லது இரு வேறு தலைமைகள் வேண்டுமா என்ற மிகப்பெரிய கேள்வி எழுந்திருக்கிறது. இதற்கான விடை தேடி வேறெங்கும் செல்லத் தேவையில்லை. அ.தி.மு.கவின் கடந்தகால வரலாற்றிலேயே சில வழிகாட்டும் நெறிமுறைகள் உள்ளன.

## வழிகாட்டு நெறிமுறைகள

அ.தி.மு.கவை நிறுவிய எம்.ஜி.ஆர். ஆரம்ப காலத்தில் 





அதன் பொதுச்செயலாளராகச் செயற்பட்டார். ஆட்சியைப் பிடிக்கும் வரை அந்தப் பதவியில் இருந்த அவர், முதலமைச்சரான பிறகு, கட்சியின் தலைமைப் பொறுப்பான பொதுச் செயலா ளர் பதவியைத் தனது நம்பிக்கைக்குரிய ப.உ.சண்முகத்திடம் கொடுத்தார். பிறகு, மூத்த அமைச்சரும் எம்.ஜி.ஆரின் மதிப்புக்குரியவருமான நாவலர் நெடுஞ்செழியனிடம் ஒப்படைத்தார். அடுத்து, அந்தப் பதவியை மூத்த தலைவர் ராகவானந்தத்திடம் கொடுத்தார். எம்.ஜி.ஆர் மறைவதற்கு முன்னர் கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொண்டார். ஆக, எம்.ஜி.ஆரின் காலத்தில் பெரும்பாலும் கட்சியும் ஆட்சியும் இரு வேறு நபர்களிடமே இருந்திருக்கிறது.

எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பிறகு, ஒருங்கிணைந்த அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராக இருந்த ஜெயலலிதா, ஆட்சியைப் பிடித்து முதல்வரான பிறகும்கூட கட்சித் தலைமையைத் தன்வசமே வைத்திருந்தார். எந்தக் காலத்திலும், யார் வசமும் அந்தப் பதவியை விட்டுக்கொடுக்கவில்லை. நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக முதல்வர் பதவியை இழக்க வேண்டிய இரண்டு தருணங்களிலும்கூட ஆட்சித் தலைமையை ஓ.பன்னீர்செல்வத்திடம் ஒப்படைத்தாரே தவிர, கட்சித் தலைமையை எப்போதும்போல் தன்வசமே வைத்திருந்தார்.

## கவனமாகச் சேர்த்தவிதி

மேற்கண்ட இரண்டு நடைமுறைகளும் வெவ்வேறாக இருந்தாலும், அணுகு முறையில் ஒர் ஒற்றுமை இருக்கிறது. எம்.ஜி.ஆர். தன் காலத்தில் பொதுச் செயலாளர் பொறுப்பை மற்றவர்களிடம் ஒப்படைத்திருந்தாலும், அவர்கள் எம்.ஜி.ஆரை மீறிச் செயல்படக் கூடியவர்களாக இருந்திருக்கவில்லை. எம்.ஜி.ஆர். ஒன்று, நாங்களெல்லாம் பூச்சியம். எம்.ஜி.ஆர். இல்லாவிட்டால் எங்களுக்கு மதிப்பில்லை என்று பெருமிதப்பட்டவர்கள். கொஞ்சம் நுணுக்கமாகக் கவனித்தால், அ.தி.மு.கவின் பொதுச செயலாளர் பதவிக்கு வருவதற்குக் கட்சியின் செயற்குழு, பொதுக்குழுவை மட்டுமே நம்பியிருக்கக் கூடாது என்பதற்காகவே கட்சியின் அடிப்படை உறுப்பினர்கள் கூடிப் பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் விதியைக் கவனமாகச் சேர்த்திருந்தார் எம்.ஜி.ஆர்.

அதேபோல, முதல்வர் பதவியை ஓ.பன்னீர்செல்வம் ஏற்றிருந்தாலும், அவர் கட்சியின் பொதுச்செயலாளர் ஜெயலலிதாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பவராக இருந்தார். ஜெயலலிதா சொன்னார் என்பதற்காக ஒருமுறை அல்ல, இரண்டு முறை முதலமைச்சர் பதவியிலிருந்து எவ்விதமான தயக்கமும் இல்லாமல் விலகியவர் ஓ.பன்னீர்செல்வம்.

## யாருடைய பாதை?

தற்போது ஜெயலலிதா என்ற மிகப் பெரிய ஆளுமையின் மறைவுக்குப் பிறகு அதிமுக எந்த மாதிரியான அணுகுமுறையைப் பின்பற்றப் போகிறது என்பது முக்கியமான கேள்வி. எம்.ஜி.ஆர். பாதையா, ஜெயலலிதா பாதையா? எதைத் தேர்ந்தெடுப்பது என்பதுதான் அ.தி.மு.கவுக்கு இருக்கும் சவால்களுள் முக்கியமானது. ஏனென்றால், எம்.ஜி.ஆர். ஜெயலலிதா இருவரும் மக்கள் சக்தி பெற்ற மாபெரும் ஆளுமைகள். ஆனால், இன்று இருக்கும் ஓ.பன்னீர்செல்வம், சசிகலா இருவருக்குமே அத்தகைய பலம் எதுவும் இப்போது வரை இல்லை என்பதுதான் கள யதார்த்தம்.

ஒருவேளை, கட்சியும் ஆட்சியும் தனித்தனி நபர்களிடம் இருக்கட்டும் என்று முடிவு செய்து, அதிகாரக் குவிப்பைத் தவிர்த்து அதிகாரப் பகிர்வை அமுல்படுத்தும் பட்சத்தில், அங்கும் ஒரு சிக்கல் இருக்கிறது.

ஏனென்றால், அதிகாரப் பகிர்வு (Power Sharing) என்பது எந்த நிமிடத்தில் வேண்டுமானாலும் அதிகார மையங்களாக (Power Centres) மாற வாய்ப்பு இருக்கிறது. ஓபிஎஸ் பிரிவு, சசிகலா பிரிவு என்றெல்லாம் பிரிந்து நிற்கும் பட்சத்தில், அது கட்சிக்கும் நல்லதல்ல, ஆட்சிக்கும் ஆபத்து.

ஆக, இதுவரை இல்லாத வகையில் அ.தி.மு.கவுக்கு மிகப் பெரிய சவால் காத்திருக்கிறது. அது எவ்வளவு பெரியது என்பது இன்று கூடும் அ.தி.மு.க. பொதுக்குழு, செயற்குழு எடுக்கும் முடிவில் இருக்கிறது!

**ஆர். முத்துக்குமார்**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 941

ரெமோ




பார்த்தீபன்




ரமேஸ்




சந்துரு




ராஜீ




சசி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# தங்க மஞ்சள் குருவி!

விஜய நகர் விழா கோலம் பூண்டிருந்தது! அரச உற்சவம்! அதில் கலந்துகொள்ள அண்டை நாட்டு அரசன் விஜயவர்தனர் வந்தார். விழா முடிந்த பிறகும் சில தினங்கள் விஜயநகரில் தங்கினார்.

ஒருநாள் அரசர் அவரிடம், "அரசே நான் கேள்விப்பட்டேனே...? தங்கள் அவைப் புலவர் தெனாலி ராமன் மிகவும் சாதுரிய சாலியாமே! அவரிடம் சொல்லி, எனக்குக் காலையில் தங்க மஞ்சள் நிறத்திலும், நடுப்பகலில் சிவப்பு நிறத்திலும், இரவில் ஏழு வர்ணங்களிலுமாக உருமாறும் அற்புதக் குருவி ஒன்றைக் கொண்டு வந்து தரச் சொல்லுங்களேன்..." என்றார்.



மேலும், "அது சில சமயம் மூன்று காலாலும், சில சமயம் இரட்டைக் காலாலும், பிறகு ஏழு இறக்கை கொண்டு வானில் பறக்கவும் வேண்டும்" என்றார்.

அரசர் உடனே தெனாலியை அழைத்து, "விரைவில் அத்தகைய குருவியைக் கொண்டு வா..." என்று உத்தரவிட்டார்.

அதைக் கேட்டுத் தெனாலிராமனுக்குத் தலை சுற்றியது. அத்தகைய பறவை பற்றி அவர் ஒரு போதும் கேள்விப்பட்டது கூட இல்லை.

ஆனால் சிரித்தவாறே, "சரி.... அரசே! நாளைக்கு நான் அத்தகைய பறவையோடு வருகிறேன்" என்றார்.

மறுநாள் தெனாலி, சபைக்குத் தாமதமாக வந்தார். அவர் நிலைமை மிக மோசமாக இருந்தது. கிழிந்த உடைகள். அதில் புற்களும், முட்களும், மண்ணும் ஒட்டியிருந்தன. கையில் குருவி எதுவும் இல்லாத ஒரு பறவைக் கூண்டு.

(தொடரும்...)

## 12.2016 29 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1690 - இத்தாலியின் அன்காலோர் நகரில் நிலநடுக்கம் ஏற்பட்டது.
- 1813 - 1812 போர்: பிரித்தானியப் படைகள் நியூயோர்க்கில் பஃபலோ என்ற நகரை தீக்கிரையாக்கினர்.
- 1845 - டெக்சாஸ் ஐக்கிய அமெரிக்காவின் 28வது மாநிலமாக இணைந்தது.
- 1851 - அமெரிக்காவின் முதலாவது இளைய கிறிஸ்தவர்களின் அமைப்பு (வை.எம்.சி.ஏ) பொஸ்டனில் அமைக்கப்பட்டது.
- 1876 - ஐக்கிய அமெரிக்காவின் ஒஹையோ மாநிலத்தில் தொடருந்து பாலம் இடிந்து வீழ்ந்ததில் 92 பேர் கொல்லப்பட்டு 64 பேர் காயமடைந்தனர்.
- 1890 - தென் டகோட்டாவில் ஐக்கிய அமெரிக்கப் படைகள் பெண்கள் குழந்தைகள் உட்பட 400 ஆதிகுடிகளை படுகொலை செய்தனர்.
- 1891 - தோமஸ் அல்வா எடிசன் வானொலிக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1911 - மங்கோலியா கிங் வம்சத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1937 - ஐரிய சுதந்திர நாடு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தி அயர்லாந்து குடியரசு எனப் பெயரை மாற்றியது.
- 1972 - புளோரிடாவில் மயாமி விமான நிலையத்தில் அமெரிக்க விமானம் ஒன்று வீழ்ந்ததில் 101 பேர் கொல்லப்பட்டனர்.
- 1975 - நியூயோர்க் நகர விமான நிலையத்தில் குண்டு ஒன்று வெடித்ததில் [illegible] பேர் கொல்லப்பட்டு 74 பேர் காயமடைந்தனர்.
- 1987 - 326 நாட்கள் விண்வெளியில் பயணித்த சோவியத் விண்வெளி வீரர் யூரி ரொமானின்கோ Yury Romanenko பூமி திரும்பினார்.
- 1993 - உலகின் மிகப்பெரிய செம்பினாலான புத்தர் சிலை ஹொங்கொங்கில் அமைக்கப்பட்டது.
- 1996 - குவாத்தமாலாவில் அந்நாட்டு அரசுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் 36-ஆண்டு கால உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்தது.
- 1997 - ஹொங்கொங்கில் கோழிகளுக்கு தொற்றுநோய் பரவியதை அடுத்து அங்கிருந்த அனைத்து 1.25 மில்லியன் கோழிகளும் கொல்லப்பட்டன.
- 1998 - கம்போடியாவில் 1970களில் ஒரு மில்லியன் மக்கள் கொலை செய்யப்பட்டமைக்கு கெமர் ரூச் தலைவர்கள் மன்னிப்புக் கேட்டனர்.
- 2001 - பெருவின் தலைநகர் லீமாவில் பெரும் தீ பரவியதில் 274 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

- 1709 - எலிசவேத்தா பெட்ரோவ்னா. (இ.1762)
- 1809 - வில்லியம் கிளாட்ஸ்டோன், ஆங்கிலேய அரசியல்வாதி. ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர். (இ. 1898)
- 1904 - குவெம்பு, இந்திய எழுத்தாளர். (இ.1994)
- 1910 - ரொனால்ட் கோஸ், பொருளியலுக்கான நோபல் நினைவுப் பரிசு பெற்ற ஆங்கிலேய-அமெரிக்கர். (இ. 2013)
- 1914 - பில்லி டிப்டன், அமெரிக்க இசைக் கலைஞர். (இ. 1989)
- 1937 - மாமூன் அப்துல் கயூம், மாலைதீவுகளின் முன்னாள் குடியரசுத் தலைவர்.
- 1942 - ராஜேஷ் கன்னா, இந்திய நடிகர். (இ.2012)
- 1949 - சையத் கிர்மானி, இந்தியத் துடுப்பாட்ட வீரர், நடிகர்.
- 1953 - ஆலன் ரஸ்பிரிட்சர், சிம்பாப்வே ஊடகவியலாளர்.
- 1960 - டேவிட் பூன், ஆத்திரேலியத் துடுப்பாட்ட வீரர், நடுவர்.
- 1965 - சி. ஜெயசங்கர், ஈழத்து எழுத்தாளர்.
- 1971 - பிறட் ஹொக், அவுஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்.
- 1974 - டுவிங்கிள் கன்னா, இந்திய நடிகை

இறப்புகள்

- 1170 - தாமஸ் பெக்கெட், ஆங்கிலேயப் பேராயர். (பி. 1118)
- 1825 - ஜாக்-லூயி டேவிட், பிரெஞ்சு ஓவியர். (பி. 1748)
- 1926 - ரெய்னர் மரியா ரில்கே, ஆசுத்திரியக் கவிஞர். (பி. 1875)
- 2012 - டோனி கிரெய்க், தென்னாப்பிரிக்க-ஆத்திரேலியத் துடுப்பாட்ட வீரர், ஊடகவியலாளர். (பி. 1946)
- 2015 - தமிழண்ணல், தமிழறிஞர் (பி. 1928)

சிறப்பு நாள்

- சர்வதேச பல்லுயிர் பெருக்க நாள்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 160 | 160 | 200 | 200 |
| தக்காளி | 140 | 110 | 40 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 70 | 50 | 60 |
| கோவா | 20 | 20 | 60 | 40 | 30 |
| கரட் | 120 | 90 | 90 | 150 | 100 |
| பூசணி | 60 | 35 | 20 | 60 | 50 |
| நோகோல் | 80 | 50 | 30 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 40 | 20 | 80 | 50 |
| சின்னவெங்காயம் | 100 | 80 | 50 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 280 | 200 | 240 | 240 | 300 |
| வெண்டைக்காய் | 100 | 70 | 120 | 120 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 50 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 160 | 150 | 120 | 120 | 1்80 |
| லீக்ஸ் | 100 | 80 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 50 | 150 | 120 | 60 |
| கறிமிளகாய் | 300 | 180 | 400 | 100 | 140 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 100 | 400 | — |
| போஞ்சி | 140 | 110 | 30 | 120 | 160 |
| [illegible] | 30 | 20 | — | 40 | 30 |
| கீரை - 1பிடி | 20 | 30 | 35 | 40 | 25 |
| தேசிக்காய் | 250 | 250 | 300 | 600 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 20-40 | 35 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 250 | 250 | 250 | 300 | 300 |
| [illegible] | 280 | 200 | — | 280 | — |
| முள்ளங்கி | 80 | 40 | 50 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 15 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 15 | 20 | 20 | 25 |
| [illegible] | 80 | 50 | 60 | 100 | 70 |






# நிரந்தர நியமனம் வழங்கக்கோரி தொண்டராசிரியர்கள் உணவு தவிர்ப்பு

## வடக்கு ஆளுநர் அலுவலகம் முற்றுகை

(யாழ்ப்பாணம்)

**நிரந்தர நியமனத்துக்கான உரிய தீர்வை வழங்கக் கோரி வடமாகாணத்தில் உள்ள தொண்டராசிரியர்கள் நேற்றைய தினம் வடமாகாண ஆளுநரின் அலுவலகத்தை முற்றுகையிட்டு உணவு தவிர்ப்பு போராட்டத்தினை மேற்கொண்டிருந்தனர்.**

இதனால் அப்பகுதியில் பதற்றநிலை காணப்பட்டதோடு பொலிஸார் வரவழைக்கப்பட்டு ஆசிரியர்களுடன் சமரசத்தில் ஈடுபட்டிருந்தனர். இருப்பினும் தமக்கு உரிய தீர்வினை ஆளுநர் தெரிவிக்க வேண்டும் எனக்கூறி முற்றுகையை கைவிட்டு உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா, மடு, யாழ்ப்பாணம் உள்ளிட்ட கல்வி வலயங்களில் சுமார் 10 வருடங்களாக கடமையாற்றுகின்ற கல்வி அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட தொண்டராசிரியர்களே இவ்வாறு உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். அப்போது ஆளுநர் இந்த வருடம் டிசெம்பர் மாதத்துக்குள் உரிய தீர்வை பெற்றுத் தருவதாகவும் நம்பிக்கையுடன் இருக்குமாறு தெரிவித்து உண்ணாவிரதப் போராட்டத்தினை நிறைவுசெய்து வைத்திருந்தார்.

ஆனால் குறித்த காலம் முடிவடையும் நிலையில் தமக்கான உரிய தீர்வு வழங்கப்படவில்லை என தெரிவித்து மீண்டும் தமது போராட்டத்தினை நேற்றைய தினம் தொண்டராசிரியர்கள் ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பாக போராட்டத்தில் கலந்து கொண்ட தொண்டராசிரியர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

வடமாகாண கல்வி வலயங்களில் பல வருடங்கள் தொண்டராசிரியர்களாக கடமையாற்றும் எமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி பல கவனயீர்ப்பு போராட்டங்களையும் அதிகாரிகளிடம் கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தோம். அதன் பயனாக வடமாகாணத்தில் உள்ள அனைத்து வலயங்களிலும் இருந்து ஆயிரத்து 300 தொண்டராசிரியர்களின் பெயர்கள்தெரிவுசெய்யப்பட்டுநேர் முகத்தேர்வு இடம்பெற்றது.

பின்னர் ஒவ்வொரு வலயங்களிலும் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் இதுவரையில் எமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை. வாக்குறுதிகளை நம்பி ஏமாந்துபோயுள்ளோம்.

அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்த பின்னர் 700 தொண்டராசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படும் என கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா தெரிவித்திருந்தும் இன்று வரையில் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. நாம் தொடர்ச்சியாக ஏமாற்றமடைந்த நிலையில் உள்ளோம்.

தற்போது ஆளுநர் எமக்கு தந்த காலஅவகாசமும் நிறைவடைந்துள்ளது. இனியும் எமக்கு கால அவகாசம்தேவை இல்லை. நிரந்தர நியமனம் எப்போது வழங்கப்படும் என எழுத்து மூலமாக எமக்கு வழங்கும் வரை தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என தெரிவித்தனர்.

இவர்களை சந்தித்த வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் இன்றைய தினம் (நேற்று) வடமாகாண கல்வி அமைச்சின் ஊடாக தொண்டராசிரியர்களின் நியமனம் தொடர்பான விபரங்கள் அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அமைச்சரவை உபகுழு ஒன்றை அமைத்துள்ளது. அவர்கள் பரிசீலித்த பின்னர் நியமனங்கள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆசிரியர்களுக்கு பண்பு மிக முக்கியம். நிர்வாக நடவடிக்கைகளை புரிந்து நடக்க வேண்டும். எதிர்வரும் 4 ஆம் திகதி ஜனாதிபதி யாழ்ப்பாணம் வரும்போது அவர்களை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தருகிறோம். நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு உங்கள் கோரிக்கைகளை முன்வையுங்கள் என தெரிவித்தார்.

ஆனால் உரிய தீர்வை தரும் வரை போராட்டம் தொடரும் என தொண்டராசிரியர்கள் தெரிவித்து போராட்டத்தை தொடர்ந்துள்ளார். இதில் 300 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டுள்ளனர். (இ-9)

## டெங்கு நோயை ஒழிக்க ஒத்துழைப்பு வேண்டும்

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதனால் பொதுமக்களையும் பொது அமைப்புக்களையும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுதோஸ்குமார் கேட்டுள்ளார்.

அண்மையில்பெய்த மழையினை அடுத்து டெங்கின் தாக்கம் அதிகரிப்பதற்கான சூழ்நிலை உருவாகியுள்ளது. கொழும்பில் இருந்து வருபவர்களில் அநேகர் டெங்கின் தாக்கத்துடன் வருகின்றனர்.

மேலும் துன்னாலையில் நான்கு பேர், அல்வாயில் இருவர், கரணவாயில் மூவர், உடுப்பிட்டியில் ஒருவர், நெல்லியடியில் இருவர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இது அதிகரிக்க வாய்ப்பு இருப்பதனால் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொது மக்கள், கிராம அமைப்புக்கள் இணைந்து செயற்படுமாறு அவர் கேட்டுள்ளார்.

டெங்கு குடம்பிகள் உற்பத்தியாகும் என சந்தேகிக்கும் இடங்களை அழிக்குமாறும் பராமரிப்பு இன்றிக் காணப்படும் காணிகள் உள்ள பற்றைகளை அழிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (இ-60)

## அ.தி.மு.க. தலைமை அலுவலகம் சென்ற சசிகலாவின் கணவன் மீது தாக்குதல்

### சென்னையில் பெரும் பரபரப்பு

(சென்னை)

சென்னை, ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில், நேற்று பிற்பகல் பாராளுமன்ற உறுப்பினர் சசிகலா புஷ்பாவின் கணவர் மற்றும் சட்டத்தரணிக்கு அடி, உதை விழுந்தது. தமிழக முன்னாள் முதல்வரும், அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதாவின் மறைவுக்கு பிறகு அக்கட்சியின் அடுத்த பொதுச் செயலாளர் யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது.

புதிய பொதுச் செயலாளரை தேர்ந்தெடுப்பதற்காக அக்கட்சியின் பொதுக்குழு கூட்டம் சென்னை, வானகரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது, ஜெயலலிதாவின் மிக நெருக்கமான தோழியாக இருந்த சசிகலாவை பொதுச் செயலாளராக



பொறுப்பேற்கும்படி ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்ற உள்ளனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையில், சசிகலாவை பொதுச் செயலாளராக தேர்வு செய்யக்கூடாது எனக்கோரி, ஜெயலலிதாவால் கட்சியின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட பதவியில் நீக்கம் செய்யப்பட்ட பாராளுமன்ற மேல்சபை உறுப்பினர் சசிகலா புஷ்பா சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த சூழ்நிலையில், பொதுச் செயலாளர் பதவிக்கு, சசிகலா புஷ்பாவும் போட்டியிட தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியானதும் அ.தி.மு.க. தொண்டர்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டது.

இதற்காக, வேட்புமனு தாக்கல் செய்ய, அவர் நேற்று அ.தி.மு.க., தலைமை அலுவலகத்திற்கு வரவுள்ளார் என தகவல் நேற்றுக் காலை பரவியது.

இதையடுத்து, சென்னை பொலிஸ் இணை ஆணையர் மனோகரன் தலைமையில், அ.தி.மு.க., தலைமை அலுவலகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டனர். கட்சித் தொண்டர்களும் ஏராளமான அளவில் குவிந்திருந்தனர்.

இந்த நிலையில், சசிகலா புஷ்பாவின் கணவர் லிங்கேஸ்வர் மற்றும் அவரது ஆதரவாளர்கள் நேற்றுப் பிற்பகல் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்களை கண்ட அ.தி.மு.க. தொண்டர்களில் சிலர் ஆவேசம் அடைந்தனர். பொலிஸ் வளையத்தையும் மீறி லிங்கேஸ்வர் மற்றும் அவருடன் வந்தவர்களை அவர்கள் தாக்கினர்.

இதில் சசிகலா புஷ்பா கணவருக்கு முகத்தில் பலத்த காயம் ஏற்பட்டது. அவருடன் வந்த சட்டத்தரணியையும் சிலர் தாக்கியதாக கூறப்படுகிறது. காயமடைந்த சசிகலா புஷ்பாவின் கணவரை மீட்ட பொலிஸார், அவரை ஒரு வானில் ஏற்றிச்சென்று வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதனால், அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. (இ-7)





பருத்தித்துறை பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத, உள்ளூராட்சி மாத பரிசளிப்பு விழாவும் சென்னி சஞ்சிகை வெளியீட்டு விழாவும் நேற்று முன்தினம் பிரதேச சபை மண்டபத்தில் செயலாளர் சி.சிறிபாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் சஞ்சிகை வெளியிட்டு வைக்க இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை முகாமையாளர் சி.தவலிங்கம் பெற்றுக் கொள்வதையும் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மகாலிங்கம்)

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்




"நீங்கள் ஒரு புதுமொழியை கற்கும்போது, மீண்டும் பிறக்கிறீர்கள்" - இது செக் குடியரசு பழமொழி. உண்மை தானே...? நம்



தாய்மொழியைத் தாண்டி இன்னொரு மொழியை கற்கும்போது, அந்த மொழி பேசும் மக்களின் வாழ்வியலை, அவர்களின் பணபாட்டை, அவர்களின் இலக்கியத்தை நம்மால் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும். அதன்மூலம் நமக்கு இன்னொரு பார்வை கிடைக்கும்... இன்னொரு வாழ்க்கையை நாம் வாழ முடியும். அதேநேரம் அந்த இன்னொரு பிறப்பு என்பது நம் விருப்பத்தினால் நிகழ வேண்டும். இன்னொரு வாழ்க்கை வாழ வேண்டும் என்ற தேடல் நம் ஆன்மாவுக்கு இருக்க வேண்டும். இவ்வாறாக இல்லாமல் நம்மிடம் இன்னொரு வாழ்க்கையைக் கொண்டு வந்து திணித்தால் இயல்பாக நமக்கு அந்த வாழ்க்கையின் மீது வரும் காதலும் இல்லாமல் போகுமே அன்றி நிச்சயம் எந்த நன்மையும் பிறக்காது.

**கத்திக் கத்தி கற்றுக் கொண்ட தெலுங்கு!**

ஜெயலலிதா குறித்து எல்லோரும் வியக்கும் விடயம் அவரின் மொழி ஆளுமை. தமிழ் தவிர்த்து, அவரால் எந்த தடுமாற்றமும் இல்லாமல் மலையாளம், கன்னடம், தெலுங்கு ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளை சரளமாக பேச முடியும். 2007ஆம்ஆண்டு உத்தரபிரதேசத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் மிக சரளமாக ஹிந்தி பேசியபோது, அந்த மேடையில் இருந்த முலாயம் சிங்கே வியந்துதான் போனார். அதுபோல ஒரு முறை ஆந்திராவில் நடந்த ஒரு கூட்டத்தில் அவர் ஆங்கிலத்தில் உரையாற்றத் தொடங்கினார். பெரும் எண்ணிக்கையில் கூடி இருந்த பாமர மக்களுக்கு ஆங்கிலம் புரியவில்லை என்பதை உணர்ந்த அவர், சட்டென்று தெலுங்கில் உரையாற்றத் தொடங்கி விட்டார்.

சிறுவயதில் மெட்ரிக் பாடசாலையில் படித்ததால் அவருக்கு ஆங்கிலம் சுலபமாக வந்தது. இன்னும் சொல்லப்போனால் சர்ச் பார்க் பாடசாலையில் படித்த காலத்தில் தமிழில் பேசத் தான் தடுமாறினாரே தவிர, ஆங்கிலத்தில் சரளமாக பேசினார். பிறகு கன்னடம்... தான் பால்ய வயதை மைசூர் மற்றும் பெங்களூரில் கழித்ததால் அவருக்கு அந்த மொழியும் இயல்பாக வந்தது. தமிழ், ஆங்கிலம், கன்னடம் ஆகிய மூன்று மொழிகளைத் தவிர மற்ற மொழிகளை எல்லாம் அவர் திரையுலகுக்கு வந்த பிறகு தனது தேவையின் கருதி கற்றவை. அதே நேரத்தில் மற்ற மொழிகள் மீதிருந்த விருப்பத்தினாலும் கூட...!

தாம் மொழிகள் கற்ற பின்னணியை அவரே முன்பொருமுறை அளித்த பேட்டியில் பகிர்ந்திருக்கிறார். அவரது வார்த்தைகளிலிருந்தே "தமிழ் எனது தாய்மொழி. மைசூரில் சிறு வயதில் சில காலங்கள் வரை இருந்ததால் அங்கு வீட்டில் வேலையாட்களுடனும், அக்கம் பக்கத்தில் உள்ள சிறுமிகளுடனும் பேசிப் பேசி கன்னடத்தைக் கற்றுக் கொண்டேன்."

அதே நேரம் அவர் தெலுங்கு கற்ற கதை மிக சுவாரஸ்யமானது. அதையும் அவரே சொல்கிறார்.

" நான் 'மனசுலலு மமதலு' என்ற தெலுங்குப் படத்துக்கு ஒப்பந்தமானேன். அப்போது தயாரிப்பாளர்களிடம், 'எனக்குத் தெலுங்கு தெரியாதே!' என்றேன். அவர்கள் உடனடியாக தெலுங்கு ஆசிரியரை எனக்கு மொழி கற்பிக்க பணியமர்த்தி விட்டார்கள். தினமும் காலை சரியாக ஆறு மணிக்கு அந்த தெலுங்கு ஆசிரியர் வருவார். நான் அந்த சமயத்தில் தான், நல்ல தூக்கத்தில் இருப்பேன். என்னை வீட்டில் எழுப்புவார்கள். தூக்க கலக்கத்தில் தான் வகுப்புக்குச் செல்வேன். அது மட்டுமல்லாமல், அப்போதெல்லாம் நான் மிகவும் சங்கோஜி. யாராவது நாலு வார்த்தை பேசினால், நான் ஒரு வார்த்தை தான் பதில் பேசுவேன். தெலுங்கு பண்டிட் ஏதாவது எனக்கு கோபம் வரும்படி சொல்லிச் சீண்டி விடுவார். நானும் அதற்குப் பலமாக பதில் அளிப்பேன். தெலுங்கில் அதற்கு எவ்வாறு பதில் அளிக்க வேண்டும் என்று கூறி, மேலும் சீண்டுவார். நான் கத்த, அவர் கத்த, பெரிய ரகளையாகி விடும். நான் இப்படிக் கத்தி கத்தி கற்றுக் கொண்டதுதான் தெலுங்கு. இதனால் இரண்டு மாதத்தில் கற்க வேண்டிய தெலுங்கை சுமார் நாற்பது நாட்களிலேயே கற்றுக் கொண்டேன்" என்று தான் தெலுங்கு கற்ற அனுபவத்தை பகிர்ந்திருக்கிறார்.



**ஜெவின் அழகுக் குறிப்பு!**

இப்போது வேண்டுமானால் ஜெயலலிதா தன்னை மிகவும் இறுக்கமானவராக காட்டிக்கொள்ளலாம். இயல்பான தன் விருப்பங்களை தனக்குள்ளேயே வைத்து பூட்டிக் கொள்ளலாம். ஆனால், தன் பதின்ம வயதில், அந்த வயதுக்கே உரிய அபிலாஷைகளுடன் தான் ஜெயலலிதா இருந்தார். அவருக்கு விருப்பமான நடிகராக ஷம்மி கபூரும், பிடித்த மான விளையாட்டு கிரிக்கெட் வீரராக நாரி காண்ட்ராக்டரும் இருந்திருக்கிறார்கள்.

அவரே சொல்கிறார், "அறுபதுகளில் ஏதோ ஒரு பொது நிதிக்காக வட இந்திய கிரிக்கெட் நட்சத்திரங்கள், தென்னிந்திய நட்சத்திரங்களுடன் சேர்ந்து நேரு ஸ்டேடியத்தில் கிரிக்கெட் விளையாடினார்கள். அப்போது, திலீப் குமார், ஷம்மிகபூர், ராஜ்கபூர், மாலா சின்ஹா போன்ற பிரபல நட்சத்திரங்கள் வந்திருந்தார்கள். அவர்களிடம் ஆட்டோகிராஃப் வாங்க ஒரு ரூபாய் என்று அறிவித்திருந்தார்கள். அப்போது நானும் என் தோழியும் சேர்ந்து ரூபாய் கொடுத்து நட்சத்திரங்களிடம் கையெழுத்து வாங்கினோம். இதை எப்படி என்னால் மறக்க முடியும்...?"

ஜெயலலிதாவுக்கு தன் சிறு வயதிலேயே தன்னை அலங்கரித்துக் கொள்வதில் அலாதி விருப்பம் இருந்திருக்கிறது. சிறு வயதில் சந்தியாவுக்கு தெரியாமல், அவரின் மேக்கப் பெட்டியை திறந்து தன்னை அலங்கரித்து இருக்கிறார். இதற்காக சந்தியாவிடம் அடியும் வாங்கி இருக்கிறார். ஆனால், காலம் அவரையும் மேக்கப்பிட்டையும் நெருக்கமாக்கி அழகு பார்த்தது. ஆம், நடிப்பின் மீதியான பின், விருப்பம் இருக்கிறதோ இல்லையோ... தன்னை விதவிதமாக அலங்கரித்துக் கொள்ளத்தானே வேண்டும்...!

ஜெயலலிதாவே ஒரு முறை தன் அழகு குறிப்பை பகிர்ந்திருக்கிறார். அந்த அழகுக்குறிப்புக்கு அவர் 'கிளியோபட்ரா ஸ்டைல்' என்று பெயரும் வைத்தார். அந்த அழகுக் குறிப்பை அவரின் வார்த்தைகளிலேயே கேட்போம், "கிளியோபட்ரா பாலில் குளித்தது போல நான் உடம்பு முழுவதும் வெண்ணெயைத் தேய்த்து, அது சிறிது ஊறிய பிறகு பயித்தம்மாவை தேய்த்துக் குளிப்பேன். அதுபோல, முகம் பொலிவுடன் விளங்க விளக்கெண்ணெயைத் தேய்த்துச் சிறிது நேரம் ஊறின பிறகு பச்சை பயிறை அரைத்து தேய்த்துக் கழுவுவேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அது மட்டுமல்ல... அவர் அப்போது இன்னொரு அழகுக் குறிப்பையும் பகிர்ந்திருக்கிறார். அது மிகவும் எளிமையான அழகுக் குறிப்பு தான். ஆண், பெண் என எந்த பேதங்களும் இல்லாமல் அனைவரும் பின்பற்ற வேண்டியதும் கூட... அந்த அழகுக் குறிப்பு இது தான். "மனதை அழுக்கில்லாமல், குழப்பமில்லாமல்... தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள்... நிச்சயம் உங்கள் முகம் மிளிரும்..."

உண்மைதானே...?

(தொடரும்)



நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்தி விடும்.

*- மெரி கிளாட்சன்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முத்தி நெறி அறியாதவர் - மூக்கர் தமிழர் மனம் அறியாதவர் - கயவர்

சமஷ்டி முறைமை அவுட் என்றாகி விட்டது. இனி ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பதுதான் முடிவு. ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்றால் எல்லா அதிகாரங்களும் கிடைத்து விடும் யாரேனும் நம்பினால் அதுதான் மிகப்பெரும் மடமைத்தனம்.

ஆக, தமிழர்களுக்கான தீர்வு என்பது எதுவும் இல்லை என்றாகிவிட்டது. அப்படியானால் இதுவரை நடந்த மண்மீட்புப் போர், எங்கள் பிள்ளைகளின் தியாகம், உறவுகளின் இழப்பு, சொத்தழிவு, இடப்பெயர்வு என அனைத்தும் வீணாகிவிட்டதா? என்ற கேள்வி எழும்.

இந்தக் கேள்விக்கு விடையில்லை. இவையெல்லாம் சேர்ந்துதான் எங்கள் மூத்த அரசியல் தலைவர், காளி அம்மன் மீது கொண்ட அளப்பெரும் கருணையால் தேசியக் கொடியும் சிங்கக் கொடி மீது அளவற்ற பற்றும் கொண்ட, சீமான் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தர் அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைத்தது.

இது ஒன்று போதும் எங்கள் இனம் இதைச் சொல்லிச் சொல்லியே சீவியம் நடத்தும். என்ன செய்வது? போராட்டம் தோற்றது என்பதற்கப்பால் போராட்டத்தின் தோல்விக்குப் பின்னர் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை பொறுப்பேற்ற எங்கள் அரசியல் தலைமை இருக்கிறதே; அதுதான் எங்கள் ஊழ்வினையின் அடையாளம் என்று கூறிக்கொள்ளலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று தமிழ் மக்கள் கூறினாலும் இருவரைக் கொண்ட அமைப்பாகவே அது இப்போது உள்ளது. மற்றும்படி ஒருசிலர் அரசை முடக்குவோம் என வீராப்பு பேசுகின்றனர். இது அவர்களின் பாத்திரத்துக்கான வசனம். இதுகூட அந்த இருவரில் ஒருவரால் எழுதப்பட்டதாக இருக்கலாம்.

இவ்வாறு பேசப்படுகின்ற வீராப்பு வசனத்தை கேள்வியுற்றதும் முதலில் சிரிப்பவர்கள் அந்த இருவருமாகவே இருக்க முடியும் .

என்ன செய்வது? இம்மை மறுமை தெரியாத நிலையில் எங்கள் அரசியல் தலைமைக்கு முறைப்பாடு கொடுக்கும் தமிழ் அரசியல்வாதிகளை நினைத்தால் இதயம் கருகிப்போகும்.

சரி, இவைதான் ஒருபுறம் என்று விட்டுவிடலாம் என்றால் இன்றுவரை; இந்த நிமிடம் வரை தமிழ் அரசியல் தலைமை எங்களுக்கு சமஷ்டித் தீர்வை எடுத்துத் தரும். வடக்கு - கிழக்கை இணைக்கும் என்று நம்புகின்ற அப்பாவிகளை நினைக்கும் போது கண்கள் கலங்கிக் கொள்கின்றன.

சரி, அவர்கள் ஆளும் இனம். நாங்கள் ஆளப்படும் இனம். வந்து பிறந்துவிட்டோம் வாழத் தெரியவில்லை என்று பேசாமல் இருந்தால்,

வடக்கில் சிங்கள மீள்குடியேற்றம். ஆனால் தமிழன், தானிருந்த தனது பூர்வீக மண்ணில் குடியிருக்க அனுமதி மறுப்பு.

புத்த விகாரைகள் வடக்கில் அமைப்பு. இந்து ஆலயங்கள் உடைப்பு என்பதாக நிலைமை இருப்பதால் நாளும் நம் இதயம் நொருங்குகிறது.

பேசாமல் இருந்தாலும் விடுகிறார்கள் இல்லை. தமிழன் வாழ்ந்த பூமியையும் புத்தர் பிறந்த இடமாக காட்டுவதிலேயே அவர்கள் கரிசினை கொள்கின்றனர்.

இந்நிலையில் ஒற்றையாட்சில் தீர்வு என்பதற்கு எங்கள் அரசியல் தலைமை உடன்படுகிறது என்றால், இதைவிட அநியாயம் வேறு எதுவாகவும் இருக்க முடியாது.

என் செய்வோம்? முத்தி நெறி அறியாத மூக்கரோடும் தமிழ் இனத்தின் பிரச்சினை தெரியாத கயவரோடும் வாழ்வதென்பது முடியாத காரியம் அவ்வளவு தான்.

# வடக்கில் எல்லைக்கிராமங்களை சிங்களவர் ஆக்கிரமித்துவிடுவர்

## வடக்கு சபையில் விசேட பிரேரணை நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் எல்லை கிராமங்களில் குடியிருக்கும் மக்களுக்கு உதவிகள் எவையும் கிடைக்காமையால் தொடர்ந்தும் அவர்கள் அங்கு குடியமர முடியாத நிலை காணப்படுகின்றது. அங்கு வாழும் தமிழர்கள் வேறு இடங்களுக்கு சென்று விட்டால், சிங்களவர்கள் எல்லை கிராமங்களை ஆக்கிரமித்து விடுவார்கள். எனவே எல்லை கிராமத்தில் வாழும் மக்களுக்கு சபை உதவித் திட்டங்களை வழங்க வேண்டும் என்ற பிரேரணை ஒன்று வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் இந்த வருடத்திற்கான இறுதி அமர்வு நேற்றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத்தலைவர்சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன் போது உறுப்பினர் து.ரவிகரனால் முன்மொழியப்பட்ட பிரேரணையே இவ்வாறு நிறைவேறறப்பட்டுள்ளது. வினைத்திறனுடனும் சிறந்த கட்டமைப்பை ஏற்படுத்தும்முகமாகவும் வடக்கு மக்களுக்கான சேவைகளை இயன்றளவில் வழங்குவதற்கு அரும்பாடுபட்டு கொண்டிருக்கும் வடக்கு மாகாண சபையின் ஆளுகைக்குஉட்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் கடலும் கடல் வளமும் பெரும்பாலும் பறிபோய்விட்டது.

தரையிலும் பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளன. இதில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட செம்மலைக்கு தெற்கே வசிக்கும் மக்களுக்கும், ஒதியமலைப் பகுதியில் வசிக்கும் மக்களுக்குமான அடிப்படை வசதிகள் பல இதுவரை சீர்செய்யப்படவில்லை.

இந்த விடயத்தில் சபை முழுமையான கவனம் எடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என ரவிகரன் தனது பிரேரணையை முன்மொழிந்தார்.

இந்த பிரேரணையை உறுப்பினர் சர்வேஸ்வரன் வழி மொழிந்திருந்தார்.

இந்த பிரேரணை மீதான விவாதத்தில் கருத்து தெரிவித்த உறுப்பினர் சிவநேசன், தண்ணிமுறிப்பு உட்பட எல்லை கிராமங்களில் உள்ள மக்கள் அனைவரும் மீள் குடியேற்றப்பட்ட வேண்டும். இதன் மூலமே அந்த பிரதேசங்களை பாதுகாக்க முடியும் எனவும் தெரவித்தார். ஒதியமலை, தண்ணி முறிப்பு, பட்டிக்குடியிருப்பு போன்ற எல்லை கிராமங்களில் வடக்கு மாகாண சபை நடமாடும் சேவை ஒன்றை நடத்துவதற்கு முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உறுப்பினர் லிங்கநாதனும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரையும் முல்லைத்தீவிற்கு வருமாறு கடந்த மூன்று வருட காலமாக நான் கோரி வருகின்றேன். ஆனால் வருகின்றார்கள் இல்லை. முல்லைத்தீவிற்கு வருவதற்கான பேருந்துச் செலவையும் நான் ஏற்கின்றேன், மக்களின் குறைகளை வந்து பாருங்கள் என கூறியும் பார்த்தேன். ஆனால் பயனில்லை. அடிக்கு மேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்பது போன்று ரவிகர னும் பலமுறை இவற்றை கூறி வருகின்றார்.ஆனால் பயன் ஒன்றையும் காணவில்லை என உறுப்பினர் பசுபதிப்பிள்ளை தெரிவித்தார். (இ-4)

# வெளியிலிருந்து கொண்டுவரப்படும் கள்ளை வடக்கு மாகாணத்தில் விற்பனை செய்யத்தடை

## பிரேரணை நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திற்கு வெளியே இருந்து கொண்டு வரப்படும் கள்ளை வடக்கில் விற்பனை செய்வதனை தடை செய்யும் பிரேரணை ஒன்று வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த பிரேரணையை விவசாய கூட்டுறவுத் துறை அமைச்சர் பொ. ஐங்கரநேசன் முன்மொழிந்திருந்தார். வடக்கு மாகாண சபையின் 74 வது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

இதில், வடக்கு மாகாணத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் அச்சங்கத்தின் அங்கத்தவர்களால் பனை மற்றும் தென்னையில் இருந்து இயற்கையாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்வதற்கென உருவாக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புக்கள் ஆகும்.

எனினும் வடக்கில் உள்ள சில பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் வடக்கு மாகாணத்திற்கு வெளியே இருந்து செயற்கையாக நொதிக்க வைக்கப்பட்டு உருவாக்கப்படும் இரசாயன கள்ளை எடுத்து வந்து விற் பனை செய்வதனை அறியக் கூடியதாக உள்ளது. இந்த நடவடிக்கை தங்களின் உற்பத்தியை, விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்படுவதாக பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் அங்கத்தவராக உள்ள பனஞ்சாறு உற்பத்தியாளர்கள் முறைப்பாடு தெரிவித்து வருகின்றனர். அத்தோடு பல வேறு பொது அமைப்புக்களும இக்கள்ளின் விற்பனையை தடுத்து நிறுத்துமாறும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இவற்றைகருத்திற்கொண்டு வடகு மாகாணத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் வடக்குக்கு வெளியே இருந்து எடுத்து வரப்படும் கள்ளின் விற்பனையை அது எத்தகைய கள்ளாயினும் உடனடியாக தடை செய்ய வேண்டும் எனவும் இச் சங்கங்கள் வடக்கில் இயற்கையாக உற்பத்தி செய்யப்படும் கள்ளினை மாததிரமே விற்பனை செய்ய வேண்டும் எனவும் இந்த சபை கோருகின்றது என்ற பிரேரணையை அமைச்சர் ஐங்கரநேசன் முன்மொழிந்தார்.

எனினும் குறித்த பிரேரணை இரண்டு வருடங்களுக்கு முன்னர் உறுப்பினர் பரஞ்சோதியினால் கொண்டு வரப்பட்டது எனவும் ஏன் இப்போது அதே பிரேரணை மீண்டும் கொண்டுவரப்பட்டது எனவும் உறுப்பினர் சுகிர்தன் கேள்வியெழுப்பினார். இதே போன்று பரஞ்சோதியும் தன்னால் அப்போது கொண்டுவரப்பட்ட போது முதலமைச்சர் மாற்றத்தை ஏற்படுத்தியதாகவும், எதிர்க்கட்சியினர் அதை எதிர்த்ததாகவும் கூறினார்.

எனினும் குறித்த பிரேரணையும் தற்போது கொண்டு வரப்பட்ட பிரேரணையும் மாறுபட்டது என எதிர்க்கட்சி தலைவர் தவராசா தெளிவு படுத்தியிருந்தார். குறித்த பிரேரணை அனைத்து மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும். வேறு இடங்களில் அனுமதி வழங்கிவிட்டு இன்னொரு இடத்தில் அதனை தடுப்பது ஏற்றுக்கொள்ள முடியாது என மீன்பிடி வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனிஸ்வரன் கோரியிருந்தார்.

உறுப்பினர்களான சிவநேசன், லிங்கநாதன், ஆகியோர் குறித்த நடைமுறை வரவேற்கத்தக்கது எனவும், அதில் உள்ளவை இறுக்கமான நடைமுறைக்கு வர வேண்டும்எனவும்கூறியிருந்தனர். மேலும் தென்னிலங்கை கள்ளை பரிசோதித்து பார்த்த பின்னர் முடிவு எடுக்கலாம் என உறுப்பினர் சிவயோகம் தெரிவிதநார். அவர் இவ்வாறு கூறியதும், உறுப்பினர்கள் அனைவரையும் கள்ளு குடிகக வலியுறுத்துகிறீர்களா? எனக் கூறி சிரிப்பொலி எழுந்தது.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த அமைச்சர் ஐங்கரநேசன், வடக்கில் போதைப் பொருள் வர்த்தகத்தின் பின்னால் மிகப்பெரிய மாபியா வலையமைப்பு காணப்படுகின்றது. எங்கள் தொழிலாளிகளை வேண்டுமென்றே பிரச்சினைகளில் சிக்க வைத்து, ஜனாதிபதியிடம் சில அதிகாரிகள் விருதுகள் பெறுகின்றனர்.

இதுதான் இங்குள்ள நிலை என தெரிவித்தார். இதன் பின்னர் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (இ-4)



## சத்திய தரிசனம்

### பதற்றமும் பயமும் வேண்டாமே

❖ அன்றன்று சாப்பிடும் உணவை வயிறு செரித்து விடுவது அவசியமானதைப் போல, ஒவ்வொரு நாளும் கேட்கும் சிந்தனைகளை உள்வாங்கி அன்றே நடைமுறைப்படுத்துவதில் அக்கறை கொள்ள வேண்டும். இத்தகைய நல்ல நெறிமுறைகளைப் பின்பற்றினால் உடலும் உள்ளமும் மிக ஆரோக்கியமாக இருக் கும்.

❖ ஒருவர் தன் வாழ்வில் வரும் கஷ்டநஷ்டங்களை மறந்து விட வேண்டும். அவற்றை விடாது பற்றிக் கொண்டிருந்தால், வாழ்க்கை பயனுள்ளதாக அமையாது. நம் மனத்தில் எழும் பதட்டம், பயம் ஆகியவை உடனுக்குடன் நீக்கப்பட வேண்டும்.

❖ கடவுளை அடைய வேண்டும் என்று அரை மனதுடன் இறங்குவது வெற்றி தராது. அது சேற்று நிலத்தில் செல்லும் நீரோடையில், தூய்மை பெற நீராடியது போலாகும். நீரின் பாய்ச்சல் மெதுவாக இருக்கும் போது சேறு அகலாது.

❖ முழுமையாக கடவுள் மீது மனம் ஈடுபட்டால் தான் அவரை அடைய முடியும்.சந்தனக் கட்டையை சமைய லுக்கு எரிப்பதைப் போல நாம் காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறோம். இம்மனிதப்பிறவி சத்தியத்தை நாம் அறியக்கொடுக்கப்பட்ட வாய்ப்பாகும். ஆனால், நாம் அற்ப விடயங்களில் மனதைச் செலுத்தி உடலையும், உள்ளத்தை யும் பாழ்படுத்திக் கொண்டிருக்கிறோம். இதைத் தவிர்க்க வேண்டும்.

# வடக்கின் சுப்பர்கிங் உதைபந்தாட்ட தொடர்

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங் பட்டத்திற்கான உதைபந்தாட்ட தொடரில் அரை இறுதிப் போட்டிக்கு திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம், கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம், மன்னார் கில்லறி விளையாட்டுக்கழகம் மற்றும் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம் தகுதி பெற்றுள்ளன.

## கிளிநொச்சி உருத்திரபும்



"வடக்கின் சுப்பர்கிங்" தொடரின் விலகல் முறை சுற்றில் மகாத்மா அணியை 4-0 என வீழ்த்தி லீக் சுற்றுக்குள் நுழைந்தது.

லீக் சுற்றில் சென்.லூட்ஸ் அணியுடன் 2-1 என போராடி தோல்வியடைந்தும் திக்கம் இளைஞர் அணியுடனான போட்டியில் அபாரமாக ஆடி 0-4 வென்று குழுவில் 1ஆம் இடத்தை பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது.

கிளிநொச்சியின் தனியொரு அணியாக களமாடும் உருத்திரபுரம் அணியை பொறுத்த வரையில் யாழ்.மண்ணில் தற்போது தமது பலத்தை மெல்ல மெல்ல நிரூபித்து வருகிறார்கள். அனுபவ வீரர்களுடன் இளம்வீரர்களும் இணைந்து வேகமான ஆட்டத்தினை வெளிப்படுத்தும் இவ்வணி காலிறுதியில் குறிஞ்சிக்குமரன் அணியுடானான போராட்டம் சமநிலையில் முடிய தண்ட உதையில் 6-5 என வெற்றிபெற்று அரைஇறுதிக்குள் நுழைந்தது.

உருத்திரபுரம் அணியின் வீரர்கள் சிறப்பான மிக வேகமான ஓட்டத்துடன் கூடிய ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றதால் இந்த அரைஇறுதிப்போட்டியும் ரசிகர்களுக்கு விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

அரைஇறுதியில் யங்ஹென்றீஸ் அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழகம். (கு)

## இளவாலை யங்ஹென்றீஸ்



"வடக்கின் சுப்பர்கிங்" தொடரின் விலகல்முறை சுற்றில் மனோகரா அணியை வீழ்த்தி லீக் சுற்றுக்குள் நுழைந்தது.

லீக் சுற்றில் விக்கினேஸ்வரா அணியை 3-1 என வென்றும், கில்லறி அணியுடனான போட்டி சமநிலையடைந்ததால் கோல்புள்ளி அடிப்படையில் குழுவில் 2 ஆம் இடத்தை பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது.

காலிறுதியில் சென்.மேரிஸ் அணியுடனான பலப்பரீட்சை 2-2 என சமநிலையாக. வெற்றியை தீர்மானிக்கும் தண்ட உதையில் வெற்றிபெற்று அரைஇறுதிக்கு தெரிவாகியுள்ளது.

வலிகாமத்திலிருந்து தனியொரு அணியாக யங்ஹென்றீஸ் அணியை பொறுத்தவரையில் முற்றிலும் இளம்வீரர்களின் சோர்வு இல்லாத துடிப்பான ஆட்டமே வெற்றிக்கு முக்கியமான காரணம். காலிறுதியில் சென்.மேரிஸ் அணியுடனான ஆட்டம் அபாரமானது. இத்தொடரில் யங்ஹென்றீஸ் அணியின் இளம்வீரர்கள் எதிர்த்தாடிய பல அணிகளின் அனுபவ வீரர்களையே திணறடித்தனர் என்பதே உண்மை.

சமகாலத்தில் யங்ஹென்றீஸ் அணியின் வீரர்கள் யூட்சுபன், மதுசன்.தனேஸ், மகி உட்பட அனைத்து வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடதக்கது. எனவே அரைஇறுதிப் போட்டி ரசிகர்களுக்கு விருந்தாக அமையும் என்ப்தில் ஐயமில்லை.

அரைஇறுதியில் கிளிநொச்சி உருத்திரபுரம் அணியுடன் ருத்ரமாட காத்திருக்கிறது இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம். (கு)

## மன்னார் கில்லறி



"வடக்கின் சுப்பர்கிங்" தொடரின் விலகல் முறை சுற்றில் யூனியன் அணியை 5-2 என வீழ்த்தி லீக் சுற்றுக்குள் நுழைந்தது.

லீக் சுற்றில் விக்கினேஸ்வரா அணியுடன் 3-4 என போராடி வெற்றிபெற்று, யங்ஹென்றிஸ் அணியுடனான போட்டி 0-0 சமநிலையில் முடிய குழுவில் 1 ஆம் இடத்தை பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது.

மன்னாரின் தனியொரு அணியாக களமிறங்கியுள்ள கில்லறி அணியை பொறுத்தவரையில் யாழ். மண்ணில் தமது திறமையை பல தொடர்களில் நிரூபித்துள்ளனர். அனுபவ வீரர் றஞ்சன் அவர்களுடன் இளம்வீரர்களும் இணைந்து நுட்பமான ஆட்டத்தினை வெளிப்படுத்தும் இவ்வணி காலிறுதியில் அன்னை அணியினை 4-0 என இலகுவாக வீழ்த்தி அரைஇறுதிக்குள் நுழைந்தது.

இலங்கையின் பல பாகங்களில் விளையாடி அனுபவமிக்க கில்லறி அணியின் வீரர்கள், நுட்பமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றதால் இந்த அரைஇறுதிப் போட்டியும் ரசிகர்களுக்கு விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

யாழின் பல தொடர்களில் இறுதி மற்றும் அரைஇறுதிக்குள் நுழைந்தும் அவர்களின் கிண்ணம் வெல்லும் வாய்ப்பு துரதிர்ஷ்டமாகவே உள்ளது. எனவே கிடைத்த இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தமது கனவை நனவாக்குவார்களா? என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.

அரைஇறுதியில் திக்கம் இளைஞர் அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது மன்னாரின் கில்லறி விளையாட்டுக்கழகம்.(கு)

## திக்கம் இளைஞர்




"வடக்கின் சுப்பர்கிங்" தொடரின் விலகல் முறை சுற்றில் கொலின்ஸ் மற்றும் கலைவாணி அணிகளை வீழ்த்தி லீக் சுற்றுக்குள் நுழைந்தது.

லீக் சுற்றில் உருத்திரபுரம் அணியுடன் 0-4 என தோல்வியடைந்தும் சென்.லூட்ஸ் அணியுடனான போட்டியை 0-3 வென்றும் கோல்புள்ளி அடிப்படையில் குழுவில் 2 ஆம் இடத்தை பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது.

காலிறுதியில் றோயல் அணியுடனான போட்டியில் 3-2 வெற்றிபெற்று அரைஇறுதிக்கு தெரிவாகியுள்ளது.

வடமராட்சியிலிருந்து தனியொரு அணியாக கலக்கி வரும் திக்கம் இளைஞர் அணியை பொறுத்தவரையில் கடந்தகாலத்தில் பெரிதும் சோபிக்காத நிலையில் தற்போது இவர்களின் வேகமான பந்துப்பரிமாற்றத்துடனான ஆட்டம் வரவேற்கத்தக்கது. காலிறுதியில் றோயல் அணியுடனான ஆட்டம் வியக்கத்தக்கது. சமகாலத்தில் 7 பேர் கொண்ட தொடரில் அசத்திவரும் றோயல் அணியை 3-2 என வீழ்த்தி வியப்பளித்தது.

இளைஞர் அணியின் தீபன் மற்றும் ஹரி உட்பட வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றதால் அரைஇறுதிப் போட்டி ரசிகர்களுக்கு விருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

அரைஇறுதியில் மன்னார் கில்லறி அணியுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் (கு)

## FA கிண்ண உதைபந்தாட்டம்
## நாவாந்துறை சென்.மேரிஸ் வெற்றி

FA கிண்ண உதைபந்தாட்ட தொடரில் (27.12.2016) நடைபெற்ற போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து முத்தமிழ் விளையாட்டுக்கழகம் மோதியது. மிகவும் பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் 3:0 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (கு)



## புதிய அரசியல...

னால், அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான அரசை அமைக்கட்டும். ஐக்கிய தேசிய கட்சிகாரர்கள் தங்கள் தலைமையிலான அரசை அமைக்கட்டும். தமிழ் முற்போக்கு கூட்டணி உரிய முடிவை அப்போது எடுக்கும் அல்லது புதிய பொது தேர்தலுக்கே செல்வோம். நாம் எதற்கும் தயார். ஆனால் இப்போது தேசிய அரசு நீடிக்க வேண்டும். அதை உடைத்து மகிந்தவுக்கு உதவிசெய்து டீல் டிலான் ஆக வேண்டாம் என நண்பர் டிலான் பெரேராவை கேட்டுக் கொள்கிறேன் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஊடக மாநாடு நேற்று மலைநாட்டு புதிய கிராமங்கள் தோட்ட உட்கட்டமைப்பு சமூக அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்றது. கூட்டணியின பிரதி தலைவர் அமைச்சர் பழனி திகம்பரத்துடன் ஊடகவியலாளர்களை சந்தித்த அமைச்சர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

பசில் ராஜபக்ஷவுடன் ஐ.தே.கவுக்கு டீல் இருப்பதாக அமைச்சர் டிலான் சொல்லி வருகிறார். ஆனால், பார்க்கப்போனால் அவருக்கு தான் அங்கே டீல் இருக்கிறதோ என்ற சந்தேகம் எமக்கு எழுகிறது. அவர்தான் டீல் டிலானோ என்று கேட்க விரும்புகிறேன். டிலான பொதுவாக சிறுபான்மை மக்கள் தொடர்பில் அக்கறை உள்ளவராக தன்னை காட்டிக்கொள்கிறார். அது நல்லது. இனப்பிரச்சினைக்கு சமஷ்டி தீர்வைக்கூட அவர் வலியுறுத்தியுள்ளார். அதுவும் நல்லது. ஆனால், நடைமுறையில் புதிய அரசியலமைப்பு வரும்வரைக்கும் கூட இந்த இந்த அரசை விட்டு வைக்க அவர் தயார் இல்லை. இப்போது இருக்கின்ற இந்த அரசும் போய் விட்டால், இனி எந்த அரசாலும் தீர்வு ஒன்றை கொண்டு வரமுடியுமா? அதனால்தான், நாம் இந்த அரசை காப்பாற்ற விளைகிறோம்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை விட ஐக்கிய தேசிய முன்னணிக்கே பாராளுமன்றத்தில் ஆசனம் அதிகம். ஆகவே அவர்களுக்கு தான் தனியாக ஆட்சியை அமைக்க வாய்ப்புகள் அதிகம். ஆனாலும், நாம் அதை இப்போது விரும்பவில்லை என்பதை பொறுப்புடன் கூறி வைக்க விரும்புகிறோம். ஏனெனில் இந்த இரண்டு கட்சிகளும் ஒற்றாக இருந்தால்தான் அரசியல் சித்து விளையாட்டுகள் நின்று புதிய அரசியலமைப்பு வர வாய்ப்பு ஏற்படும். ஆகவே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அமைச்சர்கள் எஸ்.பி. திசாநாயக்க, டிலான் பெரேரா போன்றோர் எச்சரிக்கையாக நடந்துக்கொள்ள வேண்டும். இன்றைய உங்கள் கட்சி தலைவரை நாம்தான் இந்த நாட்டின் ஜனாதிபதியாக ஆக்கியுள்ளோம். 2015-ம் ஆண்டு ஜனவரி 8-ம் திகதி நாம் இந்த புரட்சியை ஏற்படுத்திய போது நீங்கள் வேலியின் அந்த பக்கத்தில் இருந்தீர்கள். இப்போது உள்ளே வந்து திடீர் பாசத்தை ஜனாதிபதியின் மீது பொழிகிறீர்கள். இதை மறந்துவிட வேண்டாம் என மனோ கணேசன் தனது கருத்தை தெரிவித்துள்ளார். (செ-11)

## மக்கள் சேவையை...

சபை தாமதமாக தெரிவு செய்யப்பட்டிருந்தாலும், குறுகிய காலத்திற்குள் பல வெற்றிகளை கண்டுள்ளது. மக்கள் எமக்கு சம்பளம் வழங்குகின்றனர். எனவே அவர்கள் தேவைகளை அடுத்த வருடம் இன்னும் அதிகளவில நிறைவேற்றுவோம் என நாம் அனைவரும் திடசங்கற்பம் கொள்வோம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மாகாண சபை உறுப்பினர்களிடமும், அதிகாரிகளிடமும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் இந்த வருட நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் யூ.எஸ் ஹோட்டலில் மதிய உணவு விருந்துபசாரம் ஒன்று நேற்றைய தினம் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹோட்டல் பல கூட்டங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் பிரசித்தி பெற்றதாகும். அது தொடர்பில் நான் இங்கு பேசவில்லை.

தற்போது எல்லாவற்றையும் மறந்து நாம் அனைவரும் ஒன்று கூடியுள்ளோம். இதே போன்று ஒருநாள் எம்மனைவரிடையேயும் ஒற்றுமை ஏற்படும். ஏனைய மாகாண சபைகள் போன்றல்லாது எமது மாகாண சபை குறுகிய காலத்திலேயே ஏற்படுத்தப்பட்டது. அதே குறுகிய காலத்திற்குள் எமது மாகாண சபையை செயற்திறன் மிக்கதாக மாற்ற வேண்டும். பல விடயங்களில் நாம் சற்று தாமதப்பட்டாலும் செயற்பாடுகள் தற்போது விரைவாக நடைபெறுகின்றன.

எதிர்வரும் வருடத்தில் எல்லாவற்றையும் மறந்து நாம் அனைவரும் அதிகாரிகள் உட்பட அனைவருடனும் சிறப்பாக செயற்படுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. மக்கள் எமது வேலைக்காக அவர்களது வரிப் பணத்தில் சம்பளம் தருகின்றனர். எனவே அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றும் பொறுப்பு எமக்கு உண்டு. அந்த மக்களுக்கான சேவைகளை அடுத்த வருடம் இன்னும் திறம்பட செய்வோம் என தனது உரையில் முதலமைச்சர் கூறியிருந்தார். (செ-4)

## வடக்குசபை...

இதன்போது வடக்கின் எல்லை கிராமங்களில் குடியிருக்கும் மக்களுக்கு உதவிகள் எவையும் கிடைக்காமையால் தொடர்ந்தும் அவர்கள் அங்கு குடியமர முடியாத நிலை காணப்படுகின்றது. அங்கு வாழும் தமிழர்கள் வேறு இடங்களுக்கு சென்று விட்டால், சிங்களவர்கள் எல்லை கிராமங்களை ஆக்கிரமித்து விடுவார்கள். எனவே எல்லை கிராமத்தில் வாழும் மக்களுக்கு வடக்கு சபை உதவித்திட்டங்களை வழங்க வேண்டும் என்ற பிரேரணை ஒன்றை உறுப்பினர் ரவிகரன் முன்மொழிந்திருந்தார்.

இது தொடர்பில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் உறுப்பினர் ரவிகரனால் கொண்டு வரப்பட்ட பிரேரணைக்கு நான் பூரண ஆதரவினை தெரிவித்து கொள்கின்றேன். எனினும் இந்த விடயங்கள் நிர்வாக ரீதியாக தீர்க்கப்பட வேண்டியவை. இவை பிரேரணையாக கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை. நிர்வாக ரீதியாக தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் பிரேரணையாக கொண்டுவருவதற்கு காரணம், முதலமைச்சர், அமைச்சர்களிடையே புரிந்துணர்வு இல்லாமையே. எனவே இவ்வாறான விடயங்களை கையாள்வதற்கு ஒரு பொறிமுறை அவசியம். அமைச்சர்கள் மற்றும் முதலமைச்சர் தமக்கு கீழ் உள்ள அலுவலர்களிடம் செய்ய வேண்டியவற்றை கூறி வேலை செய்விக்க முடியும். கொள்கை ரீதியான விடயங்கள் பிரேரணையாக கொண்டு வரப்பட முடியும். இது தொடர்பில் அடுத்த வருடமாவது கவனம் செலுத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியிருந்தார்.

மேலும் முதலமைச்சர், அமைச்சர்கள் அதிகாரிகளின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளுக்காக திட்டமிடல் சபை ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இதன் மூலமே சிறந்த அபிவிருத்தியை நோக்கி வடக்கு மாகாண சபை பயணிக்க முடியும். இதனை நான் கடந்த மூன்று வருடங்களாக கோரி வந்துள்ளேன். ஆனால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என உறுப்பினர் லிங்கநாதன் கூறியிருந்தார். (செ-4)

## 337 பிரேரணை...

வலியுறுத்தி கூறியுள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் இந்த வருடத்திற்கான இறுதி அமர்வு நேற்றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இதன்போது விவசாய அமைச்சருடைய பிரேரணை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே உறுப்பினர் அனந்தி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையின் கடந்த மூன்று ஆண்டு காலத்தில் 337 பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவ்வாறு நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளில் எத்தனை பிரேரணை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது? எத்தனை நடவடிக்கை எடுக்கப்படாமல் உள்ளது என்பது தொடர்பில் யாருக்கும் தெரியாது.

எனவே இந்த அனைத்து பிரேரணைகளும் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தி இருந்தார். இதன் பின்னர் கருத்து தெரிவித்த உறுப்பினர் சர்வேஸ்வரன், கடந்த ஆண்டுகளில் நாம் கொண்டுவந்த தீர்மானங்கள் பெருமளவு நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளன. அவற்றை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு உறுப்பினர்களை கொண்ட ஒரு விசேட குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். தனியே பிரேரணைகளை நிறைவேற்றிவிட்டு போவதாக இருக்கக் கூடாது.

அது இந்த உயரிய சபையை அவமதிக்கும் செயலாகும் எனவும் கூறினார். எம்மால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளுக்கு என்ன நடைபெற்றது? எந்த நிலையில் தற்போது உள்ளது? என்பது தொடர்பில் அவைத் தலைவர் தெளிவுபடுத்த வேண்டும். என உறுப்பினர் சிவயோகமும் கூறியிருந்தனர். எனினும் இதற்கு அவைத்தலைவர் நேற்றைய தினம் எந்த பதிலையும் உடனடியாக வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

## உலகின் வீரம் மிகு...

வித்துள்ளார்.

கிளிநொச்சி பொதுச்சந்தையில் ஏற்பட்ட தீவிபத்தினால் அழிவுக்குள்ளான கடை உரிமையாளர்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சினால ஒதுக்கபட்ட 74 மில்லியன் ரூபா நட்ட ஈடு வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஜனாதிபதி மற்றும் பிரதமர் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினரோடு இணைந்து நல்லாட்சி பயணம் ஒன்றை மேற்கொண்டு இருக்கின்றனர். வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வியலை கட்டியெழுப்புவதே அரசாங்கத்தின் நோக்கம். நாங்கள் தேர்தல் வாக்குகளை நோக்கி இவற்றை செய்யவில்லை இந்த நட்டஈட்டை நாங்கள் பெற்றுதருவதற்கு பல முயற்சிகள் மேற்கொண்டோம். சில துரோகிகள் எங்களை துரோகிகள் என்கிறார்கள்.

கடந்த ராஜபக்ஷ காலத்தில் இங்கு என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். நேர்மையாக செய்யப்பட்ட கிராம சேவையாளர்களை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆதரவாளர் என்று கூறி வேலையில் இருந்து நீக்கினார்கள். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு ஆதரவாளர்கள் எனக்கூறி அரசாங்கம் வழங்கிய மின்சாரங்களை சில கிராமங்களுக்கு நிறுத்தினார்கள். ஆனால் இன்று இவர்கள் தாங்களை தலைவர்களாக காட்ட முயற்சிக்கிறார்கள்.

இலங்கையிலும் உலகத்திலும் உள்ள மிகச்சிறந்த வீரமிக்க தலைவர் வல்வெட் டித்துறை மண் தந்த பிரபாகரனே. இலங்கையிலும் உலகத்திலும் உள்ள தலைவர்களில் வீரமும் தீரமும் மிக்க முதன்மையான தலைவராக பிரபாகரன் விளங்குகிறார்.

எங்களுடைய கடந்தகால ஜனாதிபதிகளுடன் ஒப்பிடுகையில் பிரபாகரன் போல் ஒரு தலைவரை தேர்ந்தெடுக்கவே முடியாது. இன்று அவர் எம்மோடு இருந்திருந்தால் மிகவும் முக்கியமானவராகவே இருந்திருப்பார். ஆனால் எங்களுக்கு துரதிஷ்டவசமாக அந்த பாக்கியம் கிடைக்கவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து வைத்த அழிவை மகிந்த ராஜபக்ஷ முடித்து வைத்ததாக இங்கு சில அரசியல்வாதிகள் பேசுகின்றனர். ஆனால் அவ்வாறு இனவாதம் பேசுவதனால் எங்களுக்கு கிடைப்பதும் கிடைக்காது போய்விடும். இப்படி இனவாதம் பேசாது இந்த நல்லாட்சி அரசின் மூலம் எதை பெற்றுக்கொள்ள முடியும் எதை பெற்றுக கொள்ள முடியாது என்பதை அறிந்து செயற்பட வேண்டும்

தெற்கிலும் சரி வடக்கிலும் சரி இனவாதம பேசுவதனால் எமது சந்ததிதான் பாதிப்படைகிறது. எமது நல்லாட்சியில் மக்களுக்கான நல்ல விடயங்களே இடம்பெற்று வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9,312)

## இளைஞர் ஒருவர்...

நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் அவா வசித்து வந்த வீட்டின் அறையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட சடலமானது பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-30)

## தொண்டர்...

அவ் வேளையில் மாலை 4 மணியளவில் தொண்டர் ஆசிரியர்களின் பிரதிநிதிகளை அழைத்த ஆளுநர், குறித்த நியமனங்கள் தொடர்பாக கல்வி அமைச்சில் அனைத்து செயற்பாடுகளும் நடைபெற்று வருகிறது. ஆனால் குறிப்பாக ஒரு திகதியை கூற முடியாது. இருப்பினும் இந்த நியமன விடயம் தொடர்பாக மேலதிகமாக எதிர்வரும் 4ஆம் திகதி யாழ்.வரும் ஜனாதிபதியிடம் உங்கள் கோரிக்கையை நேரடியாக முன்வைக்க ஏற்பாடு செய்து தருவதாகவும் அது வரை போராட்டத்தை கைவிடுமாறு கோரியிருந்தார்.

இதனையடுத்து ஆளுநரின் கோரிக்கையை ஏற்ற தொண்டராசிரியர்கள் தற்காலிகமாக தமது போராட்டத்தினை கைவிட்டுள்ளதாக அறிவித்துள்ளனர். (செ-9)

## காலத்தின் தேவையாக...

க்கில் இடம்பெற்ற எழுக தமிழ் பேரணியில் தான் பங்கேற்கவில்லை என தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நடக்கின்ற தற்கால நிலைமைகளை பார்த்தால் மக்கள் எழுச்சி கொள்கின்ற இதுபோன்ற போராட்டங்களில் நாமும் பங்கு பற்றும் தேவை எழலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு எழுக தமிழ் பேரணியை நடத்தக்கூடாது என்றோ அதில் எவரும் பங்கு பற்றக் கூடாது என்றோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தடுக்கவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் எழுக தமிழ் பேரணி பேரெழுச்சியாக இடம்பெற்றுள்ள நிலையில் குறித்த பேரணி எதிர்வரும் ஜனவரி மாதம் மட்டக்களப்பிலும் இடம்பெறவுள்ளது.

இது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பாக சிறீதரன் எம்.பியிடம் சர்வதேச ஊடகமொன்று வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் கடந்த செப்டெம்பர் மாதம் 24 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற எழுக தமிழ் பேரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச சேர்ந்தவர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இந்த ஆண்டு இறுதிக்குள் அரசாங்கத்துடன் அரசியலமைப்பு மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட சில விடயங்கள் குறித்து பேசிக்கொண்டிருப்பதால் அரசாங்கத்திற்கு ஒரு முகத்தையும் தமிழ் மக்களுக்கு மற்றுமொரு முகத்தையும் காட்ட முடியாது.

இந்த ஆண்டுக்குள் தீர்வைப் பெறுவதற்கான முயற்சியை தாங்கள் முன்னெடுத்து செல்வதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் குறிப்பிட்டதற்கமைய, இரண்டு முகங்களைக் காட்டக்கூடாது என்பதற்காகவே இந்த எழுக தமிழ் பேரணியில் நாம் பங்கேற்கவில்லை.

ஆனால் எழுக தமிழை நடத்தக்கூடாது என்றோ அதில் யாரும் பங்குபற்றக்கூடாதென்றோ நாங்கள் தடுக்கவில்லை.

எதுஎவ்வாறு இருப்பினும் எதிர்வரும் காலங்களில் அவ்வாறான விடயங்களில் நாங்கள் பங்குபற்ற வேண்டிய, தமிழர்கள் எழுச்சி கொள்கின்ற இதுபோன்ற போராட்டங்கள் இடம்பெற வேண்டிய தேவையும் எழலாம்.

அவ்வாறான போராட்டங்கள் மூலமே வடக்கு கிழக்கு இணைந்த தமிழ் மக்களுக்கான தீர்வை அடைவதற்கான சூழல் உருவாக்கப்படும் என்றால் அவ்வாறான போராட்டங்களுக்கான முயற்சிகளை ஏற்பாட்டுக்குழுவுடன் இணைந்து முன்னெடுக்க நாமும் தயார் எனவும் அவர் கருத்து வெளியிட்டார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள எழுக தமிழ் பேரணி குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பாக கேள்வி எழுப்பியபோது இதற்கு பதிலளித்த அவர், கிழக்கு மாகாணத்தில் எழுக தமிழ் பேரணி இடம்பெறவுள்ளமை குறித்து ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொண்டோம்.

பேரணியை ஏற்பாடு செய்து வரும் தமிழ் மக்கள் பேரவை உறுப்பினர்கள் தாம் சார்ந்த கட்சிகளை முன்னிலைப்படுத்தாது, அங்கு இடம்பெறும் செயற்பாடுகள் தமிழ் மக்களுக்கான தமிழ் மக்கள் பேரவையினுடைய செயற்பாடாக மாத்திரம் இருந்தால் அது தொடர்பாக பரிசீலிப்பதற்கு தயாராக இருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் இதன்போது குறிப்பிட்டார். (செ-11)

## மாவா...

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் வழி நடத்தலில் வவுனியா - மன்னார் வீதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் வீதிச் சோதனை நடவடிக்கையின் போது 03. கிலோவும் - 491. கிராமும் நிறையுடைய மாவா எனப்படும் போதைப் பொருள் கலந்த பாக்கு கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் நபர்ஒருவருமகைது செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருளையும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரையும் வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை வவுனியா பொலிஸார் மேற் கொண்டுள்ளதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-15)

## ஒரு கிலோ கஞ்சா...



இரகசிய தகவலையடுத்து பருத்தித்துறை – யாழ்ப்பாண வீதியில் உள்ள மாலு சந்தியில் பொலிஸார் திடீர் சுற்றிவளைப்பினை மேற்கொண்டனர்.

அப்போது சந்தேகத்திற்கிடமான பொதி ஒன்றுடன் நின்றிருந்த இளைஞரை சோதனையிட்டபோது அதற்குள் கஞ்சா இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

கஞ்சாவினை எடுத்துவந்த நபர் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞர் எனப் பொலிசார் தகவல் தெரிவித்தனர்.

இதேவேளை நெல்லியடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கஞ்சா கைப்பற்றப்பட்டது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.(செ-60)




நல்லை க.கண்ணதாஸ் அவர்களின் சீடனும்
வேய்ங்குழல் வித்துவான் திரு.ஜீ.எஸ்.
வசந்தகுலசிங்கத்தின் பேரனும்
யாழ்.இந்துக் கல்லூரி மாணவனுமாகிய
செல்வன்
ருக்மிணிகாந்தன் சாரங்கன்
அவர்களின்

**மிருதங்க அரங்கேற்றம்**



தலைவர் : செந்தமிழ் சொல்லருவி திரு.ச.லலீசன்
பிரதி அதிபர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

பிரதம விருந்தினர்: திரு.ஐ.தயானந்தராஜா
அதிபர், யாழ் இந்துக் கல்லூரி

சிறப்பு விருந்தினர்கள் :
கலாபூஷணம், இசைத்தென்றல் ம.யேசுதாசன்
இசைத்துறைப் பொறுப்பாளர், திருமறைக் கலாமன்றம்

தண்ணுமை வேந்தன் திரு.மா.சிதம்பரநாதன்
முன்னாள் விரிவுரையாளர், இசைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்

திரு.எம்.ஆர்.ராஜ்மோகன்
சட்டத்தரணி, சிரேஷ்ட சுங்கப்பணிப்பாளர்

மதிப்பீட்டுரை : திருமதி சுகன்யா அரவிந்தன்
விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்: திரு.ஜி.வி.இராதாகிருஷ்ணன்
ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர், தீவகம்

அணிசேர் கலைஞர்கள்
பாட்டு - முதுதத்துவமாணி திரு.தவநாதன் றொபேட்
வயலின் - இசை ஞானச்சுடர் திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம் - செல்வன்.ருக்மிணிகாந்தன் சாரங்கன்
கெஞ்சிரா - கலைமாணி பிரம்மஸ்ரீ சிவசுந்தர சர்மா
முகர்சிங் - கலாவித்தகர் திரு.என்.சதீஸ்குமார்
கடம் - திரு.ஞானவேல் வசந்த்
தம்புரா - நுண்கலைமாணி திரு.க.ரஜீவன்

காலம் – 30.12.2016 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 04.00 மணி
இடம் – இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி
கலா மண்டபம், யாழ்ப்பாணம்

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

திரு.திருமதி வ.ருக்மிணிகாந்தன் - நகுலேஸ்வரி குடும்பத்தினர்
(7301)

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L 2019
கலை
வர்த்தகம்
தொழில்நுட்பம்
பிரிவு 1 ஆரம்பம்
01-01-2017
ஞாயிறு 9.00 மணி

போட்டிப் பரீட்சைகளுக்கான விசேட வகுப்புக்கள்
பிரிவு I சனி, ஞாயிறு தினங்களிலும் பிரிவு II ஏனைய நாட்களில் மாலை நேரமும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
- அரச முகாமைத்துவ உதவியாளர்
- காணி வெளிக்கள போதனாசிரியர்
- திறந்த பல்கலைக்கழக சட்டமாணி நுழைவு
- வங்கிசார் பரீட்சைகள்
- கணக்காளர் சேவை
- தொழில் அலுவலர்

(C-7046)
தொடர்புகளுக்கு
0766883394, 0212223362
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)

A/L 2019
கணக்கீடு
புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக புதிய பிரிவு
ஆரம்பம் 07.01.2017
சனி காலை
9.00 மணி
S.தவா
D.C.M

கண்ணீர் காணிக்கை



கணேசலிங்கம் கம்சுஜா

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் அங்கத்தவரும் கிருஸ்ணா பேக்கரி உரிமையாளராகிய திரு. மா.கணேசலிங்கம் அவர்களின் அன்பு மகள் கம்சுஜா அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள்
யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
(C-7049)

ECONOMICS HALL
நாவலர் வீதி, யாழ் நகர் (புகையிரத கடவை அருகில்)
A/L 2019
ஜனவரி 01 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி
கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்
குறிப்பு:- ● ஜனவரி 31 வரை அனுமதிக் கட்டணம் இலவசம்
● தனித்துவமான ஆசிரியர் குழுவின் அர்ப்பணிப்பான வழிகாட்டல்
(C-7008)

அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK – 550/= Kg
DELIVERY IN 3 - 5 DAYS
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226243
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி
● நெல்லியடி ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-6845)

FALC FRENCH LANGUAGE CENTRE
FOR THE BEST FRENCH FOREVER
பிரெஞ்சு மொழி வகுப்பு
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோருக்கான...
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French.
விரிவுரையாளர் : France இல் ஆசிரியப் பயிற்சி - 2007.
DELF A1, A2, B1 இல் 100 % சித்தி. இதுவரை 1173 மாணவர்கள்
No. 40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 07.01.17 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 09.01.17 திங்கள் 3.30pm.
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 Classes.
Bus நிலையம் → அரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre
(C-6777)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
பண்டிகைக்காலத்தில் உங்கள் உறவுகளுக்கு பெறுமதியான பொருட்களையும் கடிதங்களையும் விரைவாகவும் குறைந்த விலையிலும் அனுப்பிட
021 221 5656
070 330 5500
அண்ணா & கோ
976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
(C-7014)

DCM
A/L 2019
ஆரம்பம்:07.01.2017
யாழ்.நகரில் 9.00 am
சுன்னாகத்தில் 3.00 pm
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
D.C.M

கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்
கட்டடங்கள் கட்டுதல், வீடு கட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், சுற்றுமதில் கட்டுதல், குளியலறை கட்டுதல், மாபிள் பதித்தல், தச்சு வேலைகள் என்பவற்றுடன் Plumbing, Painting, Electrical works அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்திலும் செய்து கொடுக்கப்படும்.
AXSHAYA CONSTRUCTION, JAFFNA
தொடர்புகளுக்கு:- 0776679564 (J.K.VASAN) E.mail:-axshaya construction@gmail.com
(C-6793)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.